REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 டிசம்பர் 29 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN
1932 - 2022

வரு. 90 இல. 308 | Thursday 29, December, 2022 | 16 பக்கங்கள் | 50/-






## இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் 33 பில்லியன் ரூபா செலவில்

# அநுராதபுரம் - ஓமந்தை ரயில் பாதை புனரமைப்பு ஜன.05 முதல்

## 05 மாத காலத்துக்கு வடக்கு ரயில் சேவைகள் இடைநிறுத்தம்

### புனரமைப்பு பணிகள் நடைபெறும் காலத்தில் பயணிகளுக்கு மாற்று ஏற்பாடக இணைப்பு பஸ் சேவை - அமைச்சர் பந்துல

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வடக்கு ரயில் பாதை அபிவிருத் தித் திட்டம் எதிர்வரும் ஜனவரி (05) ஆரம்பமாகிறது. இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ், 33 பில்லியன் ரூபா செலவில் இத்திட்டம் நடைமுறைக்கு வருவதாக போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.இதுபற்றி அவர் தெரிவித்ததாவது,

அநுராதபுரம் ஓமந்தை வரையிலான ரயில் பாதை முழுமையாக அபிவிருத்தி செய்யப்படும்.இத்திட்டம் எதிர்வரும் ஜனவரி (05) முதல் ஆரம்பமாவதால்,05 மாத காலத்துக்கு அநுராதபுரம் வவுனியாவுக்கிடையிலான ரயில் பாதை முழுமையாக மூடப்படும்.

எனினும் ரயில் பயணிகளின் நலன் கருதி விசேட பஸ் சேவைகள் நடைமுறைப்படுத்தப்படும்.

அநுராதபுரத்திலிருந்து வவுனியா வரை பயணிப்பதற்காக, ரயில்வே திணைக்களம் விசேட பஸ் சேவைகளை ஏற்பாடு செய்துள்ளது.இதற்கான நேர அட்டவணையொன்றும் தயாரிக்கப்படும். இக்காலப் பகுதியில் வடக்குக்கான ரயில் சேவை அநுராதபுரம் வரை வழமை போன்று நடைபெறும்.

காங்கேசன்துறையிலிருந்து கிளிநொச்சி வரையான ரயில் சேவை இக்காலங்களில் வவுனியா வரை நடைபெறும்.

கல்கிஸ்சை, கொழும்பு கோட்டையிலிருந்து வடக்கு நோக்கி புறப்படும் யாழ்.தேவி ரயில் உட்பட அனைத்து 06



அம்பேவெல பால் பண்ணையின் புதிய பிரிவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று கண்காணிப்பு விஜமொன்றை மேற்கொண்டார். அம்பேவெல பண்ணைக் குழுமத்தின் பொது முகாமையாளர் சரத் பண்டார உட்பட அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர்.

## அம்பேவெல பால் பண்ணைக்கு 30 ஏக்கர் காணியை விடுவிக்கவும்

### நுவரெலியா G.A க்கு ஜனாதிபதி பணிப்பு

அம்பேவெல பண்ணைக்கு அருகாமையில் கைவிடப்பட்டுள்ள 30 ஏக்கர் காணியை, உடனடியாக அம்பேவெல பண்ணைக்கு விடுவிக்குமாறு நுவரெலியா மாவட்ட செயலாளர் மற்றும் ஆணையாளருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த 30 ஏக்கர் காணியை உடனடியாக அம்பேவெல பண்ணைக்கு வழங்கி, அபிவிருத்திக்குத் தேவையான வசதிகளை முன்னெடுக்குமாறும், இதனை மேய்ச்சல் நிலமாகப் பேணி, கறவை மாடுகளின் உணவுத் தேவையை வழங்கும் கட்டமைப்புடன் இணைக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

அம்பேவெல பண்ணைக்குச் சொந்தமான 06

## பிறக்கப் போகும் 2023 ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி?



பிறக்கப்போகும் 2023 ஆம் ஆண்டில் உங்கள் ராசிக்கு எவ்வாறான பலன்கள் ஏற்படப்போகிறது என்பதை கணித்துக் கூறுகிறார் தமிழ் நாட்டின் பிரபல ஜோதிட நிபுணர் ஸ்ரீமதி பாரதி ஸ்ரீதர்.

12 ராசிகளுக்கான பலன்கள் எதிர்வரும் 01 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை உங்கள் வாரமஞ்சரியில் வெளிவருகின்றன.

உங்கள் பிரதிகளுக்கு எங்கள் முகவர்களிடம் முன் கூட்டியே பதிவு செய்யுங்கள்.



## கொழும்பு, கம்பஹாவில் முட்டை விலை ரூ 55

### நேற்று முதல் விற்பனைக்கு வந்தது

03

## லிட்ரோ Gas போதுமான அளவு கையிருப்பில் உள்ளது

### மக்கள் அச்சப்படத் தேவையில்லை



நாடு முழுவதும் எதிர்வரும் நாட்களில் விநியோகிப்பதற்குத் தேவையான சமையல் எரிவாயு போதுமானளவு கையிருப்பில் உள்ளதாக, லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

சமையல் எரிவாயு தட்டுப்பாடு நிலவுமென்ற அச்சம் பொதுமக்களிடையே நிலவி வருவதையடுத்தே, சமையல் எரிவாயு விநியோகம் தொடர்பில் 06


## மருந்து விலை குறைப்பு தொடர்பில் விசேட குழு

மருந்து வகைகளின் விலைகளைக் குறைப்பது தொடர்பான பட்டியலை தயாரிப்பதற்கு விஷேட குழுவொன்றை நியமிக்குமாறு அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துடன் நடைபெற்ற கலந்துரையாடலிலே, அமைச்சர் இது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கியதாக சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க 06

### 152 பேரின் சட்டவிரோதப் பயணம்

## வியட்நாமிலிருந்து நாடு திரும்பியோர் மீது விசாரணை



வியட்நாம் கடல் எல்லையில் மீட்கப்பட்ட 303 இலங்கையரில்152 பேர் நேற்று முன்தினம் இரவு நாட்டுக்கு அழைத்துவரப்பட்டனர்.

இவர்கள் நேற்று தத்தமது வீடுகளுக்கு அனுப்பப்பட்டதாக குடிப்பெயர்வாளர்களுக்கான சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது. இவ்விலங்கையர், 06

### திரிபோஷா தடையின்றி வழங்கும் திட்டம்

## மூலப்பொருள் விநியோகத்துக்கென சுகாதார அமைச்சில் ஒப்பந்தம் கைச்சாத்து



பாலூட்டும் தாய்மார், கர்ப்பிணித் தாய்மார் மற்றும் நிறை குறைவான குழந்தைகளுக்கு தேவையான திரிபோஷாவை தடையின்றி வழங்கும் வேலைத் திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது. 06

## தேய்பிறையாகி அமாவாசையை நோக்கிச் செல்லும் கூட்டமைப்பு

### இருள் சூழப் போவது கட்சிக்கு மட்டுமல்ல தமிழ் மக்களுக்குமே

### TNA மீது ஜனாதிபதி சட்டத்தரணி K.V தவராசா கடும் பாய்ச்சல்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது தேய்பிறையாக மாறி அமாவாசையை நோக்கிச் செல்வது போலுள்ளது. இதனால் ஏற்படப் போகும் இருள், கட்சிக்கு மாத்திரமல்ல தமிழ் மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துமென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா தெரிவித்தார்.

'சூம்' செயலி ஊடாக (26) நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இதன் போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர், 06

## இணைய வழியூடாக ரூ.10 கோடி மோசடி

### முன்னாள் இராணுவ வீரர் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஒன்லைன் மூலமாக மின்சாரக் கட்டணத்தை செலுத்துவதற்கென, பாவணையாளர்களுக்கு இணையத்தள வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அதன் மூலம் 10 கோடி ரூபாவுக்கு அதிகமான பணத்தை மோசடி செய்துள்ள நபரொருவரை

குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர். இவ்வாறு மோசடி செய்துள்ள நபர், முன்னாள் இராணுவ வீரராவார். இவரை கொழும்புக்கு அண்மித்த பகுதியொன்றிலிருந்து குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் 06

## கிளிநொச்சி புதிய பஸ் நிலையம் விரைவில் மக்களிடம் கையளிப்பு



### துரித நடவடிக்கைக்கு அமைச்சர் பிரசன்ன பணிப்பு

சுமார் 94 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட கிளிநொச்சி புதிய பஸ் நிலையம் விரைவில் மக்களிடம் கையளிக்கப் படவுள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். இந்த பஸ் 06

## யாழ்.சென்ற லொறியுடன் முச்சக்கர வண்டி விபத்து

### இருவர் பலி, இருவருக்கு காயம்

**தலாவ குறூப், அநுராதபுரம் தினகரன் நிருபர்கள்**



அநுராதபுரம், தமுத்தேகம, கோன்வெவ பகுதியில் லொறியும், முச்சக்கர வண்டியுறும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 06

## போலி தகவல்களை வழங்கி வெளிநாடு செல்ல முடியாது

### தடுக்கும் வகையில் ஒப்பந்தம் கைச்சாத்து



**லோரன்ஸ் செல்வநாயகம்**

போலி தகவல்களை வழங்கி வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக செல்வோரை தடுக்கும் வகையில், வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் மற்றும் ஆட்களை பதிவு 06

## லண்டனில் பனை உற்பத்தி கண்காட்சி



இலங்கையில் பனை அபிவிருத்தி சபை நத்தார் காலத்தில் பதிவு செய்யப்பட்ட இங்கிலாந்து விநியோக நிறுவனமொன்று லண்டனிலுள்ள (Barnet)பார்னட் பிரதேசத்தின் ஸ்பைரிஸ் வர்த்தக மத்திய நிலையத்தில் (Spires Shoping Centere) LONDON ENS 5XY இல் விற்பனை பிரசார வேலை திட்டமொன்றையும் கண்காட்சியொன்றையும் நடத்தியது.

# நகர்வலம்



# நுரைச்சோலையில் போதைப்பொருள் விழிப்புணர்வு ஆர்ப்பாட்டம்

**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் நுரைச்சோலை பூலாச்சேனைக் கிராமத்தில் 100 ஆவது நாள் போதை ஒழிப்புத்திட்டத்தை முன்னிட்டு பாரிய விழிப்புணர்வு ஆர்ப்பாட்டமொன்று அப்பகுதி ஊர் மக்களால் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. ஜும்ஆ தொழுகையைத் தொடர்ந்து பள்ளிவாசலுக்கு முன்பாக விழிப்புணர்வு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

பூலாச்சேனை போதை ஒழிப்பு நிலையம் மற்றும் பூலாச்சேனை ஜும்ஆ மஸ்ஜித் நிர்வாக சபையினர் இணைந்து விழிப்புணர்வு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.



ஆர்ப்பாட்டத்தில் அதிகமான பொதுமக்களுடன் பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர். இதன்போது போதைக்கெதிரான வாசகங்களைக் கொண்ட பதாகைகளை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# புத்தளம் கட்டுமான சேவையாளர் சங்கத்தின் அங்குரார்ப்பண பொதுக்கூட்டம்

**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் கட்டுமான நிர்மாண சேவையாளர் சங்கத்தின் (மேசன் பாஸ்மார்கள் சங்கம்) அங்குரார்ப்பண பொதுக்கூட்டம் அண்மையில் புத்தளம் மர்ஹூம் கே.ஏ.பாயிஸ் ஞாபகார்த்த கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. மேசன் தொழிலாளர்களின் நலன்களுக்கு முக்கியத்துவம் வழங்குதல், தொழில்ரீதியாக அவர்கள் எதிர்நோக்கும் சவால்களுக்கு தீர்வுகளை பெற்றுகொடுத்தல் போன்ற விடயங்களை கருத்திற் கொண்டு இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



புத்தளத்தில் கட்டுமானத்தில் ஈடுபட்டுவரும் மேசன் தொழிலாளர்கள் என 350ற்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றனர்.

புத்தளம் இன்ஸீ சீமெந்து நிறுவன அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டமை விஷேட அம்சமாகும். புத்தளத்தில் நீண்டகாலம் கட்டுமான சேவைகளை வழங்கி வரும் மேசன் தொழிலாளர்கள் இதன்போது விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# இலங்கைக்கு வருகை தந்துள்ள ஓம் சரவணபவ சுவாமிகள்



இலங்கைக்கு வருகை தந்துள்ள ஓம் சரவணபவ சுவாமிகள் இன்று வியாழக்கிழமை மாலை 3.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணி வரை கொழும்பு புதுச்செட்டித் தெரு சீரடி சாய்பாபா ஆலயத்தில் பக்தர்களுக்கு ஆசி வழங்கவுள்ளார்.



வெல்லம்பிட்டி பிரன்டியாவத்த மன்ஹா சர்வதேச பாடசாலையின் வருடாந்த கலை நிகழ்ச்சி கொழும்பு மருதானை டவர் ஹோல் கலையரங்கில் பாடசாலை அதிபர் கே.எப். ஸஹ்ரா தலைமையில் நடைபெற்றது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்களையும் பரிசில்களை வாங்கி வைப்பதையும் பாடசாலை அதிபரையும் படத்தில் காணலாம்.

## தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில்

# பொன்மாலை பொழுது இசை நிகழ்ச்சி மியூசிக் எஸ்பிரஸ்

லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தமிழ் வெளியீடுகளான தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் ஊடக அனுசரனையில் இலங்கை ஒலிபரப்பு தென்றல் எப்.எம்.மின் அறிவிப்பாளரும், இலங்கையின் முன்னணி பாடகர் முஹம்மட் இர்பானின் ஏற்பாட்டில் பொன்மாலை பொழுது இசை நிகழ்ச்சி நாளை 30ஆம் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஆனந்த சமரகோன் கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசனை சபை உறுப்பினர் புரவலர் ஹாசீம் உமர் முன்னிலையில் இந்நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்ச்சிக்கு கௌரவ அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர்களும் லேக்ஹவுஸ் தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன நிகழ்ச்சி பணிப்பாளர் மயூரி அபயசிங்க, தமிழ் சேவை தென்றல் எப்.எம் பணிப்பாளர் ரத்னசிங்கம் கணபதிப்பிள்ளை, சந்தைப்படுத்தல் பணிப்பாளர் எம். எச். ஏ.எம் பத்மசிறி கலந்துகொள்ளவுள்ளதுடன் விசேட அதிதிகளாக தொழில் அதிபர்களான கே. பத்மநாதன், சப்ரி இப்திகார் அஹமட், முஹம்மட் இர்சார்ட், ஜெட்வே டொக்டர் அக்பர் அலி, முஹம்மட் ஜிஸ்தி பாஹ்மி,முஹம்மட் அஷ்ரப், முஹம்மட் இப்ராஹிம் சட்டத்தரணி, நவகுமரன் தேவராஜ், ஆனந்த குமார், சதீஸ் குமார் சிவலிங்கம், நவாவி மரிக்கார், சப்ரி இப்திகார் அஹமட், அஹமட் கபீர், எம். எஸ். கலீல்,சட்டத்தரணி சஹீட், அஹமெட் ரியாஸ், பிரியந்த பெரேரா, முஹம்மட் நவ்ஷாட், சிராஸ் மீராசாஹிப், முஹம்மட் நிசாம், முஹம்மட் அமீர், சமூக சேவகர்கள் டாக்டர் அப்துல் கையூம், டொக்டர் எம் சி பஹர்டீன் தேசகீர்த்தி லங்கா மேனி கௌசலதேவி கோவிந்த பிள்ளை, மற்றும் கூட்டுத்தாபன தமிழ் சேவை தென்றல் எப்.எம். மின் கட்டுப்பாட்டாளர் சட்டத்தரணி ஏ.எம்.தாஜுன், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை உறுப்பினர் ஜெயரஞ்சன் யோகராஜ் இன்னும் அறிவிப்பாளர்கள் கே.ஜெயகிரிஷ்ணா, பெரியசாமி சீதாராமன், ஏ எல் ஹிக்கம், இர்ஷாத் எ காதர், எம் ஐ .இல்யாஸ், நஸார்கான் ராதிகா வின்சன், அனுஷா மொறாயஸ், நாகபூசணி கருப்பையா, தயாளினி காயாம்பூ, கலையழகி வரதராணி அஹமத் நசீர், எஸ் எல் எம் ரிலா, முபாறக்,லுகஸ் திருச்செல்வம், ஜுனைட் எம் ஹாரீஸ், பஸ்ஹான் நவாஸ், தயாரிப்பாளர்களான மஹ்ரூப் முஹிடீன், கலைமகள் மகேந்திரன், ரின்சா ஹாரிஸ் ஜாவ்பர், முஹம்மட் ரலீன்,சி எம். எம். சுபையீர், இஸ்பஹான் ஸஹாப்டீன் ஆகியோரும் பல கலைஞர்களும் பங்குபெறவுள்ளனர்.

இந்நிகழ்ச்சிக்கு அனுமதி இலவசம் எனவே அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

# கனடா கவிஞர் உயிரவனுக்கு தமிழ்நாட்டில் தமிழ்மாமணி விருது

கனடாவிலிருந்து சென்னைக்கு இலக்கியப் பயணமாக வருகை தந்த பாட்டருவி உயிரவன் தமிழ்ப் பணியைப் பாராட்டி நந்தவனம் பவுண்டேசன் தமிழ் மாமணி விருது வழங்கி கௌரவித்துள்ளது

இனிய நந்தவனம் வாசகர் வட்டம் கல்வெட்டுப் பேசுகிறது, திங்களிதழ் இணைந்து ஏற்பாடு செய்திருந்த படைப்பாளர்கள் கலந்துரையாடல் நிகழ்வில் இவருக்கு நேற்று விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

எழுத்தாளர் வே. எழிலரசு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நந்தவனம் சந்திரசேகரன் அறிமுக உரையாற்றிட, பாட்டருவி உயிரவன் சிறப்புரையாற்றினார். வேணு குணசேகரன், முனைவர் ச. அமுதவல்லி, வழக்கறிஞர் பா.வே.கோ, கவிஞர் நிமோஷினி, கவிஞர் உமாபாரதி, உளநல ஆலோசகர் கே. நித்தியானந்தன், முனைவர் அன்பு சிவா, கவிஞர் எம்.ஜலாலுதீன், சிங்காரம் சுகுமாரன், கே.அன்பழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கவிஞர் சொர்ணபாரதி அனைவரையும் வரவேற்று நிகழ்ச்சியை ஒருங்கிணைத்திருந்தார்.



# புதிய முதலீட்டாளர்களுக்கு தடையாக இருக்கும் நிபந்தனையை நீக்கக் கோரல்

## சங்கவி திரைப்பட நிறுவனத்தின் தலைவர் துரைராசா சுரேஷ்



புதிய முதலீட்டாளர்களுக்கு தடையாக இருக்கும் நிபந்தனையை நீக்குமாறு சங்கவி திரைப்பட நிறுவனத்தின் தலைவர் துரைராசா சுரேஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவர் இந்த கோரிக்கையை இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தின் தலைவரை நேரில் சந்தித்து விடுத்துள்ளதுடன், இவர் இது சம்பந்தமாக எழுத்துமூலம் அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் தனது கோரிக்கை முன்வைத்துள்ளார்.

உலகத்தில் சினிமாத் துறையானது பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டு இருக்கின்ற வேளையிலும் இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் இத்துறையை விட்டு வேறு துறையை நாடி சென்று கொண்டிருக்கின்ற நிலையிலும் அநேகமான தியேட்டர்கள் இழுத்து மூடிக் கொண்டு வரும் நிலையிலும் கலையின் மீதும் சினிமாத்துறையின் மீதும் கொண்ட தீவிர நாட்டத்தால் நான் இத்துறைக்குள் பிரவேசித்துள்ளேன். இந்நிலையில் இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தாபனம் வெளிநாட்டு திரைப்பட நிறுவனங்களுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல் தொடர்பாக விதித்துள்ள பத்திரிகை விளம்பரத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குரிய விண்ணப்பப்படிவங்களையும் விபரங்களையும் மீளளிக்கப்படாத ஐம்பதாயிரம் ரூபாவை செலுத்தித் தான் பெற்றுக் கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே புதியவர்களுக்கு இத்துறைக்குள் பிரவேசிக்கத் தடையாக இருக்கும் இந்த நிபந்தனையை நீக்கி அரசாங்கம் கோருவது போல் புதிய முதலீட்டாளர்கள் வருவதற்கு வழியமைத்து கொடுக்குமாறு இவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# சமத்துவக் கட்சி அலுவலகம் திறப்பு

**கிளிநொச்சி குறூப் நிருபர்**

சமத்துவக் கட்சியின் வன்னி தலைமை அலுவலகம் வவுனியாவில் நேற்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரில் சென்ற் அன்ரனி ஒழுங்கை, கந்தசுவாமி கோவில் வீதியில் இல. 1454/1 என்ற முகவரியில் குறித்த அலுவலகம் நேற்று காலை திறந்து வைக்கப்பட்டது.

சமத்துவக் கட்சியின் தவிசாளர் சு. மனோகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பெயர் பலகையினை கட்சியின் தவிசாளர் திரை நீக்கம் செய்து வைக்க, அலுவலகத்தை கட்சியின் பொதுச்செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் நாடாவை வெட்டி திறந்து வைத்துள்ளார். இந்நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், வவுனியா தெற்கு பிரதேச சபையின் தவிசாளர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கிசோர், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் நடராஜன்,கட்சி பிரதேச சபை உறுப்பினர்கள், மத்திய குழு உறுப்பினர்கள், அமைப்பாளர், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



ஐக்கிய தேசிய கட்சியின் கிறிஸ்துமஸ் கொண்டாட்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பின்னர் ஏழை எளியவருக்கு சில உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பாலித்த ரங்கே பண்டார,எஸ். ஆனந்தகுமார் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

ஹெரோயின் போதைப்பொருளை தன்வசம் வைத்திருந்த ஒருவரை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர் 23 வயதுடைய அநுராதபுரம் பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கு அமைய அநுராதபுரம் யாழ்ப்பாண சந்தியில் நேற்று பகல் நடாத்திய சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து 11 கிராமும் 100 மில்லி கிராமும் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருளை வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பண்டார விஜேயகோன் உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.



Nihon Karate Do Jise Jiaku Sri Lanka கிளையினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை தேசிய கராத்தே சம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்ட கடவத்தை யோர்க் சர்வதேச பாடசாலை மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். இதில் கிசல் துலனித மற்றும் தினேத் துலங்க ஆகியோர் தங்கப் பதக்கங்களையும், ஜிதேஷ் பிரதீபநாதன், லிசோன் ஹெலித மற்றும் சிதேஷ் லகிந்து ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றுக் கொண்டனர்.

(படம்: ரஞ்சித் அசங்க)

## நாட்டின் மோசமான பொருளாதார வீழ்ச்சி

# தேர்தலுக்கு அதிக பணத்தை செலவிடும் காலம் இதுவல்ல

### நிதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவிப்பு

வரலாற்றிலேயே மிகவும் மோசமான பொருளாதார வீழ்ச்சிக்கு நாடு முகம் கொடுத்துள்ளது. தற்போது அரசின் மாதாந்த வருமானம் அரச சேவையாளர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கும், ஓய்வூதியம் வழங்குவதற்கும் மற்றும் சமுர்த்தி கொடுப்பனவு களுக்கும் மாத்திரமே போதுமானதாக உள்ளதென நிதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தற்போது காணப்படும் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்காக முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுட்டிக் காட்டிய அந்த அதிகாரி, அடுத்த வருடம் மார்ச் மாதமளவில் அதன் வெற்றிகரமான பலனை அடைய முடியுமென கூறினார்.

இவ்வாறான பின்னணியில் தேர்தலை நடத்துவதற்காக நிதியை ஒதுக்க முடியாதென்பதோடு, அவ்வாறு நிதி ஒதுக்கப்பட்டால் பொருளாதார வளர்ச்சிக்காக கடந்த ஆறு மாதங்களில் மேற்கொள்ளப் பட்ட திட்டங்கள் அழிந்து நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினை மேலும் தீவிரமடையுமெனவும் சுட்டிக் காட்டினார்.


இது தொடர்பாக தொடர்ந்து கருத்து தெரிவித்த அவ்அதிகாரி ,

தற்போது அரசின் மாதாந்த வருமானத்தில் 93,000 மில்லியன் ரூபா அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கவும் 26,500 மில்லியன் ரூபா ஓய்வூதியம் வழங்கவும், 6,000 மில்லியன் ரூபா சமுர்த்தி கொடுப்பனவுக்கும் செலவிடவே போதுமானதாகவுள்ளது. அதைத் தவிர சமூகநலனுக்காக 3,500 மில்லியனும், மருந்துகள் மற்றும் சுகாதார சேவைகளுக்காக 3,000 மில்லியன் ரூபாவும் ராணுவ உணவுக்காக 2,000 மில்லியனும், உரத்துக்காக 2,000 மில்லியனும் மின்சாரம், நீர் மற்றும் காப்புறுதிக்காக 7,000 மில்லியனும் மீண்டெழும் செலவினம் 3000 மில்லியன் போன்று கடன் வழங்கல் உள்ளிட்ட ஏனைய நடவடிக்கைகளுக்கும் கடன் பெற வேண்டியுள்ளது. வங்கிகள் அரசுக்கு அளித்து வந்த கடன் நிலுவை தொகை குறைக்கப்பட்டதனால், மத்திய வங்கியிலிருந்து பணத்தை பெறுவதுதான் ஒரே வழியாக உள்ளதுது. இதன் காரணமாக தேர்தலுக்கான பணத்தை மத்திய வங்கியிடம் இருந்து பெற வேண்டியுள்ளது. மத்திய வங்கி பணத்தை அச்சிடுமானால் பணவீக்கமே அதிகரிக்கும்.

இதனால், மக்களே பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். நிலைமை சீரடைய இன்னும் ஒரு வருட கால அவகாசம் தேவைப்படும். விவசாயத்துறையில் ஓரளவு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைமையில் தேர்தலுக்காக பணத்தை செலவிட்டால் மீண்டும் பொருளாதார வீழ்ச்சி ஏற்படுவதை தடுக்க முடியாது. மேலும் அடுத்த வருடம் மார்ச் மாத அளவில் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி ஒத்துழைப்பு கிடைக்குமானால், வங்கிகளிடமிருந்து பணத்தைப் பெற முடியும். மேலும் அரசின் வரிக் கொள்கையின் மூலமும் அரச வருமானம் அதிகரிக்கும். அவ்வேளையில் நாட்டுக்கு பொருளாதார பாதிப்பு ஏற்படாத வகையில் தேர்தலை நடத்த முடியும்.

# நேபாள புதிய பிரதமருக்கு பிரதமர் தினேஷ் வாழ்த்து



நேபாளத்தின் புதிய பிரதமராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள புஷ்ப கமல் தஹலலுக்கு, பிரதமர் தினேஷ் குணவர்த்தன வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நேபாளத்தின் பிரதமராக மீண்டும் தெரிவுசெய்யப் பட்ட தையிட்டு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பிரதமர் என்ற வகையில் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாக பிரதமர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.அவரது வாழ்த்தில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது,

ஆழமான நட்பு, நெருங்கிய உறவுகளில் இலங்கையும், நேபாளமும் நெருக்கமான நாடுகளாகும். தற்போதையசவால்களைவெற்றிகொள்ளவும், ஒத்துழைப்புக்கான புதிய வாய்ப்புகளை ஆராயவும் இணைந்து செயற்பட இலங்கை தயாராகவுள்ளது.

சமய மற்றும் ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையில் நமது உறவுகள் கட்டமைக்கப்பட்டு ள்ளன. இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்த தொடர்ந்து நேபாளத்துடன் பணியாற்ற பெரிதும் எதிர்பார்த்துள்ளேன். புதிய பதவிக் காலத்தில் நேபாள மக்களின் நலன்களை உறுதிசெய்யும் தங்களது முயற்சிகள் முழுமையாக வெற்றிபெற வாழ்த்துகிறேன். இவ்வாறு, பிரதமர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# சுற்றுலா பயணிகளின் வருகையில் அதிகரிப்பு

### டிச.26 வரை 7,01,000 பேர் வந்துள்ளனர்

இலங்கைக்கு இம் மாதம் டிசம்பர் 26 ஆம் திகதி வரை சுமார் 7,01,000 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். இந்த வருட இறுதிக்குள், 2022 ஆம் ஆண்டில் சுமார் 720,000 சுற்றுலாப்

06

# ரயில்களில் மரக்கறிகளை ஏற்றிவருதல் பரீட்சார்த்த நடவடிக்கைகளே

### சாத்தியங்களை அறிந்ததும் திட்டம் தொடர்பில் விளக்கம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



ரயில்களில் மரக்கறி வகைகள் மற்றும் பழங்களை ஏற்றி வரும் பரீட்சார்த்த நடவடிக்கைகள், முன்னெடுக்கப் பட்டுள்ளன.விரைவில் இதுகுறித்த நிலையான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுமென, அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

மரக்கறி மற்றும் பழவகைகள் தற்போது ரயில்களில் ஏற்றி வரப்படுவதை சில ஊடகங்கள் இதுபற்றி ,தவறான பார்வையில் செய்திகளை வெளியிட்டுள்ளன.இதுகுறித்து வினவியபோதே அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

பழங்கள் மற்றும் மரக்கறிகளை ரயில்களில் ஏற்று வரும் தற்போதைய செயற்பாடுகள் தற்காலிகமானதே. இது தொடர்பான நிலையான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதும் அறிவிக்கப்படும்.

நீண்டகாலமாக கவனம் செலுத்தப்பட்டு வந்துள்ள நிலையில்தான், இதற்கான பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் சாதகத் தன்மையை கவனத்திற்கொண்டு நிரந்தரமாக இச்செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த கவனம் செலுத்தப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

வடக்கிற்கான ரயில்பாதை அபிவிருத்தி தொடர்பில் நேற்று (28) தகவல் திணைக்களத்தில் நடத்தப்பட்ட விசேட செய்தியாளர் மாநாட்டிலே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

# வருமானமீட்டும் வகையில் ரயில்வே துறையில் மாற்றம்

### அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

புதிதாக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களால், ரயில்வே துறை வருமானமீட்டும் நிலைக்கு மாறியுள்ளதாகவும், தற்போதைய வருமானம் நூற்றுக்கு நூற்றி ஐம்பது வீதமாக அதிகரித்துள்ளதென்றும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சியாக நஷ்டமீட்டி வந்த ரயில்வே துறை, இலாபமீட்டும் துறையாக மாற்றமடைவதற்கு, தற்போதைய வேலைத்திட்டங்கள்தான் காரணமென்றும் அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், கடந்த வருடத்தில் 400 மில்லியன் ரூபாவாக இருந்த வருமானம் தற்போது 1,000 மில்லியனாக அதிகரித்துள்ளது. எரிபொருளுக்கான செலவை நிவர்த்தி செய்வதற்கே இந்நிதி போதுமாக உள்ளது.

ரயில்வே ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு மேலதிக நிதி தேவைப்படுகிறது.

ரயில் போக்குவரத்தில்,வரலாற்றில் முதல் தடவையாக பாரிய மாற்றங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனொரு அம்சமாக எதிர்வரும் 2023ம் ஆண்டில் செலவுகளைக் குறைத்து வருமானத்தை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. கொழும்பு முதல் காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதைகள் பாரிய அபிவிருத்திக்கு உட்படுத்தப்படவுள்ளன. யுத்தம் இடம்பெற்ற 30 வருட காலத்தில் வடக்குக்கான

06

# புதுடெல்லியில் 3 டிகிரி கடும் குளிர்; 04 நாட்களாக அடர் பனி மூட்டம்

### 100 விமானங்கள் தரையிறங்குவதில் தாமதம்

டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் நேற்று சுமார் 100 விமானங்கள் தரையிறங்குவதில் தாமதம் ஏற்பட்டது.டெல்லி, உத்தரபிரதேசம், பஞ்சாப் உள்ளிட்ட வட மாநிலங்களில் வழமைக்கு மாறாக கடும் பனி மூட்டம் நிலவுகிறது.

டெல்லியில் 03 டிகிரி செல்சியஸ் அளவில் குளிரடிக்கிறது. இப்பனி மூட்டம் நான்கு நாட்கள் நீடிக்குமென இந்திய வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. அடர் பனி மூட்டத்தால் ரெயில், விமான போக்குவரத்தும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும் இரவு 11.45 மணியளவில், இரண்டு விமானங்கள் ஜெய்ப்பூருக்கு திருப்பிவிடப்பட்டன. இந்த காலத்தில் மூடு பனி காரணமாக விமானங்கள் திருப்பிவிடப்படுவது இது முதல் முறையாகும்.

# கொழும்பு, கம்பஹாவில் இனி முட்டை விலை ரூ. 55

### நேற்று முதல் விற்பனைக்கு வந்தது

கொழும்பு மற்றும் கம்பஹாவிலுள்ள பொருளாதார நிலையங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் நேற்று முதல் 55 ரூபாவுக்கு முட்டை விற்பனை செய்யப்படுகிறது.

4,00,000 முட்டைகளை ஏற்றிக்கொண்டு 16 லொறிகள் குளியாப்பிட்டியிலிருந்து நேற்று கொழும்பு வந்தன.

முட்டைக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் செய்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை, பெப்ரவரி 06 ஆம் திகதி வரை இடைநிறுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டதையடுத்து சந்தையில் முட்டையின் விலை அதிகரிக்கத் தொடங்கியது.

அதுவரை, 50 ரூபாவாக இருந்த முட்டை விலை, 65 ரூபாவுக்கு அதிகமாக விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில், முட்டை விலை உயர்வு குறித்து ஆராய்வதற்காக கடந்த திங்கட்கிழமை விவசாய அமைச்சருக்கும், முட்டை உற்பத்தியாளர் சங்கங்களுக்கும் இடையில் பேச்சுவாரத்தை நடாத்தப்பட்டது.

அங்கு ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் நேற்று முதல் வாடிக்கையாளருக்கு 55 ரூபாவுக்கு முட்டை வழங்க முட்டை உற்பத்தியாளர் சங்கங்கள் சம்மதம் தெரிவித்தன.

இதேவேளை, கொழும்பு மற்றும் கம்பஹாவில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் நேற்று (28) நண்பகல் 12.00 மணிக்குப் பின்னர் முட்டை, அதிகபட்ச சில்லறை விலையான 55 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டதாக அகில இலங்கை கோழி வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேக்கர தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை விவசாய மத்திய நிலையத்திலிருந்து முட்டை விற்பனையை ஆரம்பித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீர்கொழும்பு, ஜாஎல, வத்தளை, வெலிசர பொருளாதார நிலையம், நாரஹென்பிட்ட பொருளாதார நிலையம், மஹரகம, பத்தரமுல்ல, நுகேகொடை மற்றும் ஏனைய பிரதேசங்களில் முட்டை விற்பனை ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.









## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 14ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஆகிராஹ் பிறை 04

### குறள் தரும் சிந்தனை



கேளிழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்கம் நட்டார் செயின்

நண்பர்கள் செய்யும் குற்றத்தைப் பிறர்கூறி அதனை ஏற்றுக் கொள்ளாத அளவுக்கு நம்பிக்கையான நட்புரிமை கொண்டவரிடத்திலேயே அந்த நண்பர்கள் தவறாக நடந்து கொண்டால் அவர்களுடன் நட்புக் கொண்டிருந்த நாளெல்லாம் வீணான நாளாகும்.

# நாட்டில் தீவிரமடையும் டெங்கு நோய்த் தாக்கம்!

நாட்டில் டெங்கு வைரஸ் நோய்க்கு உள்ளாவோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பை கடந்த சில வாரங்களாக சில பிரதேசங்களில் அவதானிக்க முடிகிறது. டெங்கு நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதை சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் தடுப்பு பிரிவு தரவுகளும் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

டெங்கானது நுளம்புகளால் காவிப் பரப்பப்படும் ஒரு வைரஸ் நோய். இவ்வைரஸைப் பரப்பும் நுளம்பு இனம் தெளிந்த தண்ணீர் தேங்கும் இடங்களில் பெரும்பாலும் முட்டையிட்டுப் பல்கிப் பெருகும் பண்பைக் கொண்டிருக்கின்றது.

அந்த வகையில், கடந்த சில வாரங்களாக நாட்டில் நிலவிவரும் மழையுடன் கூடிய காலநிலை இவ்வின நுளம்புகளின் பெருக்கத்திற்கு சாதகமான சூழலாக அமைந்திருக்கிறது. இவ்வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு பல்கிப் பெருகும் இவ்வின நுளம்புகள், டெங்கு வைரஸ் நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

ஆனால் இவ்வின நுளம்புகளின் பெருக்கத்தையும் தாக்கத்தையும் முழுமையாகக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும். குறிப்பாக தெளிந்த நீர் தேங்கக் கூடிய கைவிடப்பட்ட சிரட்டைகள், உடைந்த மட்பாண்டங்கள், பிளாஸ்ரிக் பாத்திரங்கள், யோகட் கப்கள், பொலித்தீன் உறைகள் உள்ளிட்ட அனைத்தையும் நீர் தேங்க முடியாதபடி அப்புறப்படுத்தி, சுத்தமாகவும் உலர்ந்த நிலையிலும் சுற்றுச்சூழலை வைத்திருக்கும் போது இவ்வின நுளம்புகள் பெருக வாய்ப்பு இருக்காது.

இருந்த போதிலும் சுற்றுச்சூழல் சுத்தம் தொடர்பில் காட்டப்படும் அசிரத்தை, கவனயீனம் என்பன இவ்வின நுளம்புகளின் பெருக்கத்திற்கு வாய்ப்பாக அமைகின்றன. அதன் விளைவாகவே இன்றைக்கு நான்கைந்து தசாப்தங்களுக்கு முன்னர் கொழும்பின் விரல் விட்டெண்ணக்கூடிய ஒரு சில பிரதேசங்களுக்குள் காணப்பட்ட டெங்கு வைரஸைக் காவிப் பரப்பும் இன நுளம்புகள் இன்று முழு நாட்டிலும் வியாபித்துக் காணப்படுகின்றன.

இதன் விளைவாகவே இவ்வருடம் ஜனவரி முதல் இற்றை வரையும் 61 ஆயிரத்து 773 பேர் இந்நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 12 ஆயிரத்து 618 பேர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இந்நாட்டில் டெங்கு வைரஸ் நோய்க்கு உள்ளாகின்றவர்கள் அதிகளவில் அடையாளம் காணப்படும் மாவட்டமாக வழமை போன்று இம்முறையும் கொழும்பு மாவட்டமே முதலிடத்தைப் பெற்றுள்ளது. இவ்வின நுளம்புகள் பல்கிப் பெருகுவதற்கான வாய்ப்புகள் இம்மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படுவதே இதற்கான காரணமாகும்.

அதற்கு அடுத்த இடத்தில் கம்பஹா மாவட்டம் காணப்படுகிறது. இம்மாவட்டத்தில் இவ்வருடம் 8 ஆயிரத்து 923 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் மாகாண அடிப்படையில் எடுத்து நோக்கினாலும் மேல்மாகாணத்தில்தான் இந்நோய்க்கு உள்ளானவர்கள் அதிகளவில் அடையாளம் காணப்படக் கூடிய மாகாணமாக உள்ளது. அதற்காக ஏனைய மாகாணங்களில் இந்நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்கள் இல்லை என்று அர்த்தமாகாது.

குறிப்பாக இவ்வருடம் யாழ்குடாநாட்டில் 3676 பேர் இந்நோய்க்கு உள்ளானவர்களாக இனம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் அதிகளவானோர் இம்மாதமே அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர். அத்தோடு களுத்துறை, கண்டி, குருநாகல், காலி, புத்தளம், கேகாலை, மட்டக்களப்பு, இரத்தினபுரி உள்ளிட்ட மாவட்டங்களிலும் கடந்த வருடத்தை விடவும் இவ்வருடம் இந்நோய்க்கு உள்ளானவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படடிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ஆனால் இந்நோய்க்கு உள்ளாகின்றவர்கள் ஆரம்ப கட்டத்தியே உரிய சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளும் போது நோயை முழுமையாகக் குணப்படுத்திக் கொள்ள முடியும். ஆனால் காய்ச்சல் தொடர்பில் கவனயீனமாகவும் அசிரத்தையாகவும் நடந்து கொள்வதன் விளைவாகவே உயிராபத்து அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் நிலைக்கு முகம்கொடுக்க நேரிடுகிறது.

இது தொடர்பில் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஆ. கேதீஸ்வரன் குறிப்பிடுகையில், டெங்கு நோய் காரணமாக இவ்வருடம் எமது பிரிவில் ஒன்பது பேர் மரணமடைந்துள்ளனர். இம்மரணங்களில் பெரும்பாலானவற்றுக்கு தாமதமாக சிகிச்சை பெற வந்தமையே காரணமாக அமைந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே தற்போதைய சூழலில் காய்ச்சலுடன் கூடிய அறிகுறிகள் காணப்படுமாயின் தாமதமன்றி தகுதி வாய்ந்த மருத்துவரை அணுகி சிகிச்சை பெற்றுக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் மழையுடன் கூடிய காலநிலையை தொடர்ந்து டெங்கு வைரஸ் நோய் நாட்டில் அதிகரித்து காணப்படுவதைக் கருத்தில் கொண்டு செயற்படுவது ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# மட்டக்களப்பு உட்கட்டுமானங்களை ஆராய நெடுஞ்சாலைகள் அமைச்சிலிருந்து குழு



கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் அழைப்பின் பேரில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஆர். டபிள்யூ. ஆர். பிறேமஸ்ரீ மற்றும் அவருடன் இணைந்த குழுவினர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்திருந்தனர்.

அதன்போது இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தனால் மாவட்டத்திலுள்ள வளங்கள் தொடர்பிலும் அவற்றை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு பாரிய சவால்களாகவுள்ள காரணிகள் பற்றியும் ஆராயப்பட்டது. சீரற்ற பாதை அமைப்புக்கள் மற்றும் அதனுடன் இணைந்த பாலங்களை விரைவாக அமைக்க வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பிலும் விசேட கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது. மாவட்டத்திலுள்ள உட்கட்டுமான பற்றாக்குறை தொடர்பில் இராஜாங்க அமைச்சரின் ஊடகப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட காணொளியும் காண்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மிக விரைவில் அமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படும் திகிலிவெட்டை பாலத்திற்கான களவிஜயத்தினையும் இராஜாங்க அமைச்சருடன் இணைந்து போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் பிறேமஸ்ரீ உட்பட்ட குழுவினர் மேற்கொண்டனர்.

அத்துடன் 23. 48 மில்லியன் ரூபா செலவில் வாகரை கண்டலடி துறைமுகவீதியில் அமையவுள்ள கிராமிய பாலத்திற்கான அடிக்கல்லும் நடப்பட்டது. வாகரை கண்டலடி பிரதேச மக்களின் பிரதான வாழ்வாதாரமாக திகழும் மீன்பிடி தொழில் நடவடிக்கைகளுக்காக கடற்கரைக்கு செல்லும் பிரதான வீதியாக குறித்த துறைமுக வீதி உள்ளது. குறித்த பாலம் மிக மோசமான நிலையில் மிக நீண்டகாலமாக சிதைவடைந்து காணப்படுவதை அவதானித்த இராஜாங்க அமைச்சர், தனது கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சினூடாக 23. 48 மில்லியன் ரூபாவை ஒதுக்கி குறித்த பாலத்தின் வேலைகளை ஆரம்பித்து வைத்துள்ளார்.




உள்ளூர் உற்பத்தி மற்றும் நெல் தன்னிறைவு போன்றவற்றுக்கு பங்களிப்புச் செய்யக்கூடிய வீதிகள் மற்றும் பாலங்கள் போன்றவற்றை முன்னிலைப்படுத்தி முடிந்தவரை விரைவாக அவற்றை நிறைவேற்றிக் கொடுப்பதற்கான பல முயற்சிகளை கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் முன்னெடுத்து வருகின்றார்.

அத்துடன் இவ்விஜயத்தின் அமைச்சின் செயலாளர் பிறேமஸ்ரீ அவர்களுடன் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் பி. ரணவீர உள்ளடங்கலான விசேட குழுவும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கிழக்கு மாகாண பணிப்பாளர் சிவகுமார், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மட்டக்களப்பு மாவட்ட பிரதம பொறியியலாளர் பரதன், நிறைவேற்றுப் பொறியியலாளர் லிங்கேஸ்வரன் போன்றோருடன் துறைசார் அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# கொரோனாவின் புதியவகை திரிபுகளால் மீண்டும் அலை உருவாகுமென அச்சம்!

சீனாவில் உருவெடுத்துள்ள புதிய கொரோனா அலை காரணமாக புதிய வகை கொரோனாக்கள் உருவாகுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது. சீனாவில் மிக வேகமாக கொரோனா தொற்று பரவி வருகிறது. சீனா தற்போது நாளாந்தம் கொரோனா தொற்றினால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை விபரங்களை வெளியிடுவதை நிறுத்து விட்டது. அந்நாட்டில் மில்லியன்கணக்கான மக்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளிவருகின்றன.



ஒமிக் ரோன் BF.7 மற்றும் BF.12 வகை கொரோனா திரிபு வைரஸ் தொ ற்று அங்கு பரவி வருகின்றது. இந்த நிலையில் சீனாவில் பரவும் இந்த திரிபினால் புதிய வகை கொரோனா உருவாகும் வாய்ப்புகள் உள்ளதாக அச்சம் எழுந்துள்ளது.

ஒரு வகையான கொரோனா இன்னொரு வகையாக உருமாற்றம் அடைந்து முன்பை விட ஆபத்து அதிகமானதாகவோ, ஆபத்து குறைவானதாகவோ மாறி மக்களிடையே பரவி வருகிறது. கொரோனா பரவல் தொடங்கிய காலத்தில் இருந்தே அது பல்வேறு வகைகளாக உருமாறிக் கொண்டுதான் இருக்கிறது. ஏற்கனவே அல்பா, பீற்றா, காமா, டெல்டா என்று பல வகை கொரோனா திரிபுகள் உள்ளன. அந்த வகையில்தான் தற்போது ஓமிக் ரோன் பரவி வருகிறது. சீனாவில் பரவுவது ஓமிக் ரோன் வை ரஸ்தான். ஆனால் ஓமிக் ரோனிலேயே இலேசாக மாற்றம் அடைந்த கிளை வகையான BA5.2 மற்று ம் BF.7 ஆகியனவே சீனாவில் அதி கமாக பரவி வருகின்றன. சீனாவில் மட்டும் ஓமிக்ரோனின் 130 வகையான கிளை வைரஸ்கள் பரவி வருகின்றன.

இவ்வாறு கிளை வைரஸ்கள் அதிகம் பரவப் பரவ அவை புதிய ஒரு அலையை உ ருவாக்க வாய்ப்புகள் உள்ளன. புதிய வ கை கொரோனா உருவெடுக்கும் அபாயம் உள்ளதால் மக்கள் மிகுந்த அவதானமாக இருப்பது அவசியமாகின்றது.

இந் தியாவில் 6 பேருக்கு இந்த புதிய வகை கொரோனா ஏற்பட்டுள்ளது. அவர்களில் 4 பேர் நவம்பர் மாதத்திற்கு முன்பே குணமடைந்து விட்டனர். இந்தியாவில் 24 மணி நேரத்தில் 196 பேர் புதிதாக கொரோனா காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர். சீனாவில் புதிய வகை உருவானால் அது பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். அதாவது இந்தியாவில் இதுவரை பரவாத அல்லது உலகில் இதுவரை பரவாத ஒரு வகை கொரோனாவை உருவாக்கினால் அது மீண்டும் புதிய அலையை உருவாக்கும் அபாயம் உள்ளது என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# 300 கிளைகளுக்கு விரைவான டிஜிட்டல் கடன் செயலாக்க வசதியை விரிவுபடுத்திய மக்கள் வங்கி

மக்கள் வங்கி, அதன் People's Wiz Retail Loan Origination System (RLOS) அமைப்பை உத்தியோகபூர்வமாக கந்தரவில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் தனது டிஜிட்டல் கடன் செயலாக்க வசதி கொண்ட கிளை வலையமைப்பை 300 ஆக விரிவுபடுத்தியுள்ளது.





People's Wiz (RLOS) என்பது வாடிக்கையாளர்களுக்கு குறைந்தபட்ச ஆவணங்களுடன் 24 மணிநேரத்திற்குள் வசதியாக தனிநபர் கடனைப் பெற்றுக்கொள்ள உதவுகிறது. இது செயல்படுத்தப்படுவதற்கு முன்பு, தனிநபர் கடன் வழங்கும் செயல்முறை 15 படிகளைக் கொண்ட செயல்முறையாக இருந்ததுடன், இது முற்றுப்பெறுவதற்கு பல நாட்கள் எடுத்தது.

நவீன வங்கியியல் நடைமுறைகளுக்கு இணங்க, டிஜிட்டல் வங்கியியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட வங்கிச்சேவை அனுபவத்தை வழங்குவதில் மக்கள் வங்கி கவனம் செலுத்துகிறது. Express Banking facility, People's Wave app, Retail Internet banking facility, Corporate Internet Banking (CIB) web app, People's Wyn mobile app, RLOS (Repay Loan Origination System), CLOS (Corporate Loan Origination System) kw;Wk; People's Pay app போன்ற பல டிஜிட்டல் வங்கிச்சேவை முயற்சிகளை வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது. வங்கியின் அனைத்து டிஜிட்டல் மயமாக்கல் திட்டங்களும் வாடிக்கையாளர்களுக்கு அதிகபட்ச பாதுகாப்பு மற்றும் வசதியை உறுதி செய்கின்றன.

மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் ரஞ்சித் கொடிதுவக்கு, சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (கொடுப்பனவு மற்றும் டிஜிட்டல்) கே.பி.ராஜபக்ஷ, பிரதிப் பொது முகாமையாளர் (மார்க்க முகாமைத்துவம்) மஹிந்த பிரேமநாத், சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரி நாலக விஜயவர்தன, பிரதம டிஜிட்டல் அதிகோரி மங்கள காரியவசம், மாத்தறை பிராந்திய முகாமையாளர் ஐ.கே இந்திக, உதவிப் பிராந்திய முகாமையாளர்களான டபிள்யூ.கே.எஸ்.குமாரசிங்க, ரி.எஸ்.நம்முனியாராச்சி மற்றும் கந்தர கிளை முகாமையாளர் டி.சி.மல்லிகாராச்சி ஆகியோருடன் வங்கி ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்த அபான்ஸ் GreenPro குளிர்சாதன பெட்டி

அபான்ஸ் GreenPro சிறப்பு சேமிப்பு குளிர்சானப்பெட்டி வாழ்நாள் முழுவதும் பயன்படுத்தக்கூடிய சிறப்பு மின்சார சேமிப்பு சகிதம் இலகு விலையில் பெற்றுக் கொள்ளக் கூடிய குளிர்சாதனப் பெட்டியாகும்.

பண்டாரகமை அபான்ஸ் தொழிற்சாலையில் GreenPro விசேட சேமிப்பு குளிர்சாதனப் பெட்டிகள் உற்பத்தி செய்யப் படுவதோடு, நம்பகமான உள்நாட்டு உற்பத்தியாக நீண்ட நாட்கள் பயன்படுத்தக்கூடிய தகுதியை இது கொண்டுள்ளது.

விற்பனையின் பின்னரான சேவையுடன் கொம்பிரெஸருக்கு 10 வருட உத்தரவாதமும் வழங்கப்படுகிறது.

இத்தயாரிப்பு உள்நாட்டு உற்பத்தி என்னும் காரணத்தினால் தேவையான அளவு உதிரிப் பாகங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

அபான்ஸ் GreenPro சுப்பர் சேவர் குளிர்சாதனப்பெட்டியானது நிலையான நிலைமைகளின் கீழ் செயல்படும் போது 75 வாட்களை மட்டுமே பயன்படுத்துகிறது.

சுற்றுச்சூழலுக்கு உகந்த R600C குளிர்பதன வாயு மின்சாரத்தை சிறப்பாக சேமிக்க மிகவும் உதவியாக உள்ளது. 40MM தடித்த சுவர்கள் இருப்பதால் குளிர்ச்சியை மிகவும் சிறப்பாக பாதுகாப்பதோடு, மின்சாரத்தையும் சேமிக்கிறது.

185 லீட்டர் கொள்ளளவை கொண்டுள்ளதோடு, தேவையான அனைத்து உணவுகளையும் புத்துணர்வாகவும், பாதுகாப்பாகவும் களஞ்சியம் செய்து வைத்துக்கொள்ள முடியும். இக் குளிர்சாதனப்பெட்டி ரூ.97,990 ரூபாவிலிருந்து நாடளாவிய ரீதியில் அபான்ஸ் காட்சியறை மற்றும் BuyAbans.com இடமிருந்து விசேட சலுகைகளுடன் விற்பனையின் பின்னரான சிறப்பு சேவைகளுடன் பெற்றுக் கொள்ள முடியும்.



# விழிப்புலன் இல்லாதோர் வாழ்வில் ஒளியேற்றி வைத்தவர் பிரெய்ல்

விழிப்புலனற்றோர் படித்து பட்டதாரிகளாகவும் கலாநிதிகளாகவும் பேராசிரியர்களாகவும் மேதைகளாகவும் நாவலாசிரியர்களாகவும் இசையமைப்பாளர்களாகவும் முன்னேற வழியமைத்தவர் பிரெய்ல் ஆவார்.

உலக சுகாதார ஒழுங்கமைப்பின் புள்ளிவிபர தகவலின்படி உலகில் ஏறத்தாழ 39 மில்லியன் பேர் பார்வையற்றவர்களாக இருக்கின்றனர். இதில் 82 சதவீதமானோர் ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்கள். 18 சதவீதமானோர் ஐம்பது வயதிற்கு கீழ்ப்பட்டவர்கள். பிறவியிலேயே விழிப்புலனற்றவர்களாக பிறப்பவர்கள் மிகச் சிலரே. எனினும் பலர் தம் குழந்தைப் பருவத்தில் தவிர்க்கப்படக் கூடிய காரணிகளால் பார்வையை இழக்கின்றனர்.

பிள்ளைகளில் போசணைக் குறைபாடே பார்வைக் குறைபாட்டிற்கான பிரதான காரணியாக இருக்கின்றது. வளர்ந்தவர்களில் நீரிழிவு நோய், உயர் குருதியமுக்கம், விழித்திரை மையத்தின் சிதைவு என்பன பார்வைக் குறைபாட்டுத் தன்மையை ஏற்படுத்தும் முக்கிய காரணிகளாகும். முன்பொரு காலத்தில் பார்வை இழந்தவர்கள் வாழத் தகுதியற்றவர்கள் என்று கருதப்பட்டனர். அந்தக் காலம் போய்விட்டது. கண் பார்வை இழந்தவர்கள் பிரெய்ல் முறையின் மூலம் இப்போது எல்லோரையும் போல படிக்க முடியும்.

பிரெய்ல் முறை பற்றி எல்லோருமே கேள்விப்பட்டிருப்போம். இதைக் கண்டுபிடித்தவர் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த லூயிஸ் பிரெய்ல் ஆவார். லூயிஸ் பிரெய்ல் நான்கு வயது சிறுவனாக இருந்த போது, செருப்பு தைக்கும் தனது தந்தையின் பெரிய ஊசியை வைத்து விளையாடிக் கொண்டிருந்த போது அந்த ஊசி கண்ணைக் குத்தி விட்டது. அவர் ஒரு கண்பார்வையை இழந்துவிட்டார்.

**விழிப்புலனற்றோர் கல்விக்காக 'பிரெயில்' என்ற எழுத்து முறை மூலம் விழிப்புலனற்றோர் இலட்சக்கணக்கானோர் படித்து பட்டதாரிகளாகவும் கலாநிதிகளாகவும் பேராசிரியர்களாகவும் மேதைகளாகவும் நாவலாசிரியர்களாகவும் இசையமைப்பாளர்களாகவும் முன்னேறியுள்ளனர்**



அந்தக் கண்ணில் ஏற்பட்ட தொற்று சில மாதங்கள் கழித்து அடுத்த கண்ணிற்கு பரவி முழுப் பார்வையையும் இழந்துவிட்டார். அவருக்கு பார்வை போய் விட்டாலும், படிக்கவேண்டும் என்ற ஆவல் அவரிடம் நிறைய இருந்தது. கண் பார்வை இழந்தவர்கள் படிக்க ஏதாவதொரு வழி கண்டுபிடிக்க வேண்டும் என்று யோசித்தார். பலரிடமும் கலந்தாலோசித்தார்.

ஒருநாள் போர்வீரர் ஒருவரிடம் பேசியபோது, ஒரு தகவல் கிடைத்தது. போரின்போது தகவல்களை பரிமாற்றம் செய்யும் முறை பற்றி அவர் விளக்கினார். அந்த போர்வீரர் கையால் எழுதினால் விளக்கொளியில்தான் அதைப் படிக்க முடியும். விளக்கொளியை ஏற்றினால் எதிரிகள் இவர்களது இருப்பிடத்தை அறிந்துவிடுவர். எனவே இருட்டில் தொட்டுப்பார்த்து படித்தறியும் முறையில் குறியீட்டு எழுத்துகளை அனுப்புவோம் என்று அந்த போர்வீரர் கூறியதை கேட்ட லூயிஸ் பிரெய்ல் யோசிக்கலானார்.

அவருக்கு எந்த ஊசி தன் கண்ணை குத்தியதோ அதே ஊசியைப் பயன்படுத்தி ஒரு தாளில் துளைகளை போட ஆரம்பித்தார். ஒரு தாளை எடுத்து அதன் மீது நெருக்கமாக ஆறு துளைகளை இட்டார். தொட்டு பார்த்தார். இன்னொரு விதமாக ஆறு துளையிட்டு மறுபக்கமாக தடவிப் பார்த்தார். கடதாசி தாளின் பின்புறத்திலிருந்து ஊசி போன்ற எழுதுகருவியினால் குத்துவதன் மூலம் பொங்கி நிற்கும் வண்ணம் குத்துக்கள் உருவாக்கப்படுகின்றன. இவ்வாறு எழுதும் போது எதிர்த் திசையிலிருந்தே எழுத்துக்கள் குத்தப்படுகின்றன.

இந்த அமைப்பில் புள்ளிகளை வெவ்வேறு விதமாக துளையிடுவதன் மூலம் ஆங்கில எழுத்துகளையும் அடிக்கடி பயன்படுத்தடும் வார்த்தைகளையும் உண்டாக்கினார். இப்படித்தான் இன்றும் விழிப்புலனற்றோர் கலாநிதி பட்டம் வரையில் படிக்க உதவும் முறையை 1929 இல் விழிப்புலனற்றோருக்கான எழுத்து முறையொன்றை லூயிஸ் பிரெய்ல் கண்டுபிடித்தார். இதுவே இன்று உலகெங்கும் பயன்படுத்தப்படும் பிரெய்ல் எழுத்து முறையாகும்

பிரெய்ல் முறையை உலகிற்கு அளித்து விழிப்புலனற்றோர் வாழ்வில் ஒளியேற்றிய லூயிஸ் பிரெய்ல் 1809 ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் திகதி பிறந்தார். இத்தினத்தையே லூயிஸ் பிரெய்ல் தினம் என்று கொண்டாடுகிறோம். 1828 ஆம் ஆண்டு விழிப்புலனற்றோர் கல்விக்கான தேசிய நிறுவனத்தில் விழிப்புலனற்றோருக்கான ஆசிரியராக பணி புரிய ஆரம்பித்தார். இவர் 1852 ஆம் ஆண்டு ஜனவரி ஆறாம் திகதி காலமானார்.

உலகமே பாராட்டிய இந்த முறைக்கு அவரது பெயரையே வைத்து விட்டார்கள். உள்ளூர் தேவாலயத்தில் கீபோர்டும், செல்லோ இசைக்கருவியும் வாசித்து வந்த லூயிஸ் பிரெய்ல் இசையைக் கூட பிரெய்ல் முறையில் எழுதும் முறையை கண்டுபிடித்தார். பிற்காலத்தில் இவர் சிறந்த இசைக் கலைஞராக புகழ் பெற்றார்.

விழிப்புலனற்றோர் கல்விக்காக பிரெயில் என்ற எழுத்து முறை மூலம் இலட்சக்கணக்கான விழிப்புலனற்றோர் படித்து பட்டதாரிகளாகவும் கலாநிதிகளாகவும் பேராசிரியர்களாகவும் மேதைகளாகவும் நாவலாசிரியர்களாகவும் இசையமைப்பாளர்களாகவும் முன்னேறியுள்ளனர்.



தனியொருவராக லூயிஸ் பிரெய்ல் செய்த இந்த சாதனைக்கு நாம் எல்லோருமே அவருக்கு கடமைப்பட்டுள்ளோம்.

கலாபூஷணம் **பரீட் இக்பால்...**
*(யாழ்ப்பாணம்)*

# மாணவர்கள் பலர் பல்கலைக்கழகம் பிரவேசிக்க வழிகாட்டியாகப் பணியாற்றிய ஆசிரியை நந்தினி

மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியில் குறிப்பாக பட்டிருப்பு கல்வி வலயத்தில் உயர்தர விஞ்ஞானக் கல்வி வளர்ச்சிக்கு உரமூட்டி அதிகளவான மாணவர்களை பல்கலைக்கழகங்களின் வைத்திய பீடம், பொறியியல் பீடம் மற்றும் விஞ்ஞான கற்கை நெறிகளுக்கு அனுப்பி வைக்க மகத்தான சேவையாற்றிய பெரிய கல்லாற்றைச் சேர்ந்த ஆசிரியை திருமதி நந்தினி நடேசமூர்த்தி முப்பத்தாறு வருட கால ஆசிரியப் பணியில் இருந்து 22.12.2022 இளைப்பாறியுள்ளார்.

'ஆசிரியப் பணி அறப்பணி, அதற்கு உன்னை அர்ப்பணி' என்பதற்கு அமைய மாணவர்களுக்கு பௌதிகவியல் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பித்து பல நூற்றுக்கணக்கான மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிய பெருமைக்குரியவர் இவர்.

பெற்றோர், மாணவர்கள், கல்விப் புலத்தில் பணியாற்றும் உயர் அதிகாரிகள் போன்றோரின் நன்மதிப்பை பெற்ற இவரைக் கௌரவிக்கும் வகையில் மாணவர்களின் அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றது. அவர் மாலை அணிவித்து வரவழைக்கப்பட்டு பொன்னாடை, போர்த்தி நினைச்சின்னங்கள் என்பன அவருக்கு வழங்கப்பட்டன. அத்துடன் இவரது வதிவிடம் அமைந்துள்ள பெரியகல்லாற்றுக்கு துறைநீலாவணையில் இருந்து பான்ட் வாத்திய இசை முழங்க அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அழைத்துச் சென்று உயர் கௌரவமளித்தனர். இது இவரின் கல்விப் பணிக்கு சிறந்த சான்றாகும்.



கலைத்திட்டம், இணைக் கலைத்திட்டம் என்பவற்றுக்கு இவர் வழங்கிய அர்ப்பணிப்பான சேவை தொடர்பாக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிபர் என பலரும் தங்களது அனுபவப் பகிர்வை பகிர்ந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

திருமதி நந்தினி நடேசமூர்த்தி 1962.10.31 ஆம் திகதி மயில்வாகனம்_ தவமணி ஆகியோருக்கு மகளாகப் பிறந்தார். பெரியகல்லாற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வியை பெரியகல்லாறு விநாயகர் வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை பெரியகல்லாறு மத்திய கல்லூரியிலும் பயின்றார்.

1982 ஆம் ஆண்டு கிழக்கு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணி கற்கையை தொடர்ந்து, பின்னர் 1986.10.12 ஆம் திகதி பெரிய கல்லாறு மத்திய கல்லூரியில் ஆசிரியராக கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார். தான் கற்ற பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

பின்னர் 2006 தொடக்கம் 2012 வரை மட்/பட்/ களுதாவளை மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று அதன் பின்னர் 2012 முதல் இன்று வரை தனது சேவையை மட்/பட்/துறைநீலாவணை மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) தொடர்ந்து பல மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி பெரும் புகழ் சேர்த்து ஓய்வு பெற்றார்.

1992 ஆம் ஆண்டு தனது பட்டப்பின் டிப்ளோமா கற்கையை தேசிய கல்வி நிறுவனத்தில் பூர்த்தி செய்து தொழில் தகைமையைப் பெற்றுக்கொண்ட இவர், பலராலும் பாராட்டப்படுகின்றார்.

**செல்லையா பேரின்பராசா...**
*(துறைநீலாவணை நிருபர்)*

# சமுர்த்தி உத்தியோகத்தருக்கு பிரியாவிடை வைபவம்



அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் சமுர்த்தி உத்தியோகத்தராக கடந்த 26 வருடங்களாக சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்றுள்ள A.B.ஜெலில் அவர்களுக்கான பிரியாவிடை வைபவம் அண்மையில் அட்டாளைச்சேனை பீச் ஹோலில் இடம்பெற்றது.

இப்பிரியாவிடை நிகழ்வில் பிரதேச செயலாளர் M.A.C. அஹமட் சாபீர் பிரதம அதிதியாக பங்கேற்றார். விசேட அதிதியாக உதவி பிரதேச செயலாளர் நஹிஜா முசாபிர் கலந்து கொண்டார். ஏனைய அதிதிகளாக கணக்காளர் S.L. றிபாஸ், சமுர்த்தி முகாமையாளர்களான A.M. ஹமீட், M.A. இமாமுதீன், M. நஜீம், S.L.அஸீஸ் ஆகியோருடன் பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் R.M.நளீல் உட்பட சமுர்த்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்திருந்தனர்

இப்பிரியாவிடை நிகழ்வு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் முன்னணியின் தலைவர் M.F.M.நவாஸ் தலைமை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**ஒலுவில் மத்திய விசேட நிருபர்...**




## சட்டவிரோதமாக பிரவேசிக்க முயன்ற

# இலங்கையர் உட்பட 27 பேர் ருமேனிய எல்லையில் கைது

ருமேனியாவுக்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்ற இலங்கையர் உட்பட 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ருமேனிய எல்லையில் பொருட்கள் ஏற்றிய இரண்டு டிரக் வண்டிகளுக்குள் மறைந்திருந்த போதே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

அதில் ஒரு டிரக் வண்டியை சோதனை செய்த போது 17 எரித்திரியா மற்றும் பங்களாதேஷ் பிரஜைகள் இருந்துள்ளனர். மற்றைய டிரக்கில் 11க்கும் மேற்பட்ட இலங்கையர் மற்றும் பாகிஸ்தானியர் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் 21 முதல் 42 வயதுக்கிடைப்பட்டவர்கள் என்று கூறப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை, பங்களாதேஷ், எரித்திரியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 27 புலம்பெயர்ந்தோர் ருமேனியாவின் அராட் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அவர்கள் சட்டவிரோதமாக எல்லையை கடந்து ஹங்கேரிக்கு செல்லும் நோக்கில் புடவைத் துணிகள் மற்றும் உலோக கம்பிகள் ஏற்றப்பட்ட இரண்டு கனரக வாகனத்துக்குள் மறைந்திருந்த நிலையிலேயே கண்டுபிடிக்கப்பட்டனர்.

ருமேனியாவின் நட்லாக் எல்லையில் கனரக வாகனமொன்று சோதனையிடப்பட்டது.

அதில், சரக்கு கொள்கலனின் முன் பகுதியில் இருந்த ஒரு விசேட பெட்டிக்குள், மறைந்திருந்த 17 வெளிநாட்டினர் கண்டுபிடிக்கப்பட்டனர்.

அவர்கள் மேலதிக விசாரணைக்காக அராட் பொலிஸ் தலைமையகத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இவர்கள் 21 முதல் 67 வயதுடைய பங்களாதேஷ் மற்றும் எரித்திரிய நாட்டவர்களெனனக் கண்டறியப்பட்டது. இதேவேளை, பொலிஸாரால் உலோகக் கம்பிகள் ஏற்பட்ட மற்றுமொரு கனரக வாகனம் சோதனையிடப்பட்டது.

அதில் மறைந்திருந்த இலங்கை மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 21 42 வயதுக்கு இடைப்பட்ட 10 பேர் கண்டுபிடிக்கப்பட்டனர்.

இந்த சட்டவிரோத நடவடிக்கை குறித்து மேலதிக தகவல்களை கண்டறிய விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக ருமேனிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சீனாவில் ஒன்றுடன் ஒன்று மோதிய 200 வாகனங்கள்

### அதிவேக பாதையில் பனி மூட்டத்தால் சம்பவம்



சீனாவிலுள்ள வீதியொன்றில் நூற்றுக்கணக்கான வாகனங்கள் ஒன்றுடனொன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. பெரும் எண்ணிக்கையான கார்கள், வேன்கள், லொறிகள் இவ்விபத்தில் சிக்கியுள்ளன.

ஹெனான் மாகாணத்தின் ஸெங்ஸோ நகருக்கருகில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதனால் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறைந்தபட்சம் 200 வாகனங்கள் இவ்விபத்தில் சிக்கியிருக்கலாமென சீன அரச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. பனி மூட்டம் காரணமாக, வீதி தெளிவில்லாத நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஸெங்ஸோ நகரின் மஞ்சள் ஆற்றுப் பாலத்தில் புதன்கிழமை (28) காலை இச்சம்பவம் இடம்பெற்றதெனவும், இதில் ஒருவர் உயிரிழந்தார் எனவும் அரச அதிகாரிகள் தெரிவித்ததாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## மருந்து விலை குறைப்பு...

தெரிவித்தார். இதுபற்றி அவர் கூறியதாவது,நாட்டில்,சுமார் 1,300 வகையான மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. எனினும், 100 வகையான மருந்துகளுக்கு மட்டுமே விலைக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. கட்டுப்படுத்தப்பட்ட விலையில் மருந்துகள் சந்தையிலிருக்கும்போது, தனியார் துறையில் எஞ்சியிருக்கும் மருந்துகள் 100% முதல் 300%, 600% வரை மிக அநியாயமாக விலை உயர்வுக்குட்பட்டு விற்கப்படுவதைக் காண்கிறோம்.

இதனால்,மக்களுக்கு எவ்வாறு நிவாரணங்களை வழங்குவது என்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கும் சுகாதார அமைச்சருக்குமிடையிலான இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு கவனம் செலுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், சுகாதார அமைச்சின் தரப்பிலிருந்தும் மருத்துவ நிபுணர்களென்ற வகையிலும், இந்த நேரத்தில் மக்களுக்கு மருந்து நிவாரணம் கிடைக்க வேண்டுமென்று தாங்கள் நம்புவதாகவும் அவர், தெரிவித்துள்ளார்.

## வியட்நாமிலிருந்து நாடு...

சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக கனடாவுக்கு செல்ல முயற்சித்தபோது, கடந்த நவம்பர் 08ஆம் திகதி அவர்கள் பயணித்த கப்பல் பழுதடைந்தது.

இதனையடுத்து ஜப்பானிய கப்பல் ஒன்றினால் அவர்கள் மீட்கப்பட்டு வியட்நாமுக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

மீட்கப்பட்ட 303 இலங்கையரையும் மீண்டும் இலங்கைக்கு அனுப்புவதற்கான முயற்சிகளை வியட்நாம் அதிகாரிகள் மேற்கொண்டனர்.இதையடுத்து,அதற்கு எதிர்ப்பு தெரிவித்து இரண்டு இலங்கையர் தமது உயிரை மாய்க்க முயற்சித்தனர்.

அவர்களில் யாழ்ப்பாணம் சாவகச்சேரியை சேர்ந்த சுந்தரலிங்கம் கிரிதரன் என்பவர் உயிரிழந்தார். உயிரிழந்தவரின் சடலத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறு உறவினர் கோரிக்கை விடுத்ததையடுத்து, அவரது சடலம் நீண்ட நாட்களின் பின்னர் கடந்த 17ஆம் திகதி இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதனையடுத்து அங்கு மீதமிருந்த 302 பேரில் 152 பேர் மீண்டும் இலங்கைக்கு திரும்புவதற்கு இணக்கம் வெளியிட்டனர்.

இந்நிலையில், 152 பேரும் விசேட விமானம் மூலம் நேற்று முன்தினம் இரவு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

வியட்நாம் நேரப்படி மாலை 05 மணியளவில் இலங்கை நோக்கி புறப்பட்ட இவர்கள், நேற்று முன்தினம் இரவு சுமார் 10.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

## இணையவழி ஊடாக...

கணினி குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

ஹோட்டல்கள் உட்பட வர்த்தக நிலையங்களில் பாரிய மின்சாரக் கட்டணங்களை தமக்கூடாக இணையத்தளம் மூலம் செலுத்தும்போது, 25 வீத கழிவை பெற்றுத் தருவதாகக் கூறி, இந்நபர் பல்வேறு நிறுவனங்களிலும் பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார். இவ்வாறு பெற்றுக் கொண்ட பணத்தை அவர் மோசடி செய்துள்ளதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய மோசடியை கடந்த செப்டெம்பர் (15) முதல் நவம்பர் (25) வரை இவர் மேற்கொண்டுள்ளார்.. மூன்று மாத காலமாக இம் மோசடிகளில்இவர்,

ஈடுபட்டுள்ளமை விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மின்சார சபையின் ஒன்லைன் மூல அறவீடு தரவுகளில் மற்றும் வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ள பணம் ஆகியவற்றுக்கிடையில் வித்தியாசம் காணப்பட்டுள்ளதை, மின்சார சபையின் கணக்குப் பிரிவு கண்டுபிடித்துள்ளது.இதையடுத்தது இது தொடர்பில் கடந்த நவம்பர் (25) பரிசீலனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் சுமார் 400 மின் பாவணையாளர்கள் ஒன்லைன் மூலமாக பணம் செலுத்தியுள்ளமையும் அறவீட்டுத் தொகுதியில் பதிவாகியுள்ளது. எனினும்,இப்பணம் வங்கிகளில் வைப்பிலிடப்படவில்லை.

இது தொடர்பில், மின்சாரசபையின் தொழில்நுட்ப பிரிவு பரிசீலனைகளை மேற்கொண்டுள்ளது.

## கிளிநொச்சி புதிய பஸ் நிலையம்...

நிலையத்தின் நிர்மாணப் பணிகளுக்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை 94 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரை இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனம் இதன் ஒருபகுதியில் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டது. பின்னர், நகர அபிவிருத்தி அதிகாரசபை இங்கு 2020 இல் கட்டுமானப் பணிகளை ஆரம்பித்து 2022 மே மாதம் நிறைவு செய்தது. வட மாகாண சபைக்குச் சொந்தமான காணியில் இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி புதிய பஸ் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன், இதுவரை மக்களிடம் கையளிக்கப்படவில்லையென அண்மையில் நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுடன் நடத்திய சந்திப்பில் தெரியவந்துள்ளது.

இந்த புதிய பஸ் நிலையத்தை மக்களிடம் கையளிக்க உடனடியாக ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இப் புதிய பஸ் நிலையம் பல மாதங்களாக திறக்கப்படாமலிருந்தது. இதனால் தற்போது பொதுமக்கள் மிகுந்த சிரமத்துக்காளாகி வருகின்றனர்.

அண்மைக்கால பொருளாதார நெருக்கடியால், அரச நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த கட்டுமானப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. இதன்படி, நகர அபிவிருத்தி அதிகார சபையால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை தற்காலிகமாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்தத் திட்டங்களை ஜனவரி மாதம் முதல் மீண்டும் ஆரம்பிக்க அமைச்சர் ஏற்கனவே அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

## யாழ்.சென்ற லொறியுடன்...

இருவர் பலியாகியுள்ளனர்.

அநுராதபுரம் பாதெனிய பிரதான வீதியின் தமுத்தேகம கோன்வெவ பகுதியில், கடந்த (27) நேற்று மாலை 4.45 மணியளவில் இக்கோர விபத்து இடம்பெற்றதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த மேலும் இருவர், சிகிச்சைக்காக தம்புத்தேகம ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். கல்கமுவ,மஹகல்கடவள பகுதியை வசிப்பிடமாக கொண்ட 24,29 வயதுடய இருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது.

தமுத்தேகம பகுதியிலிருந்து கல்கமுவ பகுதிக்கு பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கர வண்டியொன்று, அதே திசையில் சென்று கொண்டிருந்த வாகனத்தை முந்திச் செல்வதற்கு முற்பட்டது.இதன் போது எதிர்திசையில் வந்து கொண்டிருந்த லொறியுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் உயிரிழந்த இருவருடய சடலங்கள் தற்சமயம் தம்புத்தேகம வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. விபத்துடன் தொடர்புடைய ஊர்காவற்றுறை பகுதியை வசிப்பிடமாக கொண்ட 32 வயது சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்புத்தேகம பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி, உப பொலிஸ் பரிசோதகர் என்.ஏ.திலக்கரத்ன உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## அநுராதபுரம் ஓமந்தை ரயில்...

ரயில்களும் வழமை போன்று அநுராதபுரம் வரை சேவையில் ஈடுபடுத்தப்படும். இந்திய டெல்கொன் நிறுவனம் இந்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளவுள்ளது. நவீன தொழிநுட்பங்களைப் பயன்படுத்தி இதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். இந்த அபிவிருத்திப் பணிகளால் ஏற்படும் சிரமங்களை பொறுத்துக் கொண்டால், எதிர் வரும் காலங்களில் சிறந்த ரயில் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இத்திட்டம் பூரணப்படுத்தப்பட்டதுடன் வடக்குக்கான ரயில்கள் சுமார் 100 கிலோ மீற்றர் முதல் 120 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கும். இதனால், சுமார் ஒரு மணி நேரத்தைமீதப்படுத்த முடியுமென்றும் அமைச்சர் தெரிவித்தார். தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலே அமைச்சர் இவற்றைத் தெரிவித்தார்.இந்திய இர்கொன் நிறுவனத்தின் பணிப்பாளர்களான குரு பட்சன், சி.கே.பன்டிட் ஆகியோரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

## அம்பேவெல பால் பண்ணைக்கு...

'யுனைடட் டெய்ரீஸ் லங்கா லிமிடட் அம்பேவெல' புதிய பிரிவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க (27) கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார்.இதன்போதே,அவர் இப்பணிப்புரையை விடுத்தார்.

அம்பேவெல பண்ணையின் பால் உற்பத்தித் துறையில் எட்டப்பட்டுள்ள முறையான வளர்ச்சியைப் பாராட்டிய ஜனாதிபதி, இது ஏனைய பண்ணைகளுக்கு முன்னுதாரணமாகத் திகழ்வதாகத் தெரிவித்தார். இலங்கையிலுள்ள பல்கலைக்கழக மாணவர்களின் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மற்றும் அனுபவத்துக்காக இப்பண்ணையை திறந்து வைப்பதுடன், இதற்குத் தேவையான பின்புலத்தை தயார்படுத்துமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

இலங்கை மற்றும் தெற்காசியாவின் பால் உற்பத்தி, பண்ணை தொடர்பான அதியுயர் தொழில்நுட்ப பயன்பாட்டின் பிரதான மத்திய நிலையமாக அம்பேவெல பண்ணை, செயற்பட்டு வருவதாக அம்பேவெல பண்ணைக் குழுமத்தின் பொது முகாமையாளர் சரத் பண்டார குறிப்பிட்டார்.

'யுனைடட் டெய்ரீஸ் லங்கா லிமிடட் அம்பேவெல' புதிய பிரிவில் தற்போது சுமார் 1,000 கறவை மாடுகள் உள்ளன.இவற்றிலிருந்து தினமும் பால் சேகரிக்கப்படுகிறது. இந்த மாடுகளிடமிருந்து தினமும் 03 முறை பால் கறக்கப்படுவதோடு நாட்டின் பால் தேவையின் 40,000 லீற்றர் திரவப் பால் இப்பண்ணை உள்ளிட்ட ஒட்டுமொத்த அம்பேவெல கட்டமைப்பிலிருந்து சந்தைக்கு விநியோகிக்கப்படுகி றது.

இக்கறவை மாடுகளைப் பராமரித்தல், தேவையான உணவு மற்றும் பானங்கள் வழங்குதல், எடை நிறுத்தல் , நோய் நிலைகளைக் கண்டறிதல், நோய் நிலைமைக் காணப்பட்டால் மாடுகளைப் பிரித்தெடுத்தல் போன்ற அனைத்துச் செயற்பாடுகளும் இயந்திரம் மூலம் சுயமாக நடைபெற்று வருகின்றன.

அம்பேவெல பண்ணைக் கட்டமைப்பு முழுவதும் உள்ள 4,500 மாடுகளுக்கு தற்போது உணவளிக்கப்படுகின்றது. 2001 ஆம் ஆண்டு அம்பேவெல குழுமம் நிறுவப்படுவதற்கு முன்னர், அது அரசாங்கத்துக்குச் சொந்தமாக இருந்தபோது, நாளொன்றுக்கு 1,500 லீற்றர் பால் மட்டுமே சந்தைக்கு விநியோகிக்கப்பட்டது.

தற்போது சிறந்த கறவை மாடுகளை இலங்கையில் உருவாக்குவதில் அம்பேவெல கட்டமைப்பு கடந்த 15 ஆண்டுகளுக்குள் வெற்றி கண்டுள்ளது. மேலும் கறவை மாடுகளை இனப்பெருக்கம் செய்வதற்காக உலகில் தற்போதுள்ள அதிநவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. அதற்கமைய உலகிலுள்ள உயர் ரக ஆண் மாடுகளின் விந்துக்களை இறக்குமதி செய்து, மரபணு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, இலங்கைக்குப் பொருத்தமான கறவை மாடுகளை இனப்பெருக்கம் செய்வது இந்நிறுவனத்தின் செயற்பாடுகளில் ஒரு பகுதியாக உள்ளது.

அதேபோன்று, கறவை மாடுகளுக்கு உணவளிப்பதன் மூலம் சுமார் ஆயிரம் பேருக்கு மறைமுக வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. சோள விவசாயிகளின் முழுமையான விளைச்சலை அம்பேவெல பண்ணைக்கு பெற்றுக்கொள்ளும் பொறிமுறையொன்றும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டுக்கு சுமார் 25,000 மெற்றிக் தொன் சோளப் பயிர்களை சேகரித்து, சேமித்து வைக்கும் வசதியும் அம்பேவல கட்டமைப்பிலுள்ளது.

## லிட்ரோ Gas போதுமான...

லிட்ரோ நிறுவனம் இந்த விசேட அறிவிப்பை வெளியிட்டுள்ளது. சமையல் எரிவாயு குறித்து பொது மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நுகர்வுக்கு தேவையான அளவு எரிவாயு கையிருப்பில் இருக்கிறது. கொவிட்19 தொற்று காரணமாக இரண்டு வருடங்களின் பின்னர், நத்தார் மற்றும் புதுவருட கொண்டாட்டங்கள் காரணமாக எரிவாயுவுக்கு அதிகளவிலான கேள்வியும் நிலவுகிறது. நாட்டுக்கு மாதாந்தம் 24,000 மெற்றிக்தொன் எரிவாயு தேவைப்படுகிறது.இருந்தபோதிலும் இம்மாதம் 35,000 மெற்றிக் தொன் எரிவாயு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. ஜனவரி மாதத்துக்குத் தேவையான எரிவாயு அளவை விட மேலதிகமாக 27,000 மெற்றிக்தொன் எரிவாயுவைக் கொள்வனவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனவே, நாட்டு மக்கள் அச்சமின்றி எரிவாயு கொள்வனவு செய்ய முடியும். இதனிடையே அடுத்தாண்டு முதலாவது எரிவாயு விலை திருத்தத்தின் போது விலை குறைவடையுமென்று உறுதியாக எதிர்பார்க்க முடியாது. இதேவேளை, டிசம்பர் மாதத்தில் ஐரோப்பாவில் அதிகளவிலான எரிவாயு நுகரப்படுகின்றமை, ரஷ்யா உக்ரேன் யுத்தம் மற்றும் பல்வேறு நாடுகளில் காணப்படும் குளிரான காலநிலை காரணமாக எரிவாயுவுக்கான விலை அதிகரிக்கப்படும் சாத்தியம் காணப்படுவதாக குறிப்பிட்டார்.

## சுற்றுலா பயணிகளின்... 03ஆம் பக்கத் தொடர்

பயணிகள் நாட்டிற்கு வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2021 இல் 194,495 சுற்றுலாப் பயணிகளே இலங்கைக்கு வந்திருந்தனர். இதுவரை வெளியாகியுள்ள தரவுகளின்படி, இம்மாதம் (26) வரையில் 73,314 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளதாகத் தெரிகிறது. 2023 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் கணிசமான எண்ணிக்கையிலான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வரத் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ரயில்வே வருமானமீட்டும்... 03ஆம் பக்கத் தொடர்

ரயில் பாதை பெரும் பாதிப்புகளுக்குள்ளானது. கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ், மாகோ ,காங்கேசன்துறைக்கிடையிலான ரயில் பாதையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு யுத்தத்தின் பின்னர் மீண்டும் திறக்கப்பட்டது. 100 வருடங்களுக்கு மேல் எத்தகைய அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படாத அநுதராதபுரம் ஓமந்தை ரயில் பாதையை முழுமையாக அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## மூலப்பொருள் விநியோகத்துக்கென...

இத்திட்டத்தின் கீழ், தெற்காசிய கேட்வே டேர்மினல்ஸ் நிறுவனம் மற்றும் சுகாதார அமைச்சுக்கிடையில் விசேட புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ரிபோஷாவை ஒரு வருடகாலத்துக்கு உற்பத்தி செய்வதற்குத் தேவையான மூலப்பொருட்களை வழங்கும் வகையிலே இவ்வொப்பந்தம் கைச்சாத்தானது.

இதற்காக 185 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் , தெற்காசிய கேட்வே டேர்மினல்ஸ் நிறுவனத்தின் நிறைவேற்றதிகாரி ரொமேஷ் டேவிட், சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த மற்றும் திரிபோஷா நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன ஆகியோர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

எடை குறைவான குழந்தைகளுக்கு திரிபோஷா வழங்கும் ஒரேயொரு நாடாக இலங்கை மாத்திரமே உள்ளது. கர்ப்பிணிகள் , பாலூட்டும் தாய்மார் மற்றும் குழந்தைகளுக்காக மாதமொன்றுக்கு சுமார் ஒரு இலட்சம் திரிபோஷா பக்கட்டுக்கள் விநியோகிக்கப்படுகின்றன.

## தேய்பிறையாகி அமாவாசையை...

அனந்தி சசிதரன், அருந்தவபாலன் போன்று பலரை தமிழரசுக் கட்சிதான் வெளியேற்றியது. எல்லோரும் பிரிந்து செல்கின்றனர். ஆரம்பத்தில் 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் பின்பு 16 பாராளுமன்ற உறுப்பினர்கள். இப்போது 10 பேர் என்று கூட்டமைப்பின் ஆதரவு சுருங்கி வருகிறது.

கூட்டமைப்பு இப்போது தேய்பிறையாக மாறி, அமாவாசையை நோக்கிச் செல்வது போலுள்ளது. இதனால் ஏற்படப்போகும் இருள் கட்சிக்கு மாத்திரமல்ல தமிழ் மக்களுக்கும்தான்.

எமது கட்சி கடந்த பாராளுமன்றத் தேர்தலில் உடுப்பிட்டித் தொகுதியில் மூன்றாம் இடத்தையே பெற்றது. முதலிடத்தில் சிங்கள தேசியக் கட்சி பெற்றது.

நாம் இன்னமும் பிரிந்து – பிளவுபட்டு நிற்போமென்றால் உடுப்பிட்டித் தொகுதியில் கிடைத்த இடம்தான், எல்லாத் தொகுதிகளிலும் கிடைக்கும்.

வீட்டுச்சின்னத்துக்குத்தான் மக்கள் வாக்களிப்பரென்ற நிலைமை இப்போது மாறிவிட்டது. நாம் பிளவுபட்டு நிற்பதால் கூட்டமைப்பு மீது மக்கள் நம்பிக்கையை இழந்து விட்டனர். இவ்வளவுக்கும் காரணம் கூட்டமைப்பின் தலைமைதான்.

ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களின் தான்தோன்றித்தனமான முடிவுகளுக்கு இடம் கொடுத்தமையால்தான், இந்நிலைமை ஏற்பட்டது. எதிர்காலத்தில் கட்சியில் ஒரு நிபுணத்துவக் குழுவை அமைத்து கட்சியை ஜனநாயகப் பண்பாக மாற்றுவோம்.

முதலில் தமிழரசுக் கட்சியைச் சீர்திருத்த ஒரு நிபுணர் குழுவை அமைப்போம். தமிழரசுக் கட்சியை சீராக்கி, பின்னர் ஏனைய கட்சிகளை விமர்சிப்பதே பொருத்தம். தமிழ்த் தேசியக் கட்சிகளை இணைத்தே இனிவரும் தேர்தல்களை எதிர்கொள்ள வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

## போலி தகவல்களை வழங்கி...

செய்யும் திணைக்களம் ஆகியன புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

வெளிநாடு செல்ல முற்படும் நபர்கள் பல்வேறு காரணங்களை அடிப்படையாக வைத்து, தமது தனிப்பட்ட தகவல்களை மாற்றி இதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வதாக முறைப்பாடுகள் கிடைத்தன.

இம் முறைப்பாடுகளை கவனத்திற் கொண்டு, இதனைத் தடுக்கும் வகையிலேயே மேற்படி புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. இதற்கிணங்க சந்தேகத்திற்கிடமான நபர்களின் தகவல்களை உடனடியாக பரிசீலனை செய்யும் வகையில், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் கணினி தொகுதியை பரிசீலனை செய்வதற்கு இந்த ஒப்பந்தம் மூலம் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் பணியகம் தெரிவித்துள்ளது.

# நத்தார் வழிபாடு செய்த இந்திய ஜனாதிபதி; டில்லி இருதய மாதா கோவிலில் பிரார்த்தனை

இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு கடந்த 24ம் திகதி டில்லி புனித இருதய மாதா ஆலயத்துக்கு விஜயம் செய்து நத்தார் ஆராதனையில் கலந்து கொண்டு பிரார்த்தனை செய்தார். மனித குல உய்வுக்காக பிரார்த்தித்த அவர் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டதோடு சிறுவர் சிறுமியரோடு மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார்.

சகல மனிதருக்குமான சமாதான மற்றும் சகோதரத்துவத்துக்கான குறியீடாக நத்தார் விளங்குகிறது என்று தன் நத்தார் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ள இந்திய ஜனாதிபதி, கருணை மற்றும் தியாகத்தால் இயேசு கிறிஸ்து மக்களுக்கு விடுத்திருக்கும் செய்தியை புரிந்து கொண்டு அன்பு மற்றும் பரிவுடன் மக்கள் ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும் என இந்திய மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதே சமயம் இந்திய உப ஜனாதிபதி ஜக்தீப் தன்கர் நாட்டு மக்களுக்கு விடுத்திருக்கும் நத்தார் வாழ்த்துச் செய்தியில், அன்பு மற்றும் கருணையால் உருவாக்கப்பட்ட பாதையை இயேசு காட்டியிருப்பதாகவும் அதன் மூலம் அமைதியும் சகிப்புத்தன்மையும் சமூகத்தில் உருவாகும் என்றும் நீடித்த உலக அமைதிக்கு அது வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# பெட்ரோலியத்துக்கு மாற்றாக பசுமை எரிசக்தி பயன்பாட்டுக்கு வரும்

## இந்திய எரிசக்தி அமைச்சர் அறிவிப்பு

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்கு திட்டங்களின் பிரகாரம் 2047ம் ஆண்டு இந்தியா முழுமையான அபிவிருத்தி அடைந்த நாடாக மாறும் எனவும் அதே சமயம் இந்தியாவின் இலக்கான பசுமை எரிசக்தி, மின்சக்திக்கு மாறும் கோட்பாட்டில் இருந்து இந்தியா எந்த விட்டுக் கொடுப்பும் செய்யாது என்றும் நாட்டின் பெற்றோலிய அமைச்சர் ஹர்தீப் சிங்பூரி தெரிவித்துள்ளார்.

எரிசக்தி துறையில் மாற்றங்களை ஏற்படுத்தும் பொருட்டு பெருமளவு முயற்சிகளை இந்தியா மேற்கொண்டு வருவதாகவும், உற்பத்தித் துறையில் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்துதல், எரிசக்திக்கான புதிய கட்டமைப்புகளை உருவாக்குதல், உலகின் உற்பத்தி நிலையமாக இந்தியாவை மாற்றி அமைத்தல் என்பனவற்றில் முதலீடுகள் செய்ய பொருத்தமான நாடாக இந்தியா விளங்கும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

பெங்களூரில் நடைபெற்ற 'இந்திய எரிசக்தி வாரம்' என்ற கண்காட்சியை திறந்துவைத்து உரையாற்றிய போது இவ்வாறு தெரிவித்த மத்திய அமைச்சர் பூரி, 2030 அளவில் ஐந்து மில்லியன் தொன் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

கடந்த 12ம் திகதி எரிசக்தி பாதுகாப்பு திருத்த சட்டம் ராஜ்யசபாவில் நிறைவேற்றப்பட்டது. பெற்றோலிய எரிசக்திக்கு மாற்றாக மீளப்பயன்படுத்தும் எரிசக்தியாக ஹைட்ரஜனும், அம்மோனியாவும் பயன்பாட்டுக்கு கொண்டு வருவது தொடர்பிலான சட்டம் இது என்றும் பசுமை எரிசக்தி சாதாரண மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என்று கூறிய அமைச்சர், ஜி20 அமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றுள்ள நிலையில் சர்வதேச உயிரியல் எரிசக்தி கூட்டமைப்பு ஒன்றை அமைச்ச இந்தியா விரும்புவதாகவும் அவர் கோடிட்டுக் காட்டினார்.

இதே சமயம் பிரெஞ்சு பத்தி எழுத்தாளர் ஒலிவியர் கில்லார்ட், ஜி20 அமைப்பின் தலைமைப் பதவியை ஏற்றிருக்கும் இந்தியா, மீளப் பயன்படுத்தும் எரிசக்தி உற்பத்தியில் மூன்றாவது நாடாகத் திகழ்வதால் மாற்று எரிசக்தி உற்பத்தியில் பெருமளவு அபிவிருத்தி அடையும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.






கண்டி மனித அபிவிருத்தி தாபனத்தினால் நாட்டின் பொருளாதார நெருக்கடியைக் கருத்திற் கொண்டு "உணவைப் பாதுகாப்போம்" எனும் செயற்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு மூன்று மாத காலம் சத்துணவு வழங்குதல் மற்றும் வீட்டுத் தோட்டச் செய்கைக்காக விதைகள், விவசாய உபகரணங்கள், நிதி உதவிகள் வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் தெல்தோட்டை கிறேட் வெளி தமிழ் தோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்குதல் மற்றும் வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்கு விதைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மனித அபிவிருத்தி தாபனத்தின் திட்டமிடல் அதிகாரியும் பெண்கள் அமைப்பின் தலைவியுமான லோகேஸ்வரியினால் சத்துணவு மற்றும் வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்கு விதைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

(படங்கள்: மாவத்தகம தினகரன் நிருபர்)

# மட்டக்களப்பு வாவியில் நீர்த்தாவரம்; வாவி மீனவர்களின் தொழில் பாதிப்பு



மட்டக்களப்பு விசேட நிருபர்

மட்டக்களப்பு கல்லடிப்பாலம், கோட்டைமுனைப்பாலம், பூம்புகார் புதிய வெள்ளைப்பாலம் ஆகியவற்றை அண்டிய வாவியில் நீர்த்தாவரங்கள் படர்ந்துள்ளதால், தமது வாழ்வாதாரத் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக, வாவித் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

தற்போது இவ்வாவியில் சல்பீனியா, ஆத்துவாழை உள்ளிட்ட நீர்த்தாவரங்கள் இவ்வாவியில் படர்ந்துள்ளதால், வலை வீசி மீன்பிடிக்க முடியாமல் உள்ளதாகவும், இத்தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலை நம்பி 28,182 மீனவர்கள் உள்ளதுடன், வாவித் தொழிலை நம்பி 17,803 மீனவர்கள் உள்ளதாக, மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் திணைக்களம் தெரிவித்தது.

# சிறுவனின் மண்வெட்டி தாக்குதலில் குடும்பஸ்தர் காயம்

றொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் மஹதிவுல்வெவ பகுதியில் சிறுவனொருவனால் மண்வெட்டியால் தாக்கப்பட்ட இளம் குடும்பஸ்தரொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விகாரகம பகுதியைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான 26 வயதுடைய டபிள்யூ. பீ.கே.ஜானக குமார பெரேரா என்பவரே இந்த அசம்பாவிதத்தை நேற்று (28) எதிர்நோக்கியுள்ளார். இச்சம்பவத்தில் காயமடைந்த குடும்பஸ்தர், மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக, வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, மஹதிவுல்வெவ குளத்தில் மீன் பிடிப்பதற்காக இச்சிறுவன் சென்ற போது, அவனை மீன் பிடிக்க விடாமல் மேற்படி குடும்பஸ்தர் தடுத்து வீட்டுக்கு அனுப்பியுள்ளார். இதனையடுத்து, வீதியில் நேற்றுக் காலை நின்ற இச்சிறுவனை இக்குடும்பஸ்தர் தாக்குவதற்கு முற்பட்ட போது, ஆத்திரமடைந்த இச்சிறுவன், குடும்பஸ்தரை மண்வெட்டியால் தாக்கியதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்தது. எனினும், இக்குடும்பஸ்தர் தன்னைத் தாக்கியதாக மொரவெவ பொலிஸ் நிலையத்தில் அச்சிறுவன் முறைப்பாடு செய்துள்ளார்.



## விற்பனை உரிமையை குத்தகைக்கு விடல்

## மிஹிந்தலை பிரதேச சபை – 2023

மிஹிந்தலை பிரதேச சபைக்கு சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் வர்த்தக உரிமையை - 2023 ஜனவரி 13ம் திகதி முதல் 2023 டிசம்பர் 31 வரை குத்தகைக்கு விடுவதற்காக பொறியிடப்பட்ட விலைமனுக்கள் என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவங்களை 2022.12.29 முதல் 2023.01.11ம் திகதி மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை விநியோகிக்கப்படுவதுடன், பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2023.01.12ம் திகதி பி.ப. 2.00 வரை என்னால் ஏற்கப்படும். படிவக் கட்டணம் மற்றும் கேள்விப் பிணைத் தொகையைச் செலுத்தி கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 2023.01.12 பி.ப. 2.00 இற்கு மிஹிந்தலை பிரதேச சபை அலுவலகத்தில் கேள்விச் சபையினால் திறக்கப்படும். அத்தினத்தில் உங்களுக்கு அல்லது உங்களது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்க முடியும்.

சித்திகரமான கேள்விதாரரால் கேள்வித் தொகையின் 1/3 தொகை மற்றும் 2023 ஜனவரி மாத தவணைக் தொகையை அன்றே செலுத்தி உடன்படிக்கைக்கு வரல் வேண்டும்.

உங்களது விலைமனுக்களை 2023.01.12ம் திகதிக்கு முன்னர் பி.ப. 2.00 இற்கு முன் "தலைவர்", பிரதேச சபை, மிஹிந்தலை என்ற பெயரில் பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து பிரதேச சபையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

இது பற்றி மேற்கொள்ளப்படும் இறுதித் தீர்மானம் கேள்விச் சபைக்கு உரியது.

**மேலதிக விபரங்களுக்கு**

தொலைபேசி இல. : 025-2266560 ஐ விசாரித்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**அட்டவணை**

| தொடர் இல. | வர்த்தக உருப்படி | 2023 குறைந்த பட்ச கேள்வி | கேள்விப் பிணை வைப்புக்கள் | விண்ணப்பப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | கட்டுகெலியாவ இறைச்சிக் கடை | 1,000,000.00 | 50,000.00 | 1,000.00 |

**தலைவர்,**
**பிரதேச சபை,**
**மிஹிந்தலை.**

காணி அமைச்சு

காணிச் சீர்திருத்த ஆணைக்குழு

## 2023 ஆண்டிற்காக உத்தரவாதம் பெற்ற நில அளவையாளர்களைப் பதிவு செய்தல்

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினால் 2023ம் ஆண்டிற்கு காணிகளின் அளவை விடயங்களுக்காக தகைமைகளைக் கொண்ட உத்தரவாதம் பெற்ற நில அளவையாளர்களைப் பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களை www.lrc.gov.lk என்ற காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும் அத்துடன், உங்களால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் வருடாந்த நில அளவை அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றுடன் 2023.01.14 அல்லது அதற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கொண்டு வந்து ஒப்படைப்பதுடன், உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பங்களை கவனத்தில் கொண்டதன் பின்பு தகைமையுடைய விண்ணப்பதாரிகளுக்கு அறிவித்தல் கொடுக்கப்படும். (விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 2023ஆம் ஆண்டிற்கு நில அளவையாளர்களைப் பதிவு செய்தல்" என்று குறிப்பிடுங்கள், அவ்வாறு அறிவிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் நிலஅளவை நிபந்தனைகளுக்கு உற்பட்டு பதிவு செய்வதற்காக மீளளிக்கப்படாத ரூ. 5,000 + SSCL + VAT தொகையை கைக்காசில் மாத்திரம் காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவின் தலைமையகத்திற்கு அல்லது மாவட்ட அலுவலகத்திற்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

பதிவு சம்பந்தமான மேலதிக விபரங்களை உதவிப்பணிப்பாளர் (அளவை மற்றும் வேறு பிரித்தல்) இடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல:- 076-7998649/ 011-2144795 நீடிப்பு - 142)

**சட்டத்தரணி நிலந்த விஜேசிங்ஹ**
**தலைவர்,**
**காணி சீர்திருத்த ஆணைக்குழு.**

**இல. 475, கடுவளை வீதி,**
**பத்தரமுல்ல,**

2022.12.29

NSB National Savings Bank

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**கேள்வி இல.: NSB/PT/ITE/2023/01**

**தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்கு 400 எண்ணிக்கையுடைய UPS Solution ஐ வழங்கல், நிறுவுதல், செயற்படவைத்தல் மற்றும் ஒப்படைத்தல்.**

UPS ஐ வழங்குவதற்காக புகழ்வாய்ந்த முதன்மையான தயாரிப்பாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற இலங்கையிலுள்ள உள்ளூர் முகவர்கள் ஆகியோரிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| **பெறுகையின் விளக்கம்** | கிளைகளுக்காக 100 எண்ணிக்கையுள்ள **UPS Solution** |
| **பெறுகையின் முறைமை** | தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் |
| **ஏற்புடையதான மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்** | 12,000 ரூபா |
| **சமர்ப்பிக்க வேண்டிய விலைமனு உத்தரவாத பெறுமதி** | 450,000 ரூபா |
| **விலைமனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம்** | 2023.01.24 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |
| **கேள்வியை மூடும் திகதி மற்றும் நேரம்** | 2023.01.25 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |

1. முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது எந்தவொரு கேள்விதாரருக்கு அல்லது பெயர் குறிப்பிட்டவருக்காக அல்லது அவரின் சார்பாக செயற்படுபவர் கேள்விக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னராகவும் கேள்வியை வழங்கிய பின்னரும் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்வது கட்டாயமானதொன்றாகும்.
2. கொழும்பு-03, காலி வீதி, 255 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல் பிரிவின் வழங்கல் முகாமையாளரிடமிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் படிவங்கள் 2022.12.29 ஆம் திகதியிலிருந்து 2023.01.24 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றின் மூலமாக படிவங்கள் வழங்கப்படும்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் தேசிய சேமிப்பு வங்கியினால் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் மேலே சுட்டிக் காட்டியவாறு கேள்விக்கு உரித்தான பெறுமதிக்கான வங்கி உத்தரவாதம்/ விலைமனு பிணையத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமெனவும் இந்த உத்தரவாதமானது வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதாகவும் ஆகக் குறைந்த கால எல்லையாகிய 120 நாட்காட்டி நாட்களுக்கு கேள்வியை திறக்கும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் குறிப்பிட்டுள்ள திகதியன்று மு.ப. 10 மணிக்கு அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன் மு.ப. 10 மணிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
5. தேசிய சேமிப்பு வங்கியானது எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்குமான உரிமையையும் விலைமனுவொன்றின் பகுதியொன்றையும் எந்தவொரு காரணங்களையும் முன்வைக்காமல் ஏற்றுக் கொள்வதற்குமான உரிமையை கொண்டுள்ளது.

மேலதிக விபரங்களை வழங்கலுக்கான சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர் - கூட்டுரு பெறுகைக் குழு - உயர்மட்டம்,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல.: 255, காலி வீதி, கொழும்பு-03.**

NSB National Savings Bank

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**கேள்வி இல.: NSB/PT/ITE/2023/03**

**தேசிய சேமிப்பு வங்கிக்கு 400 எண்ணிக்கையுடைய Signature Pad and Photo Capture (Camera) ஐ வழங்கல், நிறுவுதல், செயற்பட வைத்தல் மற்றும் பராமரிப்பு**

Signature Pad and Photo Capture (Camera) ஐ வழங்குவதற்காக புகழ்வாய்ந்த முதன்மையான தயாரிப்பாளர்கள்/ வழங்குனர்கள் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற இலங்கையிலுள்ள உள்ளூர் முகவர்கள் ஆகியோரிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| **பெறுகையின் விளக்கம்** | **Signature Pad and Photo Capture (Camera) 400 Nos.** |
| **பெறுகையின் முறைமை** | தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் |
| **ஏற்புடையதான மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்** | 12,000 ரூபா |
| **சமர்ப்பிக்க வேண்டிய விலைமனு உத்தரவாத பெறுமதி** | 440,000 ரூபா |
| **விலைமனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம்** | 2023.01.31 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |
| **கேள்வியை மூடும் திகதி மற்றும் நேரம்** | 2023.02.01 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| **விலைமனு முன்னோடிக் கூட்ட திகதி மற்றும் நேரம்** | 2023.01.17 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |

1. முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது எந்தவொரு கேள்விதாரருக்கு அல்லது பெயர் குறிப்பிட்டவருக்காக அல்லது அவரின் சார்பாக செயற்படுபவர் கேள்விக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னராகவும் கேள்வியை வழங்கிய பின்னரும் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்வது கட்டாயமானதொன்றாகும்.
2. கொழும்பு-03, காலி வீதி, 255 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல் பிரிவின் வழங்கல் முகாமையாளரிடமிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் படிவங்கள் 2022.12.29 ஆம் திகதியிலிருந்து 2023.01.31 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணிக்கும் பி.ப. 3.30 மணி வரைக்குமிடையில் எழுத்து மூலமான கோரிக்கையொன்றின் மூலமாக படிவங்கள் வழங்கப்படும்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் தேசிய சேமிப்பு வங்கியினால் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் மேலே சுட்டிக் காட்டியவாறு கேள்விக்கு உரித்தான பெறுமதிக்கான வங்கி உத்தரவாதம்/ விலைமனு பிணையத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமெனவும் இந்த உத்தரவாதமானது வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதாகவும் ஆகக் குறைந்த கால எல்லையாகிய 120 நாட்காட்டி நாட்களுக்கு கேள்வியை திறக்கும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் குறிப்பிட்டுள்ள திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன் மு.ப. 10.00 மணிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
5. தேசிய சேமிப்பு வங்கியானது எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்குமான உரிமையையும் விலைமனுவொன்றின் பகுதியொன்றையும் எந்தவொரு காரணங்களையும் முன்வைக்காமல் ஏற்றுக் கொள்வதற்குமான உரிமையை கொண்டுள்ளது.

மேலதிக விபரங்களை வழங்கலுக்கான சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர் - கூட்டுரு பெறுகைக் குழு - உயர்மட்டம்,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல.: 255, காலி வீதி,**
**கொழும்பு-03.**

# கிழக்கின் குரல்



# பாரம்பரிய விவசாயக் காணிகளை விடுவித்து தேசிய உணவு உற்பத்திக்கு இடமளிக்க கோரிக்கை

## அக்கரைப்பற்றில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

அட்டாளைச்சேனை குறூப் நிருபர்




தமது பாரம்பரிய விவசாயக் காணிகளை விடுவித்து, ஜனாதிபதியின் தேசிய உணவு உற்பத்திக்கும் சமூக நல்லிணக்கத்துக்கும் வழி விடுமாறு கோரி அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த மூவின விவசாயிகளும் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் முன்றலில் நேற்று (28) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணியானது ஒழுங்கு செய்த இவ்வார்ப்பாட்டத்தில் நுரைச்சோலை விவசாய அமைப்பு, அம்பலத்தாறு விவசாய அமைப்பு உட்பட பல்வேறு விவசாய அமைப்புகளைச் சேர்ந்த விவசாயிகள் பலர் கலந்துகொண்டதுடன், தமது கோரிக்கைகளை முன்வைத்து கோஷமெழுப்பினர்.

இவ்வார்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட விவசாயிகள் தெரிவித்த போது, "எமது விவசாயக் காணிகளை உறுதிப்படுத்துவதற்குரிய சட்டபூர்வமான பாரம்பரிய ஆவணங்கள் காணப்படுவதுடன், விவசாயம் செய்து வந்த அக்காணிகள், இன வன்முறைச் சூழ்நிலையைப் பயன்படுத்தி தேசிய நல்லிணக்கத்துக்கு எதிரான வர்க்கத்தினர் சூழ்ச்சியாக ஆக்கிரமித்தனர். தேசிய உணவு உற்பத்தியில் 22 சதவீதத்துக்கு மேல் உணவு உற்பத்தியை மேற்கொள்ளும் எமக்கு, இவ்வார்ப்பாட்டம் செய்ய நேர்ந்தமை கவலையளிக்கின்றது.

மேலும், கரும்புச் செய்கையால் பல தசாப்தகாலமாக இயங்கி வந்த ஹிங்குராணை சீனிக் கூட்டுத்தாபனத்துடன் நாமும் சேர்ந்து நட்டத்தை எதிர்நோக்குகின்றோம். இந்நிலையில், எமது காணிகளை எம்மிடம் ஒப்படைக்கும் பட்சத்தில், ஜனாதிபதி முன்னெடுத்துள்ள தேசிய உணவு உற்பத்திக்கும் நாட்டுக்கும் பெரும் உறுதுணையாக இருப்போம்" என்றனர்.

ஆர்ப்பாட்ட இறுதியில் மகஜரொன்றை அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் அஸ் ஷேய்க் ரீ.எம்.எம். அன்சாரிடம் விவசாயிகள் கையளித்தனர்.

# அட்டாளைச்சேனையில் நுளம்புகளை ஒழிக்க புகை விசிறும் நடவடிக்கை



ஒலுவில் விசேட நிருபர்

அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களாக அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் தற்போது புகை விசிறுதல் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி, வைத்தியர் ஏ.எம். இஸ்மாயில் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை ஆகிய பகுதிகளில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதையடுத்து, அப்பகுதிகளில் நுளம்புகள் பரவுவதைக் கட்டுப்படுத்தும் வகையில் சோதனை முன்னெடுக்கப்பட்டதுடன், 2 வாரங்களுக்குள் 6 ஆயிரம் வீடுகள் சோதிக்கப்பட்டன.

அத்துடன், கிணறுகளில் நுளம்புக் குடம்பிகள் உருவாகாமல் இருப்பதற்கு மருந்து இடப்படுவதுடன், குடிநீர்க் கிணறுகளில் மீன் குஞ்சுகளை விடுவதாகவும், அவர் தெரிவித்தார்.

துப்புரவின்றி இடங்களை வைத்திருந்தவர்களுக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டதுடன், காணிகளை துப்புரவு செய்யாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதுடன், ஒலிபெருக்கியில் அறிவித்து வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

# திருகோணமலையில் ISO தரத்துடன் விவசாய தொழில்நுட்ப ஆய்வுகூடம்

## ஒப்பந்தம் கைச்சாத்து



தம்பலகாமம் குறூப் நிருபர்

நாட்டிலேயே முதன்முறையாக ISO தரத்துடன் கூடிய விவசாய தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை நிர்மாணிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகமும் கிழக்கு மாகாணசபையும் இணைந்து கைச்சாத்திட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் தலைமையில் திருகோணமலையில் நேற்று (27) முன்தினம் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.


'நிலையான விவசாயம்' எனும் திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் இப்புதிய ஆய்வுகூடம் நிர்மாணிக்கப்படவுள்ளதுடன்,

இவ்வாய்வுகூடத்தின் மூலம் இயற்கை உரங்கள், இடு பொருட்கள், விதைகள், மண் மாதிரி உள்ளிட்டவை பரிசோதனை செய்யப்பட்டு, அவற்றுக்கு தரச் சான்றிதழ் வழங்கப்படுவது விசேட அம்சமாகும்.

தற்போது மஹஇலுப்பல்லம மற்றும் கன்னொருவ விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களில் 2 ஆய்வுகூடங்கள் உள்ள போதிலும், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் தலையீட்டுடன், அனைத்து வசதிகளுடன் முழுமையான ISO தர நிலைகளுடன் அத்தகைய ஆய்வுகூடமொன்று இல்லை. இந்நிலையிலேயே, ISO தரத்துடன் கூடிய விவசாய தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிய போது தெரிவிக்கப்பட்டது.

# மட்டு. மாநகரசபை ஊழியர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்

மட்டக்களப்பு விசேட நிருபர்



மட்டக்களப்பு மாநகரசபையில் ஓய்வூதியம் பெறும்வரை சேவையாற்றும் அட்டவணைப்படுத்தப்படாத பதவியணியினரின் பிள்ளைகள் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகும் பட்சத்தில், அவர்களின் பட்டப்படிப்புக்காலம் வரை மாதாந்த புலமைப்பரிசில் வழங்கும் திட்டம், 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதாக, அம்மாநகர முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

இத்திட்டத்தில், கிழக்குப் பல்கலைக்கழகமாயின் மாதாந்தம் தலா 5,000 ரூபாவும் வெளிமாவட்டப் பல்கலைக்கழகமாயின் 8,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகரசபையின் 68ஆவது அமர்வில், எதிர்வரும் 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பு நேற்று (27) முன்தினம் நிறைவேற்றப்பட்ட பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே, அவர் இதனைக் கூறினார்.

இச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்த போது,

"2023ஆம் ஆண்டுக்கான சபையின் எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம் 469.2 மில்லியன் ரூபாவாகும். இதில் 100 ரூபாவை மிகையாக வைத்துக்கொண்டு, ஏனைய வருமானத்தை பல்வேறு சமூக நலத் திட்டங்களுக்காக பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலதிகமாக உலக வங்கி, UNICEF, உள்ளூர் நிலைபேறான அபிவிருத்தித் திட்டங்கள் (LDSP) மூலம் நிதி எதிர்பார்க்கப்பட்டு இவ்வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் நகரின் மத்தியில் கடைத்தொகுதி அமைத்தல், வெளியிலிருந்து வரும் விளையாட்டு வீரர்களுக்காக வெபர் ஸ்ரேடியத்தின் மேற்பகுதியில் தங்குமிட வசதி மேற்கொள்ளுதல், நகரின் பின்தங்கிய வட்டார அபிவிருத்திக்கு நிதியொதுக்கீடு, கள்ளியங்காடு பிரதேசத்தில் மின் தகனசாலைக்கு சுற்றுமதில் அமைத்தல், நகர பேருந்து தரிக்கும் நிலையத்தில் அமைக்கப்படும் சௌகரியமான தங்குமிடத்தில் பாலூட்டும் தாய்மாருக்கு விசேட கட்டமைப்புகளை நிர்மாணிப்பதற்கான அனுமதியும் இவ்வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும், பொதுச்சந்தையின் மேற்பகுதியை விற்பனையாளர்களின் வசதிக்கான தளமாக மாற்றுதல், இலவச போக்குவரத்தை அமுல்படுத்துதல், உக்கும் கழிவுகளை தரம் பிரிக்கும் இயந்திரம் கொள்வனவு செய்தல், கொக்குவிலில் வாராந்த சந்தையை விஸ்தரித்தல், வீதி மின் விளக்குகள் பகலில் ஒளிர்வதைக் கட்டுப்படுத்த தானியங்கு ON/OFF ஆழியமைத்தல் ஆகியனவும் உள்வாங்கப்பட்டுள்ளது.

சிறுவர்களுக்காக விளையாட்டு நூலகம் அமைத்தல், பாலூட்டும் தாய்மாருக்கு போஷாக்கு உணவு வழங்க விசேட நிதி, பெண்களை வலுப்படுத்தல் மற்றும் பெண்களின் அபிவிருத்திக்காக விசேட நிதியம், கர்ப்பிணிகளின் உடல், உள நலத்தை மேம்படுத்துவதற்கான காணொளிகளைக் காண்பித்தல், முகத்துவாரம் வெளிச்சவீடு மற்றும் முட்டைக்கோரியை புனரமைத்தல் உள்ளிட்ட திட்டங்களை அமுல்படுத்தவும் இவ்வரவு செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதாக, அவர் தெரிவித்தார்.

# ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்தவருக்கு சிறை

காரைதீவு குறூப் நிருபர்

ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த ஒருவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்சா ஒரு வருட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

அட்டாளைச்சேனையைச் சேர்ந்த 70 வயதுடைய இந்நபர், 9 கிராம் 850 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, கடந்த 3 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (27) நடைபெற்ற போதே, நீதவான் மேற்படி தீர்ப்பளித்தார்.

இந்நிலையில், இந்நபர் மீது முதல் 6 மாத கடூழியச் சிறைத்தண்டனையும் மீதி 6 மாத காலச் சிறைத்தண்டனையும் 7 வருட காலத்துக்கு ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டதுடன், 10,000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

# சூழலியல்சார் எண்ணக்கரு நிகழ்வு

மாளிகைக்காடு குறூப் நிருபர்

'சைக்கிளோட்டம் மூலமாக மீள் காடாக்கம்' எனும் பாரியதொரு சூழலியல்சார் எண்ணக்கருவை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையிலான விழிப்புணர்வூட்டும் நிகழ்வொன்று CYCLING GREEN குழுமத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டது. அந்த வகையில், திருகோணமலையிலிருந்து கல்முனை வரை சைக்கிளோட்டம் நேற்று (27) முன்தினம் நடைபெற்றது.

இவ்விழிப்புணர்வு நிகழ்வுக்கு மூதூரில் இயங்கும் மூதூர் ரைடர்ஸ் ஹப், எலைட் அகடமி, மூதூர் லயன்ஸ் கழகம் ஆகியன பங்களிப்புச் செய்தன.

அத்துடன், 2,000 க்கும் மேற்பட்ட விதைப்பந்துகள் அன்பளிப்பு செய்யப்பட்டதுடன், அவற்றை எவ்வாறு தயாரிப்பது தொடர்பான வழிகாட்டலும் தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் முஹம்மட் நியாஸினால் வழங்கப்பட்டது.

# காத்தான்குடியில் பெண் நோயியல் கருத்தரங்கு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



'பெண் நோயியல் தொடர்பான பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும்' எனும் தலைப்பில் விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று, காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. மகப்பேற்று வைத்திய நிபுணர், வைத்தியர் எஸ்.எச்.எம்.சிறாஜ் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு விளக்கமளித்தார். இதன்போது, பெண்களுக்கு ஏற்படும் நோய்கள் தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் வைத்திய நிபுணர் விடையளித்தார்.

காத்தான்குடி மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பெண்கள் பலர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# மூதூர் பிரதேச சாகித்திய விழா



கிண்ணியா, மூதூர் தினகரன் நிருபர்கள்

மூதூர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் 2022ஆம் ஆண்டுக்கான பிரதேச சாகித்திய விழாவும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வும் சம்பூர் கலாசார மண்டபத்தில் நேற்று (27) முன்தினம் நடைபெற்றது.

மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.முபாரக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.எம்.ஜயவிக்ரம பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் மூதூர் பிரதேச செயலக கலை இலக்கிய மலரான 'முத்து மலர் 4' வெளியிட்டு வைக்கப்பட்டதுடன், மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த 41 கலைஞர்கள் பொன்னாடை போர்த்தியும் நினைவுச்சின்னங்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது, கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

# காரைதீவு ஸ்ரீகண்ணகை அம்மன் கோயிலில் திருவெம்பாவை பூஜை



காரைதீவு குறூப் நிருபர்

இந்துக்கள் அனுஷ்டிக்கும் திருவெம்பாவை விரதம் நேற்று (28) ஆரம்பமாகியதைத் தொடர்ந்து, காரைதீவிலுள்ள ஸ்ரீ கண்ணகை அம்மன் கோயிலில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

இந்நிலையில், காரைதீவு இந்து சமய விருத்திச் சங்கமானது வருடா வருடம் நடத்தி வரும் திருப்பள்ளியெழுச்சியானது, நேற்றையதினம் அதிகாலை 4 மணிக்கு ஸ்ரீ கண்ணகை அம்மன் கோயிலிருந்து ஆரம்பமாகி நிறைவுற்றதைத் தொடர்ந்து, அக்கோயிலில் திருவெம்பாவை பூஜை நடைபெற்றது. இதன்போது, திருவாசக முற்றோதலும் நடைபெற்றது. சிவனை நினைத்து வழிபடும் திருவெம்பாவை விரதமானது தொடர்ந்து 10 தினங்கள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இம்முறை பத்தாம் நாளாகிய எதிர்வரும் ஜனவரி 6ஆம் திகதி திருவாதிரைத் தீர்த்தோற்சவத்துடன் திருவெம்பாவை விரதம் நிறைவடையவுள்ளது.

இவ்விரத காலத்தில் பிரம்மமுகூர்த்த வேளையான அதிகாலை 4 மணி முதல் கோவில்களிலிருந்து திருப்பள்ளியெழுச்சி இசைத்தல் நடைபெறுவதுடன், திருவெம்பாவை விரத பூஜையும் நடைபெறுவது வழமையாகும்.

# பாலமுனையில் இரத்ததான நிகழ்வு

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் இரத்ததான முகாமொன்று நடத்தப்பட்டது.

பாலமுனை மஹாஸினுல் உலூம் இஸ்லாமியக் கல்லூரியில் அண்மையில் நடத்தப்பட்ட இரத்ததான நடவடிக்கையில், சுமார் 130 இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர்.

Memon Aid அமைப்பின் பிரதான அனுசரணையுடன் வை.எம்.எம்.ஏ.பாலமுனைக் கிளை மற்றும் செடோ அமைப்பின் ஒத்துழைப்பில் நடைபெற்றது.



# கரைவலை மீன்பிடியில் அதிகளவான மீன்கள்

மட்டக்களப்பு குறூப் நிருபர்

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கரைவலை மீன்பிடியில் அதிகளவான மீன்கள் பிடிபடுவதாக, மீனவர்கள் தெரிவித்தனர்.

நாவலடி பகுதியில் காலை, மாலை வேளைகளில் கரைவலை மீன்பிடியில் மீனவர்கள் ஈடுபட்டு வருவதுடன், தற்போது நிலவும் சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் அதிகளவான மீன்கள் பிடிபடுவதாகவும், அவர்கள் தெரிவித்தனர்.

நெத்தலி, பாரை, கும்பளா உள்ளிட்ட மீன்கள் கரைவலை மீன்பிடியில் அகப்படுவதாகவும், அம்மீன்களை கடற்கரையோரத்தில் வைத்து விற்பனை செய்வதாகவும், மீனவர்கள் தெரிவித்தனர்.

# போதை மாத்திரைகளுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

தோப்பூர் குறூப் நிருபர்

போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்ட ஒருவரை எதிர்வரும் ஜனவரி 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, மூதூர் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மூதூர், அல்லை நகர் பிரதேசத்தைச் சேர்ந்த இந்நபர், 8 போதை மாத்திரைகளை வைத்திருந்த நிலையில், நேற்று (27) முன்தினம் கைது செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து, மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் இவரை ஆஜர்படுத்திய போதே, இவ்விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டது.

# யாழ். மாநகரசபை பட்ஜட்டை வைத்து அரசியல் செய்யும் நோக்கம் எமக்கில்லை

**கோப்பாய் குறூப் நிருபர்**



யாழ். மாநகரசபை பட்ஜெட் விவகாரத்தை வைத்து அரசியல் செய்யும் நோக்கம் ஈ.பி.டி.பிக்கு இல்லை. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தமிழ் மக்களின் அபிவிருத்தி, அரசியல் மற்றும் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பில் தொடர்ந்து பயணித்துவரும் கட்சியாகும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாநகர சபையின் வரவு செலவு திட்டத்தை ஆதரிப்பது தொடர்பில் என்னிடம் சம்பந்தப்பட்டவர்கள் இதுவரை பேசவில்லை. கட்சி அங்கத்தவர்களுடன் பேசினார்களோ தெரியவில்லை. யாழ். மாநகரசபை பட்ஜெட் விவகாரத்தை வைத்து அரசியல் செய்யும் நோக்கம் ஈ.பி.டி.பிக்கு இல்லை. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தமிழ் மக்களின் அபிவிருத்தி, அரசியல் மற்றும் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பில் தொடர்ந்து பயணித்துவரும் கட்சி. மாநகர முதல்வர் தெரிவில் எமது கட்சி ஆதரவை வழங்கியுள்ள போது சபையினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி விடயங்களில் எமது கட்சி புறக்கணிக்கப்படுகிறது. எமது கட்சி மீது தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன. எனவே தொடர்ந்து ஈ.பி.டி.பி யின் தோளில் ஏறி ஆட விடமுடியாது.

அந்த வகையில் யாழ் மாநகர சபையின் பட்ஜெட்டை வைத்து அரசியல் செய்யவேண்டிய நோக்கம் என்னிடமில்லை ஆனால் எமது கட்சியின் ஆதரவில்லாமல் பட்ஜட் நிறைவேற்ற முடியாது.

கடந்த வாரம் யாழ் மாநகர சபையின் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட போது நாம் அதில் பங்கு கொள்ளவில்லை. அதற்கு பல காரணங்கள் உண்டு என அவர் தெரிவித்தார்.

# ஸ்ரீ கைலாசநாத சுவாமி தேவஸ்தான மஹோற்சவம்

**யாழ்.விசேட நிருபர்**



நல்லூர் சிவன் கோவில் என அழைக்கப்படும் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாத சுவாமி தேவஸ்தான மஹோற்சவம் நேற்றைய தினம் புதன்கிழமை காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து திருவிழா நடைபெற்று எதிர்வரும் 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை தேர்த்திருவிழாவும், 07ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

# விசேட கௌரவிப்பு நிகழ்வு



விசேட அதிரடிப்படையின் வடக்கு மாகாண தளபதி டி.டி.டி.கே ஹெட்டிஆராய்ச்சியின் 3 வருட சேவை பூர்த்தியை முன்னிட்டும் பதவியுர்வு பெற்றுச் செல்வதை கௌரவிக்கும் முகமாகவும் விசேட நிகழ்வொன்று நாளை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

இல.37 இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் கௌரவிப்பு விழா கந்தசாமி கருணாகரனின் ஒருங்கிணைப்பில் நாளை மாலை 5.00 - 7.00 மணிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இடம்பெறவுள்ளது.

# சீன மக்கள் அன்பளிப்பாக வழங்கிய உலர் உணவு பொதிகள் மன்னாரில் பகிர்ந்தளிப்பு






**மன்னார் குறூப் நிருபர்)**

சீன மக்களிடமிருந்து சீன அரசின் ஊடாக இலங்கை மக்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஒரு தொகுதி உலர் உணவு பொதிகள் நேற்று புதன்கிழமை(28) காலை 10 மணியளவில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் வைத்து வைபவ ரீதியாக பகிர்ந்தளிக்கப்பட்டன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளையின் அமுலாக்கத்தில் உலர் உணவு பொதிகள் வைபவரீதியாக வழங்கி வைக்கப்பட்டது. இதன்போது இலங்கைக்கான சீனத்தூதரகத்தின் பொறுப்பாளர், பிரதித் தூதுவர் ஹுவெய் ( Hu Wei,) இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் தலைமை அரசியல் அதிகாரி மற்றும் தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர் லுவோ சோங்,இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் மூன்றாம் நிலை செயலாளர் வென்சாங், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா கிளை தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம்,இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளை தலைவர் ஜே.கெனடி,இராணுவ உயர் அதிகாரிகள் இணைந்து உலர் உணவு பொதிகளை வழங்கி வைத்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 5 பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து வறிய, பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் விசேட தேவைக்குள்ளான 1380 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக 300 பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளதுடன் ஏனையவர்களுக்கும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# போதைப்பொருள் பாவனையை தடுக்க விழிப்புணர்வு தெருவொளி நாடகம்

**(பரந்தன் குறூப் நிருபர்)**



கிளிநொச்சி மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனையிலிருந்து மக்களை விடுவிக்கும் வகையிலான விழிப்புணர்வு தெருவொளி நாடகமொன்று நேற்று முதல் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனையால் பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஏற்பட்டுவருகின்றன.

இதனை தடுக்கும் வகையில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் மாவட்ட வைத்திய அதிகாரிகள் இணைந்து சுயாதீன அரங்கச் செயற்பாட்டாளர்களால் அரங்காற்றுகை செய்யப்பட்ட விழிப்புணர்வு தெரு வெளி நாடகம் நேற்றைய தினம் (28.12.2022) பகல் 11 மணிக்கு கிளிநொச்சி பண்ணங்கண்டி கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் சகல கிராமங்களிலும் மக்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனையை தடுப்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு நாடகம் கிராமங்கள் தோறும் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

# யாழ்.மாவட்டத்தில் இவ்வருடம் டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

## ஒன்பது மரணங்கள் பதிவு

**பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ்.மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன் அதிக மரணங்களும் பதிவாகியுள்ளதாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

கொவிட்19 தொற்று காரணமாக மாகாணங்களுக்கிடையில் ஏற்படுத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்து காரணமாக கடந்த இரண்டு வருடங்களிலும் டெங்கு நோயாளர்கள் மற்றும் பதிவாகிய மரணங்களின் எண்ணிக்கையும் ஒப்பீட்டளவில் மிக குறைவாகும்.

யாழ்.மாவட்டத்தில் 2022 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 3294 நோயாளர்கள் உறுதிசெய்யப்பட்டதுடன் ஒன்பது மரணங்களும் பதிவாகியுள்ளன.

கடந்த ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களிலேயே, பருவப்பெயர்ச்சி மழையின் பின்னர் யாழ் மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

ஒக்டோபர் மாதத்தில் 231 டெங்கு நோயாளர்களும், நவம்பர் மாதத்தில் 306 டெங்கு நோயாளர்களும் மற்றும் டிசம்பர் மாதத்தில் 570 டெங்கு நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஐந்து வருடங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் மரணங்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டது. இவ்வருடம் நடந்த மரணங்களில் பெரும்பாலானவை நோயாளர்கள் தாமதமாக வைத்திய ஆலோசனையை நாடியதாலேயே நிகழ்ந்துள்ளன. எனவே காய்ச்சல் போன்ற டெங்கு நோய்க்கான அறிகுறிகளுடையவர்கள் உடனடியாக தகுதி வாய்ந்த மருத்துவர் ஒருவரையோ அல்லது வைத்தியசாலைகளை நாடியோ உரிய வைத்திய ஆலோசனையைப் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பருவப்பெயர்ச்சி மழையுடன் ஏற்பட்டுள்ள டெங்கு பெருந்தொற்றினைத் தடுப்பதற்கு வாராந்தம் உறுதி செய்யப்படும் டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும். எனவே அனைத்து பிரதேசங்களிலும் நுளம்புகள் பெருகக் கூடிய இடங்களை டெங்கு பரவுவதற்கான அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாகக் கருத்திற் கொண்டு எந்தவித காலதாமதமும் இன்றி சமூக பங்களிப்புடன் நுளம்புகள் உருவாகும் மூலங்களை அழிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அனைத்து இடங்களிலும் உள்ள அரச தனியார் நிறுவனங்கள், மதஸ்தலங்கள், பாடசாலைகள் , உயர் கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள் , கட்டடநிர்மாணங்கள் நடைபெறும் இடங்கள்,மீன்பிடி துறைமுகங்கள் மற்றும வீடுகள் என்பவற்றின் உரிமையாளர்கள், தலைமை அதிகாரிகள் மற்றும் பணிபுரிபவர்கள் தங்கள் நிறுவனங்கள் மற்றும் வீட்டின் உட்பகுதிகளிலும், வெளிச்சுற்றாடலிலும் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் உள்ளனவா? என்பதனை கிரமமாக பரிசோதனை செய்வதுடன் நுளம்புகள் பெருகக்கூடிய ஆபத்துள்ள இடங்களை அடையாளம் கண்டு அவற்றை அப்புறப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

# யாழ்ப்பாணம் வணிகர் கழகம் நடாத்தும் மார்கழிப் பெருவிழா



**யாழ்.விசேட நிருபர்**

யாழ்.இந்தியத் துணைத் தூதரகம், நல்லூர் சைவ தமிழ் பண்பாட்டுக் கழகம் மற்றும் யாழ்ப்பாண வணிகர் கழகம் ஆகியவை இணைந்து நடத்தும் மார்கழிப் பெருவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

இலங்கை கலைஞர்கள், இந்திய கலைஞர்கள் இணைந்து தங்களுடைய கலைத்திறனை வெளிப்படுத்தும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறும் மார்கழிப் பெருவிழா இன்றைய தினம் வியாழக்கிழமையும் இடம்பெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத்துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் உள்ளிட்ட அரசியல் சிவில் சமூக வர்த்தக பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



கன்னி ஐயப்ப பக்தர்களுக்கு கேரள முறைப்படி கன்னி பூஜை நடத்தும் நிகழ்வு அண்மையில் வேலணை செட்டிபுலம் ஐயனார் ஆலயத்தில் இடம்பெற்றது. மறவன்புலோ ஸ்ரீ ஐயப்ப தேவஸ்தான சுவாமிகள் கன்னி பூஜையை நடத்தியிருந்தார்.

(படம்: சாவகச்சேரி விஷேட நிருபர்)




நத்தார் பண்டிகையை முன்னிட்டு இம்முறையும் மன்னார் மாவட்ட செயலகத்தில் 2022 ஆம் ஆண்டுக்கான ஒளிவிழா அண்மையில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.
(படங்கள்: தலைமன்னார் விசேட நிருபர்)

# ஒரு சமூகத்தின் வளர்ச்சி கல்வியிலேயே தங்கியிருக்கின்றது;

## கண்டி தமிழ் வர்த்தக சங்கம் அதில் உறுதியான நிலைப்பாட்டை கொண்டுள்ளது



சங்கத்தின் தலைவர் ஆர். அன்பழகன்

கண்டி மாவட்ட தமிழ் பாடசாலைகளின் கல்வி வளர்சிக்கு ஆரோக்கியமான பங்களிப்பை கண்டி தமிழ் வர்த்தக சங்கம் செய்து வருகின்றது என்று கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் ஆர். அன்பழகன் தெரிவித்தார்.

திகன ரஜவெல இந்து தேசிய பாடசாலையில் இம்முறை பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் மற்றும் கல்விப் பெறுபேறுகளின் மூலம் சாதனை நிலை நாட்டிய மாணவர்களுக்கு கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தினால் அம்மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும்; நிகழ்வு மத்திய மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் அதிபர் கோகிலேஸ்வரி ராம்குமார் தலைமையில் மிகப் பிரமாண்டமாக இடம்பெற்றது. இந்நிகழ்வில் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்ட கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் ஆர். அன்பழகன் இவ்வாறு தெரிவித்தார். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வத்தேகம கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி டப்லியூ. எம். டீ. என். குணரட்ன கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக தேசமான்ய பி. பழனியப்பன், திருமதி பழனியப்பன், கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் ஆர். அன்பழகன் ஆகியோர்களுடன் சிறப்பு விருந்தினர்களாக வத்தேகம வலயக் கல்விப் பணிப்பாளர் ஐ. ஹாசிம், மேலதிகக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். பெர்னாண்டோ, ஜனதா கனகராஜ், எம். பி. விக்னேஸ்வரன், எம். பிரசாந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது பாடசாலைகளில் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் சகல பாடங்களிலும் ஏ சித்தி பெற்ற மாணவர்கள், விளையாட்டுத் துறையில் தேசிய மட்டத்தில் சாதனை நிலைய நாட்டிய மாணவர்களும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் ஆர். அன்பழகன் தொடர்ந்து உரையாற்றும் போது

ரஜவெல இந்து தேசிய கல்லூரியில் 2022 ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றக் கூடிய மாணவர்களுக்கு முன்னோடி விசேட வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெற்றது. அக்கருத்தருங்கினுடைய அக்குரார்ப்பண வைபவத்திற்கு நான் கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டேன்.அந்நிகழ்வின் போது பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவரும் போது ஒன்பது பாடங்களிலும் திறமைச் சித்தியைப் பெறும் ஒவ்வொரு மாணவர்களும் என்னுடைய சொந்த நிதியில் சன்மானம் வழங்குவேன் என்ற வாக்குறுதியை அக் கூட்டத்தில் தெரிவித்தேன். அதன் அடிப்படையில் இப்பாடசாலையில் மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளார்கள்.அன்றைய அந்த எண்ணக் கருவின் விளைவாக அம்மாணவர்களின் நல மேம்பாட்டுக்காகவும் இப்பிள்ளைகளை வழிப்படுத்தி செயற்படும் அதிபர், ஆசிரியர்களை மாணவர்களையும் பாராட்டி கௌரவிக்கப்படும் இவ் விழாவில் நான் கலந்து கொள்வதையிட்டு பெருமிதம் அடைகின்றேன்.

அதேவேளையில் இந்நிகழ்வை திறம்பட வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ரன்ஜிதா நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தொழிலதிபர் தேசமான்ய பி. பழனியப்பன் மற்றும் ஆர். டி. எஸ். எண்ணெய் நிறுவனத்தின் இயக்குனர் சிவசுப்பிரமணியம்,அத்தோடு உதவி செய்த பெயர் குறிப்பிட முடியாத தனவந்தர்களும் இருக்கின்றார்கள்.

20061109 கண்டி வர்த்தக சங்கம் என்ற பெயர் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் திகன, பலகொல்லை, குண்டசாலை வர்த்தகர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள். வர்த்தகர்களுடைய நலனை பிரதானமாகக் கொண்டிருந்த கண்டி தமிழ் வர்த்தக சங்கம் இந்த சமூகத்தின் ஓர் அங்கம் என்பதால் சமூகச் செயற்பாடுகளை புறந்தள்ளி செயற்பட முடியாது என்ற வகையில் சமூக, சமயப் பணிகளிலும் தொடர்ந்து தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வருகிறது.

ஒரு சமூகத்தின் வளர்ச்சி என்பது கல்வி வளர்ச்சியிலேயே தங்கியிருக்கின்றது என்ற உறுதியான நம்பிக்கையைக் கொண்ட கண்டி தமிழ் வர்த்தக சங்கம் தனது ஆரம்பம் முதல் கல்விப் பணிகளை முன்னெடுத்து வருகிறது. அந்த வகையிலேயே பாடசாலையின் அபிவிருத்திற்கு உதவுதல், பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும் வகையில் கல்விக் கருத்தரங்குகளை நடத்துதல், குறைந்த வருமானம் பெறும் குடும்ப மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்குதல் போன்ற கல்வி நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருந்து வருகிறது.

2016 முதல் 2021 வரை சுமார் 39 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கி வருகின்றோம். 2018 ஆம் ஆண்டு அத்திட்டத்தை மேலும் மேம்படுத்தி க. பொ. த சாதாரணப் பரீட்சையில் சித்தியடைந்து க. பொ. த உயர் தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு மாதாந்தம் 2000 என்ற அடிப்படையில் புலமைப் பரிசில் வழங்கி வருகின்றோம்.அதில் 21 மாணவர்கள் இந்தப் புலமைப் பரிசில் நிதி உதவியை வழங்கி வருகின்றோம்.அந்த 21 மாணவர்களில் ரஜவெல இந்து தேசிய கல்லூரியில் கல்வி கற்ற 8 மாணவர்கள் உள்ளடங்கியிருப்பது பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குண்டசாலைப் பிரதேசம் என்பது ஒரு வரலாற்றுப் பாரம்பரியமிக்க ஒரு பிரதேசம்.இங்குள்ள பௌத்த ஆலயங்கள் கண்டி சிற்ப கலையின் சிறப்புக்களைக் கூறக் கூடியதாக அமைந்துள்ளது. நரேந்திரசிங்க அரசன் இங்கு வாழ்ந்ததாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.இதனை அனுராதா செனவிரட்ன தனது கந்த உடரட்ட என்ற நூலில் எழுதியுள்ளார்.

40 வருட கல்வி வரலாற்றைக் கொண்ட ஒரு அதிபர் குண்டசாலைப் பிரதேசத்தில் இருந்து ஓய்வு பெறுகிறார். அதிபர் திருமதி கோலோஸ்வரி ராம்குமார் சிறந்த பெண் ஆளுமைமிக்கவர்.ஓய்வு காலத்திலும் சிறப்புடன் விளங்க கண்டி வர்த்தக சங்கத்தின் சார்பிலும் எங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்கின்றோம்.

இந்நிகழ்வில் கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் பிரதிநிதி ராஜேந்திரா உரையாற்றும் போது,..

கொரோனா தொற்றுக் காலத்தில் நாளாந்தம் மனிதர்களுடைய செயற்பாடுகள் முடக்கியிருந்த ஒரு காலத்தில் துடிப்புடன் இரு சமூகங்கள் உலகத்திலே காணப்பட்டன.ஒன்று மாணவர் சமூகம் இன்னொன்று ஆசிரியர் சமூகம். இந்தியாவில் கொரோனா தொற்றினால் கல்வி நடவடிக்கைகள் மூன்று மாதங்கள் முடங்கி இருந்த வேளையில் வானொலிப் பெட்டியின் ஊடாக ஆரம்பிக்கப்பட்டன. அதே போன்று பங்களாதேஷ் நாட்டிலும் இடம்பெற்றது. இலங்கையில் இணைய வழி ஊடாக கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அவர்கள் வானொலிப் பெட்டிகள் ஊடாக கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்தார்கள். அக்கால கட்டத்தில் விழித்திருந்து செயற்பட்ட அந்த மாணவர் சமூகம் குறிப்பாக க. பொ. த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் தங்களுடைய வாழ்க்கைக்குரிய முதற்படியை துணிச்சலுடன் எதிர் கொண்ட அந்த மனத் திடத்திற்கு நாங்கள் எங்களுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் அனைவரும் திறமையானவர்கள் இல்லையெனில் பரீட்சைக்கு போக முடியாது. ஆனால் விசேட திறமையுள்ள மாணவர்கள். தங்களுடைய திறமையினை வெளிக்காட்டி இதில் வெற்றியை அடைந்துள்ளார்கள். இந்த வெற்றி பெற்ற மாணவர்களுக்கு உலக கால்பந்தாட்ட வீரன் பிலேவுடைய சில வசனங்களை சமர்ப்பணம் செய்கின்றேன். முயன்று அடையப்படுகின்ற கடுமையான வெற்றிகளில் இருக்கின்றது முழுமையான வெற்றி என்று கூறிப்பிடுகிறார். ஒன்பது ஏ சித்திகளைப் பெற்ற மாணவர்களைப் பாராட்டுவதோடு பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் எங்களுடைய தமிழ் வர்த்தக சங்கம் சார்பாக நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

87 மாணவர்கள் க. பொ. த சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றியதாகவும் அதிலே 87 மாணவர்களும் உயர் தரம் கல்வி கற்பதற்கு தகுதி பெற்றதாகவும் நான்கு மாணவர்கள் ஒன்பது ஏ திறமைச் சித்திகளையும் 20 மாணவர்கள் எட்டு ஏ திறமைச் சித்திகளையும் பெற்றுள்ளனர்.

வத்தேகம கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி டப்லியூ. எம். டீ. என். குணரட்ன,..

வத்தேகம கல்வி வலயத்திற்கு மிகவும் சிறந்த புதிய பாதையைக் காட்டக் கூடிய பாடசாலை இந்து தேசிய பாடசாலையாகும். இப்பாடசாலையில் திறமைமிக்க மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். நாங்கள் கல்வியின் மூலம் நல்ல திறன் மிக்க பிள்ளைகளை உருவாக்கவே எதிர் பார்க்கின்றோம்.எந்தப் பிள்ளையாவது கல்வியில் நாட்டம் இல்லாத பிள்ளைகளாக சமூகத்திற்கு வழங்க முடியாது. இவை எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து மாணவர்களுக்கு மிகவும் சிறந்த முறையில் கல்வியை வழங்கக் கூடிய ஒரு நல்ல பாடசாலையாக இந்து தேசிய பாடசாலை மிளிர்கின்றது.

இப்பாடசாலையின் கல்வி,விளையாட்டுத் திறன்கள் மூலம் சாதனை நிலைநாட்டி இன்று பாராட்டுக்களைப் பெறும் மாணவர்கள் அனைவருக்கும் என்னுடைய நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மாணவர்களாகிய எமது பிள்ளைகள் அனைவரும் எங்கள் நாட்டின் எதிர்காலச் சந்ததியினர்கள் எங்கள் பிள்ளைகள் நாட்டை கட்டி எழுப்புவதற்குத் தகுதி வாய்ந்தவர்கள்.எதிர்பார்க்கக் கூடியவர்கள் என்று நாங்கள் சந்தோசம் அடையக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். உங்கள் பிள்ளைகள் ரஜவெல இந்து தேசிய பாடசாலையில் கல்வி கற்கின்றார்கள் என்பதில் பெற்றோர்களாகிய நீங்கள் பெருமை அடைய வேண்டும். அதற்கு ஏற்றதான விடயங்கள் இருக்கின்றன. க. பொ. த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு பின்பு அதிகம் மாணவர்கள் பேறு பாடசாலைக்குச் செல்வதாக நாங்கள் அறிகின்றோம். அத்துடன் க. பொ. த உயர் தரக்கல்வி பயிலும் மாணவர்கள் அப்பாடசாலைக்குச் சென்றாலும் அப்பிள்ளையின் திறன்களையும் போக்குகளையும் அறிந்து கொள்ள முடியாது. அது இரண்டு வருடங்கள் முடிந்து விடும். உங்கள் அருகில் உள்ள நல்ல சிறந்த பாடசாலையுடன் உங்கள் பிள்ளைகளின் கல்வியை தொடர்ந்து கற்க வழி செய்யுங்கள். நீங்கள் உங்கள் பிள்ளைகளை கற்பதற்கு தொடர்ந்து ஒரே பாடசாலையை தெரிவு செய்யுங்கள். அந்தப் பிள்ளை வெற்றி இலக்கை அடையும். அந்தப்பிள்ளை இலங்கையை மட்டுமல்ல முழு உலகையும் வெற்றி கொள்ளும்.

உலகிலுள்ள மிகப் பிரபல்யமான "நாஸா" நிறுவனங்களில் பொறியியல் தொழில் நுட்ப உயர் அதிகாரிகளாக கணினி பொறியியல் துறை அதிகாரிகளாக எங்கள் நாட்டுப் பிள்ளைகள் பணிபுரிகின்றனர். இந்த அத்திவாரத்தை எமது சிறார்களுக்கு வழங்க வேண்டும்.





















இக்பால் அலி




# ஆட்டோவுடன் பஸ் மோதி விபத்து 07 வயது சிறுமி பலி; மூவர் படுகாயம்

## பதுளை அம்பிட்டிய வீதியில் சம்பவம்



பதுளைகஹட்டரூப்ப பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட அம்பிட்டிய வீதியில் முச்சக்கர வண்டியொன்றும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்வண்டியொன்றும் மோதுண்டு விபத்துக்குள்ளாகியதில் ஏழு வயது சிறுமி பதுளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ளார். குறித்த சிறுமியின் தாய் உள்ளிட்ட மூன்று பேர் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கஹட்டரூப்பையில் இருந்து பதுளை நோக்கி சென்றுகொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸுடன் அம்பிட்டிய பகுதியிலிருந்து முத்துமால பகுதிக்கு சென்றுகொண்டிருந்த முச்சக்கர வண்டி ஒன்று அம்பிட்டிய சந்தியில் மோதி இவ்விபத்து நடந்துள்ளது. முச்சக்கரவண்டியை செலுத்திய பெண் ஓட்டுநர் உள்ளிட்ட நான்கு பேர் காயமடைந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது அதில் ஏழு வயது சிறுமி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் பலியாகிய சிறுமியின் தாயாரே முச்சக்கர வண்டியை செலுத்தியுள்ளார்.சிறுமியின் தாய் உட்பட மூவர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மரணித்த சிறுமி முத்துமால கொவிபொல கெந்தகொல்ல பகுதியைச் சேர்ந்தவர் ஆவார். பேருந்தின் சாரதி கஹட்டரூப்ப பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதோடு விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கஹட்டரூப்ப பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**(லுணுகல நிருபர்)**

மாத்தளை மாவட்டத்தில்

# கடும் மழையினால் மண்சரிவு அபாயம்



**தம்புள்ள தினகரன் நிருபர்**

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையினால் பெய்து வரும் கடும் மழை காரணமாக மாத்தளை வாலவெல அஸ்கிரிய மலைப் பகுதியில் மண்சரிவு ஏற்பட்டு மாத்தளைவாலவெல பிரதான பாதை சிதைவடைந்துள்ளதாக மாத்தளை மாவட்ட தேசிய கட்டிட ஆராய்ச்சி மையத்தின் பூகோளவியல் ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது. மாத்தளை தோட்டப் பாதையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாக மாத்தளை வாலவெல பிரதான பாதை உடைப்பெடுத்துள்ளதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர். தொடர்ந்து மண்சரிவு ஆபத்து நிலவும் அச்சுறுத்தல் நிலவுவதால் அயலிலுள்ள தல்கொட கிராம மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும் தேசிய கட்டிட ஆராய்ச்சி மையத்தின் புவியியல் ஆய்வு பிரிவின் தலைவர் சமிந்த மொறேமட தெரிவித்தார். தற்போது அப்பிரதேசத்தில் வீடொன்றின் மீது மண் திட்டு ஒன்று சரிந்து விழுந்துள்ளது. இதேவேளை கலேவெலதம்புள்ள பிரதேசங்களில் விளைக்கப்பட்ட வயல் நிலங்கள் கழுவுண்டு சென்றுள்ளதுடன், தம்புள்ளகண்டலம நீர்த்தேக்கத்திலிருந்து நீர் பெருக்கெடுத்துள்ளதுடன் சிறு குளங்களும் நிறைந்து பெருக்கெடுத்துள்ளன.

படங்கள் 1)உடைந்துள்ள மாத்தளை வாலவெல பாதையில் மண் திட்டு இடிந்து விழுந்த தோற்றத்தையும், வீட்டின் தோற்றத்தையும் தோற்றத்தையும் காணலாம்.

2)பெருக்கெடுத்து ஓடும் கண்டலம நீர்த் தேக்கத்தின் தோற்றம். இவ்வருடத்தில் முதல் தடவையாக இது பெருக்கெடுத்துள்ளமை விசேடமாகும்.

# இறக்குவானை வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கு பாரிய தட்டுப்பாடு

**(பலாங்கொடை தினகரன் நிருபர்)**

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள இறக்குவானை பிரதேச வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கும் மருந்துஇடும் உறைகளுக்கும் பாரியளவில் தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக நாளாந்தம் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருகின்ற நோயாளர்களும் வார்டுகளில் தங்கி சிகிச்சை வரும் நோயாளிகளும் பாரிய அசௌகரியங்களுக்கு ஆளாகி வருவதாக அங்கலாய்கின்றனர்.

இது சம்பந்தமாக வைத்தியசாலைக்கு வருகின்ற நோயாளர்களிடம் வினவிய போது, தங்களுக்கு தேவையான மருந்துகள் வைத்தியசாலையில் பற்றாக் குறையாக உள்ளதாகவும் அந்த மருந்து வகைகளை மருந்தகங்களில் விலை கொடுத்து வாங்குமாறும் வைத்தியர்கள் கூறுவதாக தெரிவிக்கின்றனர்.

அதே சமயம் நோயாளர்களுக்கு வைத்தியசாலையில் வழங்கப்படுகின்ற மருந்துகளை இட்டு தருவதற்கு தேவையான உறைகளை வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலையில் விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலையும் நோயாளர்களுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

பொருளாதார நெருக்கடியில் வாழ்கின்ற நோயாளிகள் பணம் கொடுத்து மருந்துகளை பெற்றுக் கொள்வது மிகவும் கஷ்டமாக உள்ளதாகவும் இது சம்பந்தமாக வைத்தியசாலை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



குருவிட்ட பிரதேச சபையினால் 420 இலட்சம் ரூபா செலவில் குருவிட்ட நகரில் புதிதாக அமைக்கப்பட்ட கேட்போர்கூடம் திங்கட்கிழமை (26) திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர, சப்ரகமுவ மாகாண சபையின் முன்னால் அமைச்சர் ரஞ்ஜித் பண்டார, குருவிட்ட பிரதேச சபையின் தலைவர் பிரேமரத்ன மல்கெகுல, உப தலைவர் அனில் லியனகே, சப்ரகமுவ மாகாண உள்ளுராட்சி திணைக்களத்தின் ஆணையாளர் கீர்த்தி விஜே பண்டார உட்பட முக்கிய அதிகாரகள் பலரும் கலந்து கொண்டனர். (படம்: காவத்தை தினகரன் விசேட நிருபர்)

# பின்னவலை யானைகள் சரணாலயத்தில் மயூரி மரணம்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

பின்னவலை யானைகள் சரணாலயத்தில் மயூரி எனும் பெண் யானை நேற்றுமுன்தினம் திடீரென மரணமடைந்தது.

அதன் உயிரைக்காப்பாற்ற மிருக வைத்தியர்கள் மேற்கொண்ட சகல முயற்சிக ளும் தோல்வியில் முடிந்துள்ளன. யானையின் மரணத்துக்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என வைத்தியர்கள் மற்றும் சரணாலய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். மரணமடையும் போது மயூரியின் வயது 40 ஆகும்.

# தியத்தலாவை அல் பதுரியா மையவாடி புனர்நிர்மாண பணிகள் ஆரம்பம்

## ஜனாஸா நலன்புரி அமைப்பு நிதியுதவிக்கு கோரிக்கை

**(ஊவா சுழற்சி நிருபர் )**



கஹகொல்ல தியத்தலாவை அல் பதுரியா ஜும்மாஆ பெரியபள்ளி வாசல் மையவாடி புனர் நிர்மானம் செய்யும் வேலைத் திட்டத்தினை தியத்தலாவை ஜனாஸா நலன் புரி அமைப்பினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கஹகொல்ல,கிரிந்தி எல்ல,( நொம்பர் 9,) பிங்கேத்தென்ன, கொஸ்கஹ கும்புற, தியத்தலாவை, தொடங்வத்தை,கல்கந்தை ,ரத்பஹ போன்ற ஏழு முஸ்லிம் பிரதேசத்தில் நிகழும் ஜனாஸா மாத்திரமன்றி தியத்தலாவை தள வைத்தியசாலையில் நிகழும் ஜனாஸாக்கள் கூட இம் மையவாடியிலேயே அடக்கம் செய்யப்பட்டு வருகின்றது. மலைப் பாங்கான இம் மையவாடியில் இட நெருக்கடி ஒரு புறமிருக்க காட்டு மிருகங்களிடமிருந்து பாது காப்பதற்கான வேலி,மண் சரிவு ஏற்படாதிருப்பதற்கான கல் சுவர், மழை நீர் வழிந்தோட வடி கான், ஜனாஸாக்களை குழிப்பாட்டுவதற்கான அறை, நீர் தாங்கி ஒன்றினை அமைத்தல் போன்ற இன்னோரன்ன வேலைகளை முன்னெடுத்துச் செல்லவுள்ளதால் பரோபகாரிகளிடமிருந்து நிதி உதவிகளையும் ஏனையை கட்டிட உதவிகளையும் ஜனாஸா நலன் புரி அமைப்பினர் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

எனவே உதவி புரிய முன் வருவோர் நேரடியாகவே அல்லது தியத்தலாவை இலங்கை வங்கி கிளையின் 6429780 வங்கி இலக்கத்திற்கோ பணத்தினை வைப்பிலிடுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சீரற்ற காலநிலையால் மாத்தளை மாவட்டத்தில் 159 குடும்பங்கள் பாதிப்பு

மாத்தளை பிரதேசத்தில் நிலவும் அதிக மழையுடனான வானிலையால் நேற்று முன்தினம் (27) காலை வரை 159 குடும்பங்களைச் சேர்ந்த 631 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாத்தளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய மாத்தளை, உக்குவளை, தம்புளை, கலேவல, இரத்தோட்டை, நாவுல, அம்பகங்கோரல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் மண்மேடு சரிவு, மரம் முறிந்து விழுதல் உள்ளிட்ட பல அனர்த்தங்களால் மாத்தளை மாவட்டத்தில் 18 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான ஆலோசனைகள் மாத்தளை மாவட்ட அரசாங்க அதிபர் தேஜானி திலகரத்னவால் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.



அநுராதபுரத்தில் நடைபெற்ற அகில இலங்கை 'கர்நாடக சங்கீத' போட்டியில் ஆண்களுக்கான நாட்டார் பாடல் போட்டியில் பங்குபற்றிய பசறை கல்வி வலயத்திற்குட்பட்ட பதுளை ஹொப்டன் விக்னேஸ்வரா தமிழ் வித்தியாலய மாணவர்கள் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளனர். மாணவர்களை நெறிப்படுத்திய ஆசிரியை திருமதி. டி. கவிதா மற்றும் மாணவர்களை இங்கு காணலாம். (லுணுகல நிருபர்)

மாத்தளை பேனார்ட் அலுவிகார

# மைதான அபிவிருத்திக்கு 192 இலட்ச ரூபா ஒதுக்கீடு

## இராஜாங்க அமைச்சர் நடவடிக்கை





**(மாத்தளை சுழற்சி நிருபர்)**

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக மாத்தளை பேனார்ட் அலுவிகார மைதானம் பகுதி அளவில் பாதிக்கப்பட்டது. அதனை அபிவிருத்தி செய்ய விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சரும் மாத்தளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ரோகன திசாநாயக்கா நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேற்படி மைதானத்தை அபிவிருத்தி செய்ய 192 இலட்ச ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவர் மேற்படி மைதானத்தைப் பார்வையிட்ட போது பிடிக்கப்பட்ட படத்தை காணலாம்.

# பேராதனை மாணவ தலைவர்கள் இருவரது மாணவர் அந்தஸ்து இடை நிறுத்தம்

**(அக்குணை குறுப் நிருபர்)**

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தலைவர் உட்பட இருவரது மாணவர் அந்தஸ்து இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளவர்கள் தற்போதைய பிரதான மாணவர் சங்கத் தலைவரும், முன்னாள் தலைவருமாவர் என பல்கலைக்கழக பதில் உபவேந்தர் டெரன்ஸ் மௌஜித் தெரிவித்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரும், பூகற்பவியல் பேராசிரியருமான அத்துல சேனாரத்னவையும் அவரது குடும்ப அங்கத்தவர்களையும் தாக்கி அவர்களது உத்தியோக பூர்வ வாசஸ்தலத்திற்கு சட்ட விரோதமாக உட்புகுந்து கலகம் விளைவித்த சம்பவத்திற்கும், மேற்படி இரு மாணவர்களுக்கும் தொடர்பு உள்ளதாகக் காணப்பட்டதை அடுத்தே பல்கலைக்கழக நிர்வாகம் மேற்படி நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. மாணவர் சங்க தலைவர் சமோதி சத்சர மற்றும் முன்னாள் மாணவர் சங்க தலைவர் அனுராதா விதானகே ஆகியோரது மாணவர் அந்தஸ்த்தே இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். அதே நேரம் ஏற்கனவே சந்தேகத்தில் கைது செய்ய ப்பட்டுள்ள 12 மாணவர்களும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதை அடுத்து ஜனவரி 4ம் திகதி வரை விளக்க மறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# சிவனொளி பாதமலை யாத்திரீகர் மாரடைப்பால் மரணம்

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

கரந்தெனிய பகுதியில் இருந்து சிவனொளி பாத மலைக்கு தரிசனம் செய்ய வந்த 74 வயது வயோதிபர் ஒருவர் மாரடைப்பு காரணமாக நேற்று முன்தினம் மரணமானார்.

பெல்வத்தகே பிரேமரட்ன என்பவர் நேற்று அதிகாலை வேளையில் சிவனொளி பாத மலைக்கு தரிசனம் செய்ய மலை ஏறிக் கொண்டு இருந்த வேளையில் ரத்து அம்பலம பகுதியில் வைத்து கடும் சுகவீனமடைந்தார்.

உடன் வந்திருந்த அவரது உறவினர்கள் மூலம் நல்லதண்ணி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்ட அவர், அங்கிருந்து அவசர சிகிச்சை அம்பியூலன்ஸ் மூலம் மஸ்கெலியா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

எனினும் அங்கு அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சிவனொளிபாதமலை யாத்திரிகர்களுக்கு

# நீர் நிலைகளில் நீராடுவது தொடர்பில் எச்சரிக்கை

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இரத்தினபுரி வழியாக சிவனொளிபா த மலை செல்லும் யாத்திரிகர்கள் களுகங்கை உட்பட பல நீர்நிலைகளில் நீராடுவோர் கவனயீனத்தால் உயிராபத்துக்களை எதிர்கொண்டு வருவதாக இரத்தினபுரி மாவட்ட நீர்வீழ்ச்சிகள் பாதுகாப்பு அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

சில வாரங்களுக்கு முன் இரத்தினபுரி பலாபத்தல ஊடாக ஓடும் களுகங்கையில் நீராடச் சென்று வெள்ளத்தில் சிக்கி மூவர் உயிரிழந்தனர்.

சிவனொளிபாத மலை யாத்திரைக் காலத்தில் மட்டுமன்றி ஏனைய காலங்களிலும் இப்பிர தேச நீர்நிலைகளில் குளிக்கவும் உ ல்லாசமாகக் கழிக்கவும் வரும் பயணிகள் உயிராபத்தை எதிர்நோக்கியுள்ளனர் என இவ்வமைப்பு சுட்டிக்காட் டுகிறது.

இரத்தினபுரி மாவட்டத்தினூடாக சிவனொளிபாத மலைக்குச் செல்லும் 3 வீதிகளிலும் களுகங்கை வளவை கங்கையும் இவற்றின் கிளையாறுகளும் நீர்வீழ்ச்சிகளும் அதிகமாகக் காணப்படுகின்றன.

மத்திய மலை நாட்டின் எல்லை பகுதிகளில் மழை பெய்தால் இப்பிரதேச நீர் நிலைகளில் வெள்ளம் ஏற்படுவதுண்டு. இந்நிலைமையால் இந்நீர்நிலைகளில் அடிக்கடி உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.

எனவே இந்நீர்நிலைகளில் உள்ள அறிவுறுத்தல்களை வாசித்து அவதானமாக செயல்பட்டால் உயிராபத்துக்களில் இருந்து தவிர்ந்து கொள்ளலாம் எனவும் இவ்வமைப்பு அறிவுறுத்தல் வழங்கி வருகிறது.

# விலைமனுக் கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல.<br>பொருட்களது விபரம் - தொகை | விலைமனு கோரல் முடிவு திகதி விலைமனு கோரல் முடிவுத் திகதி மற்றும் நேரம் | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே.இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம். ICB NCB |
| | | | சேவைகள் | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/115<br>அம்பாறை பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், மற்றும் அதனுடன் இணைந்த மின் பாவனையாளர் சேவை நிலையங்கள், சுற்றுலா விடுதி, மாகாண உப களஞ்சியசாலை, விநியோக கட்டுமான அலுவலகம், விநியோக பராமரிப்பு அலுவலகமும் அதனுடன் இணைந்த தங்குமிட விடுதிக்குமான பராமரிப்புச் சுத்திகரிப்புச் சேவை கோரல் (இரண்டு வருடகாலம்) (விலைமனு முற்கூட்டம் 09-01-2023ம் திகதி மு.ப.10.30 மணிக்கு பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) திருகோணமலை அலுவலகத்தில் நடைபெறும்) | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதேசபிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,அம்பாறை<br>063-2222387, 063-2222078<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 4,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/116<br>மட்டக்களப்பு பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம் அதனுடன் இணைந்த பாவனையாளர் சேவை நிலையங்கள், விநியோக கட்டுமான பிரிவு, விநியோக பராமரிப்புப் பிரிவு, விடுதிப் பிரதேசம், சுற்றுலா விடுதி, குடிசார் பொறியியலாளர் அலுவலகம் மற்றும் மாகாண உப களஞ்சியசாலைகளுக்கான பராமரிப்புச் சுத்திகரிப்புச் சேவை கோரல் (இரண்டு வருட காலம்) (விலைமனு முற்கூட்டம் 09-01-2023ம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) திருகோணமலை அலுவலகத்தில் நடைபெறும்) | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதேசபிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், (மட்டக்களப்பு)<br>065-2222639<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 3,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/117<br>கல்முனை பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், மற்றும் கல்முனை பிரதேசத்திற்கு உட்பட்ட பாவனையாளர் சேவை நிலையங்களுக்கான சுத்திகரிப்புச் சேவை கோரல் (இரண்டு வருட காலம்) (விலைமனு முற்கூட்டம் 09-01-2023ம் திகதி மு.ப.10.30 மணிக்கு பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) திருகோணமலை அலுவலகத்தில் நடைபெறும்) | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதேசபிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,கல்முனை<br>067-2229276<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1,500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/118<br>திருகோணமலை பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், மற்றும் அதனுடன் இணைந்த மின் பாவனையாளர் சேவை நிலையங்கள், விடுதி வளாகம், சுற்றுலா விடுதி, மாகாண களஞ்சியசாலைக்கான பராமரிப்புச் சுத்திகரிப்புச் சேவை கோரல் (இரண்டு வருட காலம்) (விலைமனு முற்கூட்டம் 09-01-2023ம் திகதி மு.ப.10.30 மணிக்கு பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) திருகோணமலை அலுவலகத்தில் நடைபெறும்) | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதேசபிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,திருகோணமலை<br>026-2222301<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 5,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/119<br>வாழைச்சேனை பிரதேச மின் பொறியியலாளர் அலுவலகம் அதனுடன் இணைந்த மின் பாவனையாளர் சேவை நிலையங்கள் மற்றும் விடுதிப் பிரதேசங்களுக்கான பராமரிப்புச் சுத்திகரிப்புச் சேவை கோரல் (இரண்டு வருட காலம்) (விலைமனு முற்கூட்டம் 09-01-2023ம் திகதி மு.ப.10.30 மணிக்கு பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) திருகோணமலை அலுவலகத்தில் நடைபெறும்) | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதேசமின் பொறியியலாளர் அலுவலகம், வாழைச்சேனை<br>065-2258882<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 2,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/145<br>திருகோணமலை பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகத்திற்கான பராமரிப்பு சுத்திகரிப்புச் சேவை கோரல் (இரண்டு வருட காலம்) (விலைமனு முற்கூட்டம் 09-01-2023ம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) திருகோணமலை அலுவலகத்தில் நடைபெறும்) | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 2,250.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/R/M-1/2023<br>எம்.சீ.சீ.பிகள்,எம்.சீ.பிகள்,ஆர்.சீ.சீ.பிகள்,கட் அவுட்கள் (முகவர்கள் மட்டும்) வழங்குனர்களை பதிவு செய்தல் - ஏற்கனவே 2022ம் ஆண்டுக்கு பதிவு செய்தவர்கள் அந்த பிரிவின் கீழ் 2023ம் ஆண்டிற்கான பதிவை நீட்டிக்க விருப்பம் தெரிவித்து கடிதம் அனுப்பி பதிவை நீட்டிக்கலாம். | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/R/M-2/2023<br>பியுஸ் லிங்ஸ்கள், எச்.ஆர்.சீ / பியுஸ்கள், / பியுஸ் கரியர்கள், இன்சுலேட்டர்கள் (முகவர்மாத்திரம்) வழங்குனர்களை பதிவு செய்தல் - ஏற்கனவே 2022ம் ஆண்டுக்கு பதிவு செய்தவர்கள் அந்த பிரிவின் கீழ் 2023ம் ஆண்டிற்கான பதிவை நீட்டிக்க விருப்பம் தெரிவித்து கடிதம் அனுப்பி பதிவை நீட்டிக்கலாம்.. | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/R/M-3/2023<br>பைமெட்டலிக் கிளாம்கள், கேபிள் லக்ஸ்கள், கம்பாரிசன் கனெக்டர்கள், ஏபிசி அக்சசரீஸ் (முகவர்மாத்திரம்) வழங்குனர்களை பதிவு செய்தல் - ஏற்கனவே 2022ம் ஆண்டுக்கு பதிவு செய்தவர்கள் அந்த பிரிவின் கீழ் 2023ம் ஆண்டிற்கான பதிவை நீட்டிக்க விருப்பம் தெரிவித்து கடிதம் அனுப்பி பதிவை நீட்டிக்கலாம். | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/R/M-4/2023<br>பாதுகாப்புக் கருவிகள், சிறிய கருவிகள் (உற்பத்தியாளர், முகவர் மாத்திரம்) வழங்குனர்களை பதிவு செய்தல் - ஏற்கனவே 2022ம் ஆண்டுக்கு பதிவு செய்தவர்கள் அந்த பிரிவின் கீழ் 2023ம் ஆண்டிற்கான பதிவை நீட்டிக்க விருப்பம் தெரிவித்து கடிதம் அனுப்பி பதிவை நீட்டிக்கலாம். | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/R/M-5/2023<br>செப்பு, அலுமினிய கேபிள், கடத்திகள், பைண்டிங் வயர்ஸ் (உற்பத்தியாளர் மாத்திரம்) வழங்குனர்களை பதிவு செய்தல்- ஏற்கனவே 2022ம் ஆண்டுக்கு பதிவு செய்தவர்கள் அந்த பிரிவின் கீழ் 2023ம் ஆண்டிற்கான பதிவை நீட்டிக்க விருப்பம் தெரிவித்து கடிதம் அனுப்பி பதிவை நீட்டிக்கலாம். | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/R/M-8/2023<br>மீற்றர் பெட்டிகள், மீற்றர் போர்ட்கள் பிளாஸ்டிக், இரும்பு (steel)] வழங்குனர்களை பதிவு செய்தல் - ஏற்கனவே 2022ம் ஆண்டுக்கு பதிவு செய்தவர்கள் அந்த பிரிவின் கீழ் 2023ம் ஆண்டிற்கான பதிவை நீட்டிக்க விருப்பம் தெரிவித்து கடிதம் அனுப்பி பதிவை நீட்டிக்கலாம். | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/R/M-11/2023<br>வலுவூட்டப்பட்டதும் முன் அமர்த்தப்பட்டதுமான கொங்கிறீற்றுத் தூண்கள் வழங்குனர்களை பதிவு செய்தல் - ஏற்கனவே 2022ம் ஆண்டுக்கு பதிவு செய்தவர்கள் அந்த பிரிவின் கீழ் 2023ம் ஆண்டிற்கான பதிவை நீட்டிக்க விருப்பம் தெரிவித்து கடிதம் அனுப்பி பதிவை நீட்டிக்கலாம். | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/R/M-12/2023<br>கம்பியூட்டர், பிரிண்டர், நெட்வேர்க்கிங் மற்றும் இவற்றுடன் தொடர்புடைய பொருட்கள் வழங்குனர்களை பதிவு செய்தல் - ஏற்கனவே 2022ம் ஆண்டுக்கு பதிவு செய்தவர்கள் அந்த பிரிவின் கீழ் 2023ம் ஆண்டிற்கான பதிவை நீட்டிக்க விருப்பம் தெரிவித்து கடிதம் அனுப்பி பதிவை நீட்டிக்கலாம். | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/R/M-13/2023<br>மின் உபகரணங்கள், ஹலஜன் ∴பிற்றிங்ஸ், வீதி விளக்குகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் வழங்குனர்களை பதிவு செய்தல் - ஏற்கனவே 2022ம் ஆண்டுக்கு பதிவு செய்தவர்கள் அந்த பிரிவின் கீழ் 2023ம் ஆண்டிற்கான பதிவை நீட்டிக்க விருப்பம் தெரிவித்து கடிதம் அனுப்பி பதிவை நீட்டிக்கலாம். | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/R/S-1/2023<br>பொருட்களை கொண்டு செல்வதற்கான ஒப்பந்தகாரர்களின் பதிவு (மின் மாற்றிகள்,மின் தூண்கள் முதலியன)- ஏற்கனவே 2022ம் ஆண்டுக்கு பதிவு செய்தவர்கள் அந்த பிரிவின் கீழ் 2023ம் ஆண்டிற்கான பதிவை நீட்டிக்க விருப்பம் தெரிவித்து கடிதம் அனுப்பி பதிவை நீட்டிக்கலாம்.. | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/R/S-2/2023<br>மின்னிணைப்பு சேவை வழங்கும் ஒப்பந்தக்காரர்களின் பதிவு- ஏற்கனவே 2022ம் ஆண்டுக்கு பதிவு செய்தவர்கள் அந்த பிரிவின் கீழ் 2023ம் ஆண்டிற்கான பதிவை நீட்டிக்க விருப்பம் தெரிவித்து கடிதம் அனுப்பி பதிவை நீட்டிக்கலாம். | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 500.00 | NCB |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/R/S-3/2023<br>மின்னோடு பாதை வழியிலிருக்கும் இலை குழை தாவரங்களின் தடைகளை அகற்றுவதற்கான ஒப்பந்தகாரர்களின் பதிவு- ஏற்கனவே 2022ம் ஆண்டுக்கு பதிவு செய்தவர்கள் அந்த பிரிவின் கீழ் 2023ம் ஆண்டிற்கான பதிவை நீட்டிக்க விருப்பம் தெரிவித்து கடிதம் அனுப்பி பதிவை நீட்டிக்கலாம். | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666 , 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/R/S-4/2023<br>உயர்/தாழ் அழுத்த மின்னோடு பாதைகள் மற்றும் உப மின் நிலையங்கள் நிர்மாணிக்கும் ஒப்பந்தகாரர்களின் பதிவு- ஏற்கனவே 2022ம் ஆண்டுக்கு பதிவு செய்தவர்கள் அந்த பிரிவின் கீழ் 2023ம் ஆண்டிற்கான பதிவை நீட்டிக்க விருப்பம் தெரிவித்து கடிதம் அனுப்பி பதிவை நீட்டிக்கலாம். | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666 , 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/R/S-5/2023<br>உயர்/தாழ் அழுத்த மின்னோடு பாதைகளை புனரமைப்புச் செய்தலும் உப மின் நிலைய வலுவை அதிகரித்தல் ஒப்பந்தகாரர்களின் பதிவு- ஏற்கனவே 2022ம் ஆண்டுக்கு பதிவு செய்தவர்கள் அந்த பிரிவின் கீழ் 2023ம் ஆண்டிற்கான பதிவை நீட்டிக்க விருப்பம் தெரிவித்து கடிதம் அனுப்பி பதிவை நீட்டிக்கலாம். | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666 , 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/R/S-6/2023<br>மின் சேவை இணைப்பு துண்டிப்பு மற்றும் மீள் இணைப்பு நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தகாரர்களின் பதிவு- ஏற்கனவே 2022ம் ஆண்டுக்கு பதிவு செய்தவர்கள் அந்த பிரிவின் கீழ் 2023ம் ஆண்டிற்கான பதிவை நீட்டிக்க விருப்பம் தெரிவித்து கடிதம் அனுப்பி பதிவை நீட்டிக்கலாம். | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666 , 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/R/S-9/2023<br>குாகிதாதிகளை அச்சிடல் ஒப்பந்தகாரர்களின் பதிவு- ஏற்கனவே 2022ம் ஆண்டுக்கு பதிவு செய்தவர்கள் அந்த பிரிவின் கீழ் 2023ம் ஆண்டிற்கான பதிவை நீட்டிக்க விருப்பம் தெரிவித்து கடிதம் அனுப்பி பதிவை நீட்டிக்கலாம். | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666 , 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/R/S-12/2023<br>கட்டடங்களை கட்டுவதற்கும், திருத்துவதற்கும், வீதிகளை மேம்படுத்துவதற்கும் ஒப்பந்தகாரர்களின் பதிவு- ஏற்கனவே 2022ம் ஆண்டுக்கு பதிவு செய்தவர்கள் அந்த பிரிவின் கீழ் 2023ம் ஆண்டிற்கான பதிவை நீட்டிக்க விருப்பம் தெரிவித்து கடிதம் அனுப்பி பதிவை நீட்டிக்கலாம். | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666 , 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/R/S-15/2023<br>தோகை மின்னிணைப்பு இசாதாரண மற்றும் சூரியசக்தி மின்னிணைப்புக்கான உள்ளக மின்னிணைப்புகளை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் மற்றும் பழுதடைந்த பொருட்கள், உபகரணங்களுக்கான விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் பட்டயமின் பொறியியலாளர்களுக்கான பதிவு.- ஏற்கனவே 2022ம் ஆண்டுக்கு பதிவு செய்தவர்கள் அந்த பிரிவின் கீழ் 2023ம் ஆண்டிற்கான பதிவை நீட்டிக்க விருப்பம் தெரிவித்து கடிதம் அனுப்பி பதிவை நீட்டிக்கலாம். | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666 , 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/207<br>வாடகைக்குவான் மின் அத்தியட்சகர் ஐஐஐ (திட்டமிடல்)-பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை (இரண்டு வருட காலம்) | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666 , 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/208<br>வாடகைக்குவான் மின் அத்தியட்சகர் ஐ (திட்டமிடல்)- பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை (இரண்டு வருட காலம்) | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666 , 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/209<br>வாடகைக்குவான் மின் அத்தியட்சகர் - ஐஐஐ (விநியோக பராமரிப்பு பிரிவு) திருகோணமலை (இரண்டு வருட காலம்) | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666 , 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/210<br>வாடகைக்குவான் கட்டிடஅத்தியட்சகர் - (இரண்டுவருடகாலம்) | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666 , 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/211<br>வாடகைக்குவான் - மின் அத்தியட்சகர் (கிங்குராணமின் பாவனையாளர் சேவைநிலையம்) அம்பாறை (இரண்டு வருட காலம்) | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், அம்பாறை<br>063-2222387, 063-2222078<br>அல்லது<br>பிரதிப் பொதுமு காமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/212<br>வாடகைக்குவான் - மின் அத்தியட்சகர் (இங்கினியாகலை மின் பாவனையாளர் சேவை நிலையம்)- அம்பாறை (இரண்டு வருட காலம்) | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், அம்பாறை<br>063-2222387, 063-2222078<br>அல்லது<br>பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/213<br>வாடகைக்கு வான் பொறியியல் உதவியாளர் கல்முனை (இரண்டு வருட காலம்) | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், கல்முனை<br>067-2229276<br>அல்லது<br>பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/214<br>வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் (பிரதேச பராமரிப்புப் பிரிவு)- வாழைச்சேனை (இரண்டு வருட காலம்) | 18-01-2023ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதேசமின் பொறியியலாளர் அலுவலகம்,வாழைச்சேனை<br>065-2258882<br>அல்லது<br>பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக்குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித் தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம்பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்து மூலமாக விண்ணப்பித்து 5 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப் பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/ வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி.சபையின் உரித்தான பி.பொ.மு/ பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை.பொ.மு/ பிரதமபொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவுதிகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.

# சிறு விளம்பரம்

**வேலைவாய்ப்பு**

325

**தொழில்துறை**

பொது

அனுபவமுள்ள சிகையலங்காரம் மற்றும் ஒப்பனைக்கு பெண் அல்லது ஆண் வெற்றிடங்கள். கூடுதல் சம்பளம் மருதானை. 077 3052460, 076 7492504. 079287

**காணி/தோட்டம்**

616

**வீடு சொத்து**

**கொழும்பு மாவட்டம்**

விற்பனைக்கு

தெஹிவளையில் இரு மாடி தனித்தனியான வாசல்கள் உடனான வீடொன்று விற்பனைக்கு. தொடர்பிலக்கங்கள் 070 3345399/ 077 2984677. 079831

## இலங்கை முதலீட்டுச் சபை

# பெறுகை அறிவித்தல்

''இரண்டு வருட காலத்திற்கு தலைமை அலுவலகம், கட்டுநாயக்க ஏற்றுமதி செயற்பாட்டு வலயம், மாவத்தகம ஏற்றுமதி செயற்பாட்டு வலயம், ஏறாவூர் ஆடை உற்பத்தி வலயம் மற்றும் ஆராபொக்க கைத்தொழில் வலயம் என்பவற்றுக்கு பாதுகாப்புச் சேவைகளுக்கான பெறுகை'' (2023 மற்றும் 2024) (குறிப்பீட்டிலக்கம்: BOI/S&S/Q/135/22) விளம்பரம் 2022 டிசம்பர் 29ஆம் திகதிய ''டெய்லி நியூஸ்'' பத்திரிகையிலும் இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணைய தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (www.investsrilanka.com)

ஆர்வம் காட்டும் வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் ''டெய்லி நியூஸ்'' பத்திரிகையிலும் இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணைய தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ள விளம்பரத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. (www.investsrilanka.com)

விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 011-2543041/ 074-1531432 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**



# பெறுகை அறிவித்தல்

## மாத்தளை பிரதேச சபை

## பலாபத்வல

### அப்பியாசப் புத்தகங்கள் உட்பட பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்களைக் கோரல்

மாத்தளை பிரதேச சபை பொது நிதியத்தின் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பாடசாலை மற்றும் முன்பள்ளி செல்லுப் பிள்ளைகள் கிட்டத்தட்ட 5500 பேருக்கு விநியோகிப்பதற்குத் தேவையான அப்பியாசப் புத்தகங்கள் உட்பட பாடசாலை உபகரணங்களைக் கொள்னவு செய்வதற்காக உங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

குறித்த மாதிரிப் பத்திரங்களை 2023.01.04 பி.ப. 2.00 வரையான காலத்திற்குள் இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். இல்லையெனில் 066-4933680 இலக்கத்திற்கு அழைப்பொன்றை விடுத்து ஈமெயில், பெக்ஸ் அல்லது வட்ஸ்அப் மூலம் அல்லது மாத்தளை பிரதேச சபை அலுவலக நேரங்களில் வருகைதந்து பெற்றுக்கொள்ளலாம். பொறியிடப்பட்ட உங்களது விலைமனுக்களை "தலைவர், மாத்தளை பிரதேச சபை பலாபத்வல" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 2023.01.04 பி.ப. 3.00 இற்கு முன்பு அனுப்புதல் வேண்டும்.

கையோடு கொண்டுவந்து ஒப்படைப்பதாயின் சபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

விலைமனுக்கள் திறத்தல் 2023.01.05 மு.ப. 10.00 இற்கு சபை கூட்ட மண்டபத்தில் இடம்பெறுவதுடன், அவ்வேளையில் உங்களுக்கு அல்லது உங்களது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**மாத்தளை பிரதேச சபை,**
**பலாபத்வல.**
**2022.12.27**

---

# பெறுகை அறிவித்தல்

## தெஹிவளை - கல்கிசை மாநகர சபை

### பாடசாலை அப்பியாசக் கொப்பிகளைக் கொள்வனவு செய்தல்

தெஹிவளை - கல்கிசை மாநகர சபைக்குத் தேவையான பாடசாலை அப்பியாசக் கொப்பிகளைக் கொள்வனவு செய்வதற்காக திறந்த போட்டி ரீதியிலான விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இதன் பிரகாரம் பின்வரும் பாடசாலை அப்பியாசக் கொப்பிகளை தரப்பட்டுள்ள எண்ணிக்கையின் பிரகாரம் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

| | வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | 40 பக்க சித்திரக் கொப்பிகள் | 70 |
| 02 | 80 பக்க ஐந்து ரூல் கொப்பிகள் | 140 |
| 03 | 120 பக்க ஒற்றை ரூல் கொப்பிகள் | 48950 |
| 04 | 120 பக்க சதுர ரூல் கொப்பிகள் | 12340 |
| 05 | 160 பக்க ஒற்றை ரூல் கொப்பிகள் | 1178 |
| 06 | 160 பக்க சதுர ரூல் கொப்பிகள் | 195 |
| 07 | 120 பக்க CR ஒற்றை ரூல் கொப்பிகள் | 520 |
| 08 | 160 பக்க CR ஒற்றை ரூல் கொப்பிகள் | 2590 |
| 09 | 160 பக்க CR சதுர ரூல் கொப்பிகள் | 866 |

பாடசாலை அப்பியாசக் கொப்பிகள் 60 GSM அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதி உடையதாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் கேள்வி விலைகளைச் சமர்ப்பிக்கும் வேளையில் அதற்கு இயைபான மாதிரிகளைச் சமர்ப்பிக்கக் கூடிய பொருட்களை இந்த அலுவலகத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும் என அறிவிக்கப்படுகின்றது. மாதிரிகள் சமர்ப்பிக்கப்படாத விலைமனுக்கள் எவ்வகையிலும் கவனத்திற்கொள்ளப்படாமல் நிராகரிக்கப்படும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களின் பிரதிகளை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து 2023-01-19ஆம் திகதி பி.ப. 03.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ''மாநகர ஆணையாளர், தெஹிவளை - கல்கிசை மாநகர சபை, தெஹிவளை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் 2023-01-19ஆம் திகதி முதல் 90 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட ஐந்து இலட்சம் (500,000.00) ரூபாவுக்கான விலைக்கோரல் பிணை முறியொன்றை வழங்குதல் வேண்டும்.

விலைமனுக்களைத் தாங்கி வரும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் பாடசாலை அப்பியாசக் கொப்பிகளைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கள் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் பெறுமதி சேர் வரி (VAT) இருக்குமானால் அதுபற்றி வேறாகக் குறிப்பிடுதல் வேண்டும். சகல கொடுப்பனவுகளும் 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 153ஆம் அத்தியாயத்திற்கு உட்படும்.

விலைமனுக்கள் 2023-01-19ஆம் திகதி பி.ப. 03.00 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் உங்கள் நிறுவனத்தின் பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

கட்டளை வழங்கப்பட்டு 21 நாட்களுக்குள் பொருட்களை மாநகர களஞ்சியசாலைக்கு வழங்குதல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமையை மாநகர சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**விசாரணை - தொலைபேசி இல. - 0112721379 (வழங்கல் பிரிவு)**
**0112733450**

**எம்.எம்.சீ.கே.கே. மான்னப்பெரும,**
**மாநகர ஆணையாளர்,**
**தெஹிவளை - கல்கிசை மாநகர சபை.**

---

NSB National Savings Bank

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**கேள்வி இல.: NSB/PT/ITE/2023/02**

## DOT MATRIX PRINTERS AND PASSBOOK PRINTERS

## ஐ வழங்கல், நிறுவுதல், செயற்பட வைத்தல் மற்றும் பராமரிப்பு

DOT MATRIX PRINTERS AND PASSBOOK PRINTERS ஐ வழங்குவதற்காக புகழ்வாய்ந்த முதன்மையான தயாரிப்பாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற இலங்கையிலுள்ள உள்ளூர் முகவர்கள் ஆகியோரிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| **பெறுகையின் விளக்கம்** | 1. **Passbook Printers – 300 Nos.**<br>**2. Dot Matrix Printers (350 CPS) – 150 Nos.**<br>**3. Dot Matrix Printers (550 CPS) – 100 Nos.** |
| **பெறுகையின் முறைமை** | தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் |
| **ஏற்புடையதான மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்** | 15,000 ரூபா |
| **சமர்ப்பிக்க வேண்டிய விலைமனு உத்தரவாத பெறுமதி** | விலைமனுக்கோரல் ஆவணத்தின் பிரகாரம் |
| **விலைமனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம்** | 2023.01.24 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |
| **கேள்வியை மூடும் திகதி மற்றும் நேரம்** | 2023.01.25 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |

1. முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது எந்தவொரு கேள்விதாரருக்கு அல்லது பெயர் குறிப்பிட்டவருக்காக அல்லது அவரின் சார்பாக செயற்படுபவர் கேள்விக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னராகவும் கேள்வியை வழங்கிய பின்னரும் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்வது கட்டாயமானதொன்றாகும்.
2. கொழும்பு-03, காலி வீதி, 255 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல் பிரிவின் வழங்கல் முகாமையாளரிடமிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் படிவங்கள் 2022.12.29 ஆம் திகதியிலிருந்து 2023.01.24 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணிக்கும் பி.ப. 3.30 மணி வரைக்குமிடையில் எழுத்து மூலமான கோரிக்கையொன்றின் மூலமாக படிவங்கள் வழங்கப்படும்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் தேசிய சேமிப்பு வங்கியினால் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் மேலே சுட்டிக் காட்டியவாறு கேள்விக்கு உரித்தான பெறுமதிக்கான வங்கி உத்தரவாதம்/ விலைமனு பிணையத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமெனவும் இந்த உத்தரவாதமானது வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதாகவும் ஆகக் குறைந்த கால எல்லையாகிய 120 நாட்காட்டி நாட்களுக்கு கேள்வியை திறக்கும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் குறிப்பிட்டுள்ள திகதியன்று மு.ப. 10 மணிக்கு அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன் மு.ப. 10 மணிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
5. தேசிய சேமிப்பு வங்கியானது எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்குமான உரிமையையும் விலைமனுவொன்றின் பகுதியொன்றையும் எந்தவொரு காரணங்களையும் முன்வைக்காமல் ஏற்றுக் கொள்வதற்குமான உரிமையை கொண்டுள்ளது.

மேலதிக விபரங்களை வழங்கலுக்கான சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர் - கூட்டுரு பெறுகைக் குழு - உயர்மட்டம்,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல.: 255, காலி வீதி, கொழும்பு-03.**

---

## இலங்கை முதலீட்டுச் சபை

# பெறுகை அறிவித்தல்

''2023/ 2024 வருடங்களில் இலங்கை முதலீட்டுச் சபையின் நிரந்தர ஊழியர்கள் மற்றும் ஒப்பந்த ஊழியர்களின் குழும ஆயுள் காப்புறுதி மற்றும் நிரந்தர ஊழியர்களுக்கான மருத்துவக் காப்புறுதி காப்பீடுகளுக்காக சேவை வழங்குநர் ஒருவரைத் தெரிவு செய்தல்'' (குறிப்பீட்டிலக்கம்: BOI/S&S/Q/128/22) விளம்பரம் 2022 டிசம்பர் 29ஆம் திகதிய ''டெய்லி நியூஸ்'' பத்திரிகையிலும் இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணைய தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (www.investsrilanka.com)

ஆர்வம் காட்டும் வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் ''டெய்லி நியூஸ்'' பத்திரிகையிலும் இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணைய தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ள விளம்பரத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. (www.investsrilanka.com)

விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 0112-543041/074-1531432 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

---

### 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி தாபனங்களின் தேர்தல்கள் (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட உள்ளூராட்சி தாபனங்களின் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66 எ ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 66 இ பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் அறிவிப்பு

மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளர் அல்வல தேவகே பிரபாத் இந்திக பிரசன்ன ஆகிய நான், 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி தாபனங்களின் தேர்தல்கள் (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட உள்ளூராட்சி தாபனங்களின் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66 எ ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 66 இ ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க மேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள பேலியகொட நகர சபையில் வெற்றிடமாகி உள்ள துணை தலைவரின் பதவிக்காக புதிதாக துணை தலைவர் ஒருவரினை தெரிவு செய்யும் விடயத்திற்கான கூட்டம் 2023 ஜனவரி மாதம் 12 ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு பேலியகொட நகர சபை, கண்டி வீதி, பேலியகொட என்ற முகவரியில் அமைந்துள்ள பேலியகொட நகர சபைக் கூட்ட மண்டபம் என்ற இடத்தில் கூட்டப்படும் என்பதனை இங்கு அறிவிக்கின்றேன்.

**ஏ.டீ.பீ.ஐ. பிரசன்ன**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**மேல் மாகாணம்.**

**2022 டிசம்பர் மாதம் 29 ஆந் திகதி**
**பத்தரமுல்லை, இல 204 இல்,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள,**
**மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி திணைக்களத்தில்.**

---

# திருத்தம்

எனது இலக்கம் : DIV/MW/LND/3/1/2/31

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் இலக்கம் :- 4-3/9/2014/WS/27

### காணி எடுத்தற் சட்டத்தின் (460ஆம் அத்தியாயம்) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உப அட்டவணையில் உள்ள காணியை அரசாங்கத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து 2018-10-11ஆம் திகதியின் 2092/60ஆம் இலக்கம் கொண்ட ஸ்ரீ லங்கா ஜனநாயக சோஷலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானியை பார்க்கவும்.

**உப அட்டவணை**

1. மாகாணம் : வடமேல்
2. மாவட்டம் : குருநாகல்
3. பிரதேச செயலாளர் பிரிவு : மாவத்தகம
4. கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவு : இலக்கம் 675, கொட்டிகாபொல
5. கிராமம் : கொட்டிகாபொல
6. பிரதான வரைபட இலக்கம் : கு. 2377
7. காணியின் பெயர் : பிடகந்த வத்த
8. முழு காணியின் அளவு : 0.0228 ஹெக்டயார்

(2018.12.08 திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலில் காணியின் அளவு 0.0409 என குறிப்பிடப்பட்டிருப்பினும் அது 0.0228 ஹெக்டயார் என திருத்தப்பட வேண்டும்.)

**எம்.எஸ். ஜானக,**
**பிரதேச செயலாளர்,**
**மாவத்தகம.**
2022.12.20

---

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

---

## விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

# பெறுகை அறிவித்தல்

### விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் தங்கும் விடுதிகளின் உணவுத் தேவைப்பாடுகள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஏனைய சகல உணவுத் தேவைப்பாடுகளுக்கு வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விலைமனுக்கோரல் - 2023

கொழும்பு - 07, பிலிப் குணவர்தன மாவத்தை, 09ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்குரிய தங்கும் விடுதிகளின் சமையலறைக்காக 01 முதல் 10 வரை பின்வரும் வகுதிகளின் கீழ் தேவையான உணவுப் பொருட்களை வழங்குவதற்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. அரிசி வகைகள்
2. தானிய வகைகள்
3. பலசரக்குப் பொருட்கள்
4. குரோசரிப் பொருட்கள் - (உணவுப் பொருட்கள்)
5. குரோசரிப் பொருட்கள் - (உணவுப் பொருட்கள் அல்லாதவை)
6. யோகட் மற்றும் பால் சார்ந்த உற்பத்திகள்
7. கருவாடு
8. இறைச்சி வகைகள் மற்றும் முட்டைகள் மற்றும் மீன்கள்
9. மரக்கறிகள்
10. பழவகைகள்
11. பேக்கரி உற்பத்திகள்
12. எரிவாயு - லிட்ரோ

02) இந்த ஒப்பந்தத்தை வழங்குவதற்குத் தகைமை பெறுவதற்கான வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர்கள் பட்டியல்படுத்தப்படாதவர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் உணவுப் பொருள் உற்பத்தி / வழங்குதல் தொடர்பில் வியாபாரப் பதிவு மற்றும் கம்பனிகள் பதிவுச் சட்டத்தின் கீழ் செல்லுபடியாகும் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். மேலும் உணவுப் பொருட்கள் வழங்குதல் தொடர்பில் இரண்டு (02) வருட அனுபவம் மற்றும் திருப்திகரமான சேவையை வழங்கியமையை உறுதி செய்வதற்கான ஆவணங்களின் பிரதிகளை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் கட்டளை வழங்கப்பட்டு 24 மணித்தியாலங்களுக்குள் உணவுப் பொருட்களை விடுதிகளின் சமையலறைக்குக் கொண்டு வந்து வழங்கக்கூடிய இயலுமை கொண்டவர்களாகவிருத்தல் வேண்டும்.

03) விலைமனுதாரர்கள் மேற்கூறப்பட்ட அனைத்து பொருட்களையும் அல்லது தெரிவு செய்யப்பட்ட வகுதியொன்றுக்காக மட்டும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் வகுதி மற்றும் வகுதிகளில் உள்ளடங்கியுள்ள சகல பொருட்களுக்காகவும் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04) விளையாட்டுத்துறை அமைச்சின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் கணக்குப் பிரிவின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத 5,000.00 ரூபா தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பெறுகைப் பிரிவிற்குச் சமர்ப்பித்ததன் பின் 2022-12-29ஆம் திகதி முதல் 2023-01-19ஆம் திகதி வரையான (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை) அலுவலக நாட்களில் இயைபுடைய பெறுகை ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். 0112694566 அல்லது 01122677660 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாக மேலதிகத் தகவல்களைப் விசாரித்தறியலாம்.

05) சகல விலைமனுதாரர்களும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வர்த்தக வங்கியிலும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளரின் பெயரில் பெற்றுக்கொண்ட விலைமனுப் காப்பொன்றை (பிணை முறியொன்றை) பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பெறுமதியின் பிரகாரம் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். இந்தப் பிணை முறி 2023-05-21ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

06) ஒவ்வொரு உருப்படியின் பொருட்டும் அங்கீகரிக்கப்பட்ட விலையை விட 10% சந்தை விலை அதிகரிக்கும் வேளையில் அல்லது குறையும் வேளையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசின் பேரில் பெறுகைக் குழுவின் அனுமதியின் பிரகாரம் 02 மாதங்களுக்கு ஒரு முறை விலைகள் தொடர்பான இணக்கப்பாடொன்றுக்கு வரலாம். (Central Bank Daily Price index, Department of Censes and Statistic Daily Price index, Colombo Consumer Price index, Peliyagoda Fish Market & Peliyagoda Maning Market Prices, Super market prices)

07) சந்தை விலை ஏற்ற இறக்கத்திற்கு அமைவாகச் சமர்ப்பிக்கப்படும் சகல விலைகளும் விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 60 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும். (மேற்கூறப்பட்ட 06ஆம் இலக்கத்தின் பிரகாரம் விலைமனுக்கள் திருத்தப்பட்டால் அது விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 60 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்)

08) உரிய மாதிரிப் படிவத்தில் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை ''மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி'' என இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். இந்த விலைமனுக்களை 2023-01-20ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் '' DSD/P/3/Suppliers for Hostel & Other 2023'' மற்றும் ''விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் தங்கும் விடுதிகளின் உணவுத் தேவைப்பாடுகள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஏனைய சகல உணவுத் தேவைப்பாடுகளுக்கு வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விலைமனுக்கோரல் - 2023'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

- பதிவுத் தபாலில் அனுப்பப்படும் விலைமனுக்களை பணிப்பாளர் நாயகம், விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு - 07 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
- நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கப்படும் விலைமனுக்களை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையினுள் இட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பெறுகைக்கான பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

09) விலைமனுக்கள் 2023-01-20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் அன்றைய தினம் நீங்கள் அல்லது உங்களது பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

| ஒப்பந்த இலக்கம் | விபரங்கள் | விலைமனுப் பிணை (முறி) |
|---|---|---|
| DSD/P/3/ Suppliers for Hostel & Other 2023 | விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் தங்கும் விடுதிகளின் உணவுத் தேவைப்பாடுகள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஏனைய சகல உணவுத் தேவைப்பாடுகளுக்கு வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விலைமனுக்கோரல் - 2023 | 1. அரிசி - ரூபா 139,000.00<br>2. தானிய வகைகள் - ரூபா 90,000.00<br>3. பலசரக்குப் பொருட்கள் - ரூபா 54,000.00<br>4. குரோசரிப் பொருட்கள் (உணவுப் பொருட்கள்) - ரூபா 419,000.00<br>5. குரோசரிப் பொருட்கள் (உணவு பொருட்கள் அல்லாதவை) - ரூபா 74,000.00<br>6. யோகட் மற்றும் பால் உற்பத்திகள் - ரூபா 203,000.00<br>7. இறைச்சி மற்றும் முட்டை, மீன் - ரூபா 676,000.00<br>8. கருவாடு வகைகள் - ரூபா 23,000.00<br>9. மரக்கறி - ரூபா 187,000.00<br>10. பழவகைகள் - ரூபா 420,000.00<br>11. பேக்கரி உற்பத்திகள் - ரூபா 305,000.00<br>12. எரிவாயு - லிட்ரோ 37.5 கி.கிராம். - ரூபா 53,000.00 |

**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்,**
**இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு-07.**
**தொலைபேசி : 0112-697934 தொலைநகல் : 0112-695822**

---

# பெறுகை அறிவித்தல்

## களனி பல்கலைக்கழகம்

மேற்படி தலைப்பு சம்பந்தமாக 2022.12.12ம் திகதி திங்கட்கிழமை டெயிலி நியூஸ், தினமின மற்றும் தினகரன் பத்திரிகைகளில் பிரசுரமான அறிவித்தல் பற்றியது.

அங்கு குறிப்பிடப்பட்ட அட்டவணையில் கேள்விக்கு முன்னரான பிணைமுறி பெறுமதி கீழ்க்காணுமாறு மாற்றப்படல் வேண்டும் என்பதனை தயவு கூர்ந்து கவனிக்கவும்.

இந்த அறிவித்தல் சம்பந்தமான ஏனைய விபரங்கள் முன் இருந்தவாறே மாற்றமின்றி காணப்படும்.

| உருப்படி இல. | ஒப்பந்த இலக்கம் | பெயர் | மதிப்பிடப் பட்ட வேலையின் பெறுமதி | கேளவிக்கு முன்னரான பிணைமுறி பெறுமதி | CIDA பதிவு | ஆவணக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | UK/GA/GA3/ 2022/65 | Relocating of Office Space - MBA, University of Kelaniya | 8,000,000.00 | LKR 80,000.00 | SP 4, C7 & C6 | 3,000.00 |

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**தளுகம, களனி.**
2022.12.29

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை போக்குவரத்து சபை (இபோச)

# எஞ்சின் எண்ணெயின் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்

**PROCUREMENT No.: SLTB/TS/GEN/Lubricant Oil/2022**

1. இபோச இற்கு எஞ்சின் எண்ணெயை வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்காக தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் 2023.01.19 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணி வரையும் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இபோச பெறுகைக் குழுத் தலைவர் பெற்றுக் கொள்வார். கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை பெறுகைக் குழுவின் செயலாளரின் அலுவலகத்திலுள்ள விதிக்கப்பட்ட படிவத்திலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (தொலைபேசி: 0771056110, 011 7706110, தொலைபேசி/தொலைநகல்: 011 2588457). விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2022.12.29 ஆம் திகதியிலிருந்து 2023.01.18 ஆம் திகதியன்று வரையும் சாதாரண வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணமாக 20,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும்.

| விளக்கம் | விலைமனுப்பிணை (ரூபாவில்) |
|---|---|
| ஆகக் குறைந்தது 30 நாட்கள் கடன் அடிப்படையில் 03 மாதங்களுக்கு எஞ்சின் எண்ணெயை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல். | 1,500.000/- |

2. உற்பத்தியாளர்கள் அல்லது ஏகநியமனம் பெற்ற உராய்வு நீக்கி எண்ணெய் மற்றும் கிறீஸ் ஆகியவற்றின் உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகள்/ தரஅங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மாத்திரமே இந்த விலைமனுவில் பங்கேற்றுவதற்கான தகுதியை பெற்றுக் கொள்வர்.
3. விலைமனுக்கள் 2023.04.20 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். இருப்பினும், ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதிலிருந்து ஐந்து (5) மாதங்களுக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட விலைகள் நிலையாகவிருத்தல் வேண்டும்.
4. மேலே குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கான விலைமனுப்பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருப்பதுடன் 2023.05.20 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதுடன் மாற்ற இயலாததாகவும் இ.போ.ச. இன் முதலாவதான எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் நிபந்தனையற்ற வகையில் ரொக்கப் பணத்தில் மாற்றக் கூடிய தன்மையிலிருப்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்காற்றல் ஆணைக்குழுவுடன் பதிவு பெற்ற காப்புறுதி முகவராண்மையொன்றினால் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலில்லாத எந்தவொரு விலைமனுப்பிணையும் நிராகரிக்கப்படும்.
5. (அ) எந்தவொரு விலைமனுதாரருக்கும் முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக அல்லது அவரது சார்பாக செயற்படும் எந்தவொரு நபரும் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னதாக இலங்கை பொதுஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதியானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான மூலப்பிரதி சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் அவ்வாறான விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

   (ஆ) 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொதுஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் விலைமனுக்களை சமர்ப்பித்த பின்னர் உடனடியாகவும் பெறுகையை வழங்குவதற்கு முன்னராகவும் விலைமனுக்களை விலைமனுதாரர்கள் பதிவு செய்தல் வேண்டும். உரித்தான பெறுகை குழுவிற்கு பொதுஒப்பந்தங்களின் பிரகாரம் பதிவுச் சான்றிதழை அவ்வாறான விலைமனுதாரர் சமர்ப்பிக்காவிடின், பெறுகையானது எந்தவொரு விலைமனுதாரருக்கும் வழங்கப்படமாட்டாது.
6. விலைமனு ஆவணத்தின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது பெயர் முத்திரைபதிக்கப்படல் வேண்டும்.
7. 2023.1.19 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் கொழும்பு-05, கிருளவீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைக் குழு செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள முத்திரையிடப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் **"Bid for the Supply & Delivery of Engine Oil"** என குறிப்பிடப்படல் வேண்டும்.
8. கொழும்பு-05, கிருளவீதி, 200 ஆம் இலக்கத்தின் இபோச பெறுகை குழு செயலாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**இபோச பெறுகைக் குழு,**
**பெறுகைப் பிரிவு,**
**இல. 200,கிருளவீதி, கொழும்பு-05.**

**விசாரணைகள்:** **செயலாளர், இபோச பெறுகைக் குழு.**
**தொலைபேசி: 011-7706110, 0771056110. தொலைபேசி/ தொலைநகல்: 011-2588457**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை போக்குவரத்து சபை (இ.போ.ச)

# BID FOR THE SUPPLY & DELIVERY OF AUTO SPRAY/ ENAMEL PAINTS & OTHER RELATED MATERIALS

**(SLTB/TS/GEN/04/2023)**

1. Auto Spray/Enamel Paints & other related materials ஐ வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்காக உற்பத்தியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களின் தரஅங்கீகாரம் பெற்ற முகவர்களிடமிருந்து தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் 2023.01.20 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணி வரையும் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இபோச பெறுகைக் குழுத் தலைவர் பெற்றுக் கொள்வார். கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை பெறுகைக் குழுவின் செயலாளரின் அலுவலகத்திலுள்ள விதிக்கப்பட்ட படிவத்திலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2022.12.29 ஆம் திகதியிலிருந்து 2023.01.19 ஆம் திகதியன்று வரையும் சாதாரண வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணமாக 12,500 ரூபாவைச் செலுத்திய பின்னர், விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும்.

| விளக்கம் | விலைமனுப்பிணை (ரூபாவில்) |
|---|---|
| Supply & Delivery of Auto Spray/Enamel Paints & other related materials | 1,000,000 |

2. விலைமனுக்கள் 2023.04.21 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். இருப்பினும், ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதிலிருந்து ஒரு (1) வருட காலப்பகுதிக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட விலைகள் நிலையாகவிருத்தல் வேண்டும்.
3. மேலே குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கான விலைமனுப்பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருப்பதுடன் 2023.05.21 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதுடன் மாற்ற இயலாததாகவும் இ.போ.ச. இன் முதலாவதான எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் நிபந்தனையற்ற வகையில் ரொக்கப் பணத்தில் மாற்றக் கூடிய தன்மையிலிருப்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்காற்றல் ஆணைக்குழுவுடன் பதிவு பெற்ற காப்புறுதி முகவராண்மையொன்றினால் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலில்லாத எந்தவொரு விலைமனுப்பிணையும் நிராகரிக்கப்படும்.
4. (அ) எந்தவொரு விலைமனுதாரருக்கும் முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக அல்லது அவரது சார்பாக செயற்படும் எந்தவொரு நபரும் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னதாக இலங்கை பொதுஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதியானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான மூலப்பிரதி சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் அவ்வாறான விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

   (ஆ) 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொதுஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் விலைமனுக்களை சமர்ப்பித்த பின்னர் உடனடியாகவும் பெறுகையை வழங்குவதற்கு முன்னராகவும் விலைமனுக்களை விலைமனுதாரர்கள் பதிவு செய்தல் வேண்டும். உரித்தான பெறுகை குழுவிற்கு பொதுஒப்பந்தங்களின் பிரகாரம் பதிவுச் சான்றிதழை அவ்வாறான விலைமனுதாரர் சமர்ப்பிக்காவிடின், பெறுகையானது எந்தவொரு விலைமனுதாரருக்கும் வழங்கப்படமாட்டாது.
5. விலைமனு ஆவணத்தின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது பெயர் முத்திரை பதிக்கப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் இலங்கை போக்குவரத்து சபை பெறுகைக் குழு செயலாளரின் அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் மேலேயுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள முத்திரையிடப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் **"Supply & Delivery of Auto Spray/Enamel Paints & other related materials"** எனகுறிப்பிடப்படல் வேண்டும்.
7. கொழும்பு-05, கிருளவீதி, 200 ஆம் இலக்கத்தின் இலங்கை போக்குவரத்து சபை பெறுகை பிரிவில் 2023.01.20 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**இபோச பெறுகைக் குழு,**
**இலங்கை போக்குவரத்து சபை,**
**இல. 200, கிருள வீதி, கொழும்பு-05.**

**விசாரணைகள் :** **செயலாளர், இபோச பெறுகைக் குழு.**
**தொலைபேசி: 011 7706110, 0771056110. தொலைபேசி/ தொலைநகல்:011 2588457**

**பின்வருவனவற்றையும் தயவு செய்து கவனித்துக் கொள்ளவும்.**
இபோச இன் அனைத்து பெறுகை செயற்பாடுகளின் தகவலுக்கும் தயவு செய்து **https://sltb.lk and to https://promise.lk** என்பனவற்றையும் பார்வையிடவும்.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk

## நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

# பெறுகை அறிவித்தல்

## நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சில் சிற்றுண்டிச்சாலை நடாத்திச் செல்வதற்கான விலைமனு கோரல்

**ஒப்பந்த இலக்கம் MF/0623 /32/2022**

லோட்டஸ் வீதி, கொழும்பு 01இல் அமைந்துள்ள நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் சிற்றுண்டிச்சாலையை 2023/2024 ஆண்டுக்காக நடாத்திச் செல்லும் பொருட்கள் தகைமையுள்ள நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. இதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க விரும்பினால், 2022.12.29 முதல் 2023.01.18ஆம் திகதி வரையிலான வேலை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் பெயரில் கணக்காளருக்கு (கொடுப்பனவு) எழுத்துப்பூர்வ கோரிக்கையைச் சமர்ப்பித்ததன் பின்னர், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் புதிய கட்டிடத்தின் மேல் தள மாடியில் அமைந்துள்ள கணக்குப் பிரிவில் திருப்பிச் செலுத்தப்படாத ரூபா 2,500.00 தொகையை நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் சிறாப்பரிடம் செலுத்தி ஏல ஆவணங்களைப் பெறலாம். மேலும், நீங்கள் ஏல ஆவணங்களை இலவசமாகச் சரிபார்க்க விரும்பினால், மேலே உள்ள நேரங்கள் மற்றும் திகதிகளில் அதனைச் சரிபார்க்கலாம்.

03. விலைமனுதாரர்களுக்கான தகைமைகள்

    I. குறைந்தபட்சம் 03 வருடங்கள் அரசு அல்லது அரசு சார்ந்த நிறுவனங்களில் சிற்றுண்டிச்சாலைகளை நடத்தியிருக்க வேண்டிய அதே வேளையில் அனுபவச் சான்றிதழ்கள் மூலம் அது நிரூபிக்கப்பட வேண்டும்.

    II. உணவு விநியோகம், சிற்றுண்டிச்சாலைகள் தொடர்பான வியாபாரங்களை நடத்துவதற்கு வழங்கப்படும் வணிகப் பெயர் பதிவு சான்றிதழ்.

    III. உணவு தயாரிப்பவர்களின் தகுதிச் சான்றிதழும், உணவு பரிமாறுபவர்களின் தகுதிச் சான்றிதழும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

    IV. அரசு நிறுவனங்கள் மூலம் தடுப்புப்பட்டியலில் உள்ள வழங்குநர்களுடன்/ ஒப்பந்தக்காரர்களுடன் ஒப்பந்தங்களில் ஈடுபடலாகாது. ஏலம் எடுப்பவர் தான் தடுப்பு பட்டியலில் இல்லை என்று எழுத்துப்பூர்வமாக அறிவிக்க வேண்டும்.

    V. அனைத்து ஏலதாரர்களும் செயலாளர், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பெயரில் 2023.03.14 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் ஏல அறிவிப்பை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. முத்திரையிடப்பட்ட விலை மனுக்களை "மூலப்பிரதி" மற்றும் "நகல் பிரவி" என இரண்டு பிரதிகளை கொண்டதாக தனித்தனியாக முத்திரையிட்டு 2023.01.19 ஆம் திகதியன்று பி.ப. 02.00 மணிக்கு முன்னதாக, பிரதான கணக்காளர், கணக்குப் பிரிவு, நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, மேல் தளம், புதிய கட்டிடம், லோட்டஸ் வீதி, கொழும்பு 01 எனும் முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்புவதற்கு அல்லது மேல் தள மாடியில் அமைந்துள்ள கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியிலிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், "நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சில் சிற்றுண்டிச்சாலை 2023/2024 ஆண்டுக்காக நடாத்திச் செல்வதற்கான விலைமனுக்கள்" என்று எழுதப்பட வேண்டும்.

05. விலை மனுக்கள் 2023.01.19 ஆம் திகதியன்று பி.ப. 02.00 மணிக்கு திறக்கப்படுகின்ற அதே வேளையில், அன்றைய தினத்தில் உரிய நேரத்திற்கு உங்களுக்கு அல்லது உங்கள் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு கலந்து கொள்ள முடியும். தாமதமாக கிடைக்கின்ற விலை மனுக்கள் நிராகரிக்கப்படும்.

06. விலை மனுக்களுக்கு முன்னரான கூட்டம் 2023.01.10 ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் நிதி பிரிவில் இடம்பெறும். விலை மனுக்களுக்கு முன்னரான கூட்டம் முடிவடைந்ததன் பின்னர் சிற்றுண்டிச்சாலை வளவைப் பார்வையிட முடியும்.

07. சிற்றுண்டிச் சாலைக்கு தேவையான மேசைகள் மற்றும் கதிரைகளும், நீர், மின்சாரம் மற்றும் ஏனைய உபகரணங்கள் போன்ற வசதிகளும் இந்த அமைச்சினால் வழங்கப்படுகின்ற அதே வேளையில் சிற்றுண்டிச்சாலை வளவைப் பார்வையிட்டதன் பின்னர் விலை மனுக்களை சமர்ப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களை கணக்காளரிடம் (வழங்கல்) (தொலைபேசி இலக்கம் 0112484538) பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்,**
**அமைச்சின் சிறியளவிலான பெறுகைக் குழு,**
**நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு**
**செயலகம்,**
**கொழும்பு 01.**
**தொ.பே. 0112484600**

## இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்

## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரித்தல் மற்றும் முகாமைத்துவப் பிரிவிற்கு பாதுகாப்பு சேவை வழங்குவதற்கான விலைமனு கோரல்

01. வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரித்தல் மற்றும் முகாமைத்துவப் பிரிவின் (நெ.செ.பரா. மற்றும் மு.) பெறுகைக் குழுவின் தலைவரினால், அப்பிரிவின் பின்வரும் செயற்றிட்டங்களுக்கு பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு சேவை வழங்கும் தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இல | செயற்றிட்டத்தின் பெயர் | சேவை வழங்க வேண்டிய இடங்கள் | ஒப்பந்த காலம் (நாட்கள்) | விலைமனுப் பிணை முறித் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| RDA/ EOM&M/ Sec-Ser/ OCH, CKE / 2022/60 | அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரித்தல் மற்றும் முகாமைத்துவப் பிரிவிற்கு பாதுகாப்பு சேவையை வழங்குதல் - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை மற்றும் வெளிச் சுற்றுவட்ட அதிவேக நெடுஞ்சாலை | சீதுவ, ஜா-எல, பேலியகொட வேலை முற்றவெளி K-2, தொரண சந்தியிலுள்ள பாவனையாளர் சேவை நிலையம், புதிய களனி பால செயற்றிட்டம், கெரவலப் பிட்டிய, கடவத்தை மற்றும் கடுவளை பராமரிப்பு பிரிவு | 365 | 200,000.00 |

02. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நெ.செ.பரா.மற்றும் முகாமைத்துவப் பிரிவின் செயற்பாட்டு முகவராகும்.
03. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்
04. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகைமைக்காக, விலைமனுதாரர் இவ்வாறான மற்றும் நிகரான எண்ணிக்கையான அளவில் தொழிலாளர்களை வழங்குவதில் அனுபவமுடையவர்களாக இருத்தல் வேண்டும்
05. விலைமனுக்களின் சமர்ப்பித்தலின் இறுதித் திகதியிலிருந்து 91 (2023-04-21) நாட்காட்டி நாட்கள் வரை விலைமனுக்கள் செல்லுபடியாகும் வகையிலிருத்தல் வேண்டும்.
06. விலைமனுக்கள் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணை முறியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (2023-05-19 வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்) குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைமுறியுடன் இணைக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. அனைத்து விலைமனுக்கோரல் ஆவண பக்கங்களும் விலைமனுதாரரினால் கையொப்பமிட்டு இறப்பர் முத்திரையிடப்படல் வேண்டும்.
08. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2023-01-12ஆம் திகதி பி.ப. 1.45 மணிக்கு பிரதிப் பணிப்பாளர் அலுவலகம், சீதுவ என்ற இடங்களிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரித்தான அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ அமைப்பின் பெறுகைப் பிரிவு அலுவலகத்தில் இடம்பெறும். இதில் கலந்துகொள்வது கட்டாயம் என்பதுடன் அவ்வாறல்லாவிட்டால் அந்த நிறுவனத்தின் விலைமனு இரத்துச் செய்யப்படுவதற்கோ அல்லது தகைமையற்றதாக்கப்படுவதற்கு இடமுண்டு.
09. இது தொடர்பில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை ஒரு விலைமனுவுக்கு மீளளிக்கப்படாத 6,000.00 + 1,077.00 ரூபா (சகல வரிகள் சகிதம்) கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்தியும் மற்றும் எழுத்துருவிலான விண்ணப்பமொன்றை கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற இடத்திலமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரித்தான அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு. பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ அமைப்பின் பணிப்பாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பதன் மூலம் 2022-12-29ஆம் திகதி முதல் 2023-01-19ஆம் திகதி வரையும் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 2.00 மணிவரையும் கொள்வனவு செய்யலாம். 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் முகவர் / பிரதிநிதி மற்றும் சித்திகரமான கேள்விதாரர் கம்பனி பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். 2023-01-20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நிகழ்வு நிறைவுறும்.
10. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் (இரு பிரதிகளில்) 2023-01-20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், அதிவேக நெடுஞ்சாலைகள் செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைக்குழு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, அதிவேக நெடுஞ்சாலைகள் செயற்பாடு மற்றும் முகாமைத்துவ அமைப்பு, கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அடக்கப்பட்டுள்ள உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பாதுகாப்புச் சேவை வழங்குதல் - கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை, வெளிச்சுற்று அதிவேக நெடுஞ்சாலையின் பகுதி'' எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.
11. கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம எனும் இடத்தில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நெ.செ.பரா. மற்றும் முகாமைத்துவப்பிரிவின் செயற்பாட்டு பிரிவின் பணிப்பாளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் பெற்றுக்கொள்ளும் நிகழ்வு முடிந்தவுடன் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
12. மேலதிக விபரங்களுக்கான தொலைபேசி எண்கள் பின்வருமாறு.

    ➢ **பொறியியலாளர் - (பராமரிப்பு - அ.நெ.செ.ப. மற்றும் மு. பிரிவு)**
    **வீதி அபிவிருத்தி அதிகார சபை. தொலைபேசி 011 3047806**

**தலைவர்**
**அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் பெறுகைக்குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம.**

# இலங்கை தொடருக்கான இந்திய குழாம் அறிவிப்பு



இலங்கைக்கு எதிரான ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளுக்கான இந்திய அணிகளை அந்நாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அறிவித்துள்ளது.

இதில் சகலதுறை வீரர் ஹார்திக் பண்டியா மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 அணிக்கு தலைவராகவும் சூர்யகுமார் யாதவ் உப தலைவராகவும் நியமிக்கப்பட்டிருப்பதோடு மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடருக்கு ரோஹித் ஷர்மா தலைவராக செயற்படவுள்ளார்.

பங்களாதேஷுக்கு எதிரான தொடரில் சோபிக்கத் தவறிய ஷிகர் தவான் ஒருநாள் அணியில் சேர்க்கப்படவில்லை. விராட் கொஹ்லிக்கு டி20 தொடரில் ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் தொடரில் விடுவிக்கப்பட்டு டெஸ்ட் தொடருக்காக அழைக்கப்பட்டிருந்த ரிஷாப் பாண்ட் ஒருநாள் மற்றும் டி20 இரு அணிகளிலும் சேர்க்கப்படவில்லை.

இந்தியா செல்லும் இலங்கை அணி முதலில் மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடரில் ஆட விருப்பதோடு தொடர்ந்து ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது. இந்தப் போட்டிகள் வரும் ஜனவரி 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

**டி20 குழாம்:** ஹார்திக் பாண்டியா (தலைவர்), சுப்மான் கில், சூர்யகுமார் யாதவ், இசான் கிஷன், வொசிங்டன் சுந்தர், யுஸ்வேந்திர சஹால், அக்ஸர் பட்டேல், உம்ரான் மலிக், அர்ஷ்டீப் சிங், ருத்ராஜ் கைக்வட், தீபக் ஹூடா, ராஹுல் திருப்பாதி, சஞ்சு சம்சன், ஹர்ஷல் பட்டேல், சிவம் மாவி, முகேஷ் குமார்.

**ஒருநாள் குழாம்:** ரோஹித் ஷர்மா (தலைவர்), ஹார்திக் பாண்டியா, விராட் கொஹ்லி, கே.எல். ராஹுல், சிரேயாஸ் ஐயர், சுப்மான் கில், சூர்யகுமார் யாதவ், இசான் கிஷன், வொசிங்டன் சுந்தர், யுஸ்வேந்திர சஹால், அக்ஸர் பட்டேல், உம்ரான் மலிக், அர்ஷ்டீப் சிங், மொஹமட் சமி, மொஹமட் சிராஜ், குல்தீப் யாதவ்.

# இந்தியா செல்லும் இலங்கை குழாத்தில் மெண்டிஸ், ஹசரங்கவுக்கு புதிய பதவி



இந்திய சுற்றுப்பயணத்திற்காக 20 பேர் கொண்ட உத்தியோகபூர்வ இலங்கைக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருந்த இந்த குழாத்துக்கு விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க அனுமதி அளித்துள்ளார்.

தசுன் ஷானக்க தலைமையிலான இலங்கைக் குழாத்தில் ஒருநாள் அணியில் குசல் மெண்டிஸ் உப தலைவராக அறிவிக்கப்பட்டிருப்பதோடு டி20 இல் உப தலைவர் பதவி வனிந்து ஹசரங்கவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை பானுக்க ராஜபக்ஷ மற்றும் நுவன் துஷார மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 குழாத்தில் மாத்திரம் இடம்பெற்றிருப்பதோடு ஜெப்ரி வன்டர்சே மற்றும் நுவனிந்து பெர்னாண்டோ ஒருநாள் தொடரில் மாத்திரம் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவிஷ்க பெர்னாண்டோ உபாதைக்கு பின்னர் அணிக்குள் முதன் முறையாக இணைக்கப்பட்டுள்ளதுடன், சதீர சமரவிக்ரம கடந்த ஆண்டு நடைபெற்ற இந்திய தொடரையடுத்து மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார்.

வரும் டிசம்பர் 31ஆம் திகதி இந்தியா சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை அணி இந்தியாவுக்கு எதிராக வரும் ஜனவரி 3ஆம் திகதி தொடக்கம் மூன்று டி20 போட்டிகளில் ஆடவுள்ளது.

அதனைத் தொடர்ந்து இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் ஜனவரி 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதற்காக ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டிருந்த உத்தேச அணி கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்தில் பயிற்சிகளை ஆரம்பித்துள்ளது.

**இலங்கை குழாம்:** தசுன் ஷானக்க (தலைவர்), பத்தும் நிசங்க, அவிஷ்க பெர்னாண்டோ, சதீர சமரவிக்ரம, குசல் மெண்டி, பானுக ராஜபக்ஷ, சரித் அசலங்க, தனன்ஜய டி சில்வா, வனிந்து ஹஸரங்க, அஷேன் பண்டார, மஹீஷ் தீக்ஷன, ஜெப்ரி வெண்டர்சே, சாமிக்க கருணாரத்ன, டில்ஷான் மதுசங்க, கசுன் ராஜித, நுவனிந்து பெர்னாண்டோ, துனித் வெல்லாலகே, பிரமோத் மதுசான், லஹிரு குமார, நுவன் துஷார.

# எஸ்.கே.எஸ்.ஏ 22 பதக்கம்



ஜப்பான் சொடகன் கராத்தே சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஒன்பதாவது வருடாந்த சர்வதேச திறந்த கராத்தே சம்பியன்சிப் போட்டியில் எஸ்.கே.எஸ்.ஏ சிறீ லங்கா கிளை மாணவர்கள் எட்டு தங்கம் உட்பட மொத்தம் 22 பதக்கங்களை வென்றுள்ளனர்.

பண்டாரகம உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் சுமார் 800 போட்டியாளர்கள் கலந்துகொண்டனர். இந்த சுற்றுப் போட்டியின் சிறந்த பயிற்றுவிப்பாளருக்கான விருதை எஸ்.கே.எஸ்.ஏ இன் மர்ஜான் ஹரீர் வென்றார்.

# தோல்வியை தவிர்க்க தென்னாபிரிக்கா போராட்டம்



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க போராடி வருகிறது.

மெல்போர்னில் நடைபெற்று வரும் அந்த டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாளான நேற்று முதல் இன்னிங்ஸில் 386 ஓட்டங்களால் பின்தங்கிய தென்னாபிரிக்க அணி தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. அந்த அணி ஆட்ட நேர முடிவின் போது 15 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்துள்ளது.

இதன்படி தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க இன்னும் 371 ஓட்டங்களை பெற வேண்டி உள்ளது.

முன்னதாக நேற்று தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த ஆஸி. அணி 8 விக்கெட்டுகளை இழந்து 575 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது. இதில் ஆரம்ப வீரர் டேவிட் வோர்னர் இரட்டைச் சதம் பெற்ற நிலையில் விக்கெட் காப்பாளர் அலெக்ஸ் கரி 111 ஓட்டங்களை குறித்தார்.

## சர்வதேச செய்திகள்

# விலை வரம்பு நிர்ணயித்த நாடுகளுக்கு எண்ணெய் விற்பனைக்கு ரஷ்யா தடை



மேற்கத்திய நாடுகள் இம்மாத ஆரம்பத்தில் நிர்ணயித்த விலை வரம்பை பின்பற்றும் நாடுகள் மற்றும் நிறுவனங்களுக்கு ரஷ்யா எண்ணெய் விற்பனைக்கு தடை விதித்துள்ளது.

ஜி7 நாடுகள், அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் இடையே இணக்கம் எட்டப்பட்ட இந்த எண்ணெய் விலைவரம்பு கடந்த டிசம்பர் 5 ஆம் திகதி அமுலுக்கு வந்தது.

இதன்படி ரஷ்ய எண்ணெய் பீப்பாய் ஒன்றுக்கு தலா 60 டொலருக்கு மேல் செலுத்துவதற்கு இந்த விலைவரம்பில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இந்நிலையில் இந்த விலை வரம்பை செயற்படுத்தும் எந்த ஒரு நாட்டுக்கும் எண்ணெய் மற்றும் எண்ணெய் உற்பத்திகள் விற்கப்படமாட்டாது என்று ரஷ்யா அறிவித்துள்ளது.

வரும் பெப்ரவரி 1ஆம் திகதி தொடக்கம் ஜுலை 1ஆம் திகதி வரை ஐந்து மாதங்களுக்கு இந்தத் தடை அமுலில் இருக்கும் என்று ஜனாதிபதியின் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இந்தத் தடைக்கு உட்பட்டிருக்கும் நாடுகளுக்கு ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் சிறப்பு அனுமதியுடன் விநியோகத்தை மேற்கொள்ள முடியும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் எண்ணெய் வருவாயை குறைக்கும் முயற்சியாகவே இந்த விலைவரம்பு கொண்டுவரப்பட்டது. இதில் ஜி7 மற்றும் ஐரோப்பிய ஒன்றிய டாங்கர்கள், காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களை பயன்படுத்தி ரஷ்ய எண்ணெயை வாங்கும்போதும் இந்த விலை வரம்பு அமுல்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்புக்கு பதில் நடவடிக்கையாகவே மேற்கத்திய நாடுகளிடையே இது தொடர்பில் இணக்கம் எட்டப்பட்டது.

எனினும் ஏற்கனவே சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரித்திருக்கும் நிலையில் புதிய தடை அதில் மேலும் பாதிப்பை செலுத்தக் கூடும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

சவூதி அரேபியாவுக்கு அடுத்து உலகின் இரண்டாவது மிகப்பெரிய எண்ணெய் ஏற்றுமதி நாடாக உள்ள ரஷ்யாவின் எண்ணெய் ஏற்றுமதியில் ஏற்படும் இடையூறு சர்வதேச வலுசக்தி விநியோகத்தில் பெரும் தாக்கத்தை செலுத்துவதாக அமையும்.

## பெண்கள் மீதான தடைகள்:

# தலிபான் அரசுக்கு எதிராக பாதுகாப்பு சபை கண்டனம்



ஆப்கானிஸ்தானில் பெண்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஐ.நா பாதுகாப்புச் சபை தலிபான் அரசுக்கு கண்டனம் வெளியிட்டுள்ளது.

பெண்கள் பல்கலைக்கழகம் செல்லத் தடை விதித்த தலிபான்கள் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களில் பணியாற்றுவதற்கும் பெண்களுக்கு கடந்த வாரம் தடை விதித்தது.

பெண்கள் கல்விக்கு எதிராக அதிகரிக்கும் கட்டுப்பாடுகள் ஆழ்ந்த கவலை அளிப்பதாக உள்ளது என்று 15 உறுப்பு நாடுகளைக் கொண்ட பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது.

தற்போதைய கட்டுப்பாடுகள் அகற்றப்பட வேண்டும் என்று ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் தெரிவித்துள்ளார். புதிய கட்டுப்பாடுகள் நியாயப்படுத்த முடியாத மனித உரிமை மீறல்கள் என்றும் அவர் சாடியுள்ளார்.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை கூடிய பாதுகாப்புச் சபை வெளியிட்ட அறிவிப்பில், ஆப்கானில் பெண்களுக்கு முழுமையான, சமமான மற்றும் அர்த்தபூர்வமான பங்கு அளிக்கப்பட வேண்டும்” என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை மதித்து பாடசாலைகளை மீண்டும் திறக்கும்படியும், இந்தக் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளை உடன் திரும்பப் பெற வேண்டும் என்றும் தலிபான்களுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

தலிபான்களின் தடையை அடுத்து ஆப்கானில் செயற்படும் குறைந்தது ஐந்து அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் ஆப்கானில் தனது பணிகளை ஏற்கனவே நிறுத்திக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவுடன் நியூசி. வர்த்தகத் திட்டம்



பசுபிக் பிராந்தியத்தில் சீனா அதிக உறுதி நிலையை அடைந்துள்ளது என்று நியூசிலாந்து பிரதமர் ஜசின்டா ஆர்டன் தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கு விஜயம் செய்யவிருப்பதற்கான தமது நம்பிக்கையை வெளிப்படுத்திய அவர், அடுத்தாண்டு தொடக்கத்தில் வர்த்தக தூதுக்குழுவொன்றின் பயணத்திட்டம் குறித்தும் ஜனாதிபதி ஷி ஜின்பிங்குடன் கலந்துரையாடியுள்ளார். அத்திட்டத்தை சீன ஜனாதிபதி வரவேற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அசோசியேட்டட் பிரஸ் மற்றும் அவுஸ்திரேலியன் அசோசியேட்டட் பிரஸ் ஆகிய ஊடகங்களுடனான கூட்டு நேர்காணலின் போது இவ்வாறு கூறிய அவர், ஜனாதிபதி ஷி ஜின்பிங்கின் தலைமையில் சமீபத்திய ஆண்டுகளில் சீனா பெரிதும் முன்னேற்றமடைந்துள்ளது எனவும் கூறியுள்ளார்.

# வெளிநாடு செல்ல சீனர் முண்டியடிப்பு



சீனாவில் பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து சீனக் குடியிருப்பாளர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல விரைகின்றனர்.

சீனாவிலிருந்து வெளிநாட்டுக்குச் செல்லும் பயணங்களுக்கான முன்பதிவுகள் அதிகரித்துள்ளன. அறிவிப்பு வந்தவுடன் 30 நிமிடங்களில் பயண இணையத்தளத்தில் பிரபலச் சுற்றுலாத் தலங்களுக்கான இணையத் தேடல்கள் 10 மடங்கு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பயண முகவர் தளமான கியுனரில் விமானச் சேவைகளுக்கான கோரிக்கைகள் 7 மடங்கு அதிகரித்துள்ளன.

வெளிநாடு செல்ல விரும்பும் சீனர்களுக்கான விசா அனுமதியும் மீண்டும் வழங்கப்படுகிறது. ஆனால் வெளிநாட்டினருக்கு விசா வழங்கும் திட்டத்தைச் சீனா இன்னும் ஆரம்பிக்கவில்லை.


வெளிநாட்டிலிருந்து வருவோர் 5 நாள் கட்டாயம் தனிமைப்படுத்தப்பட வேண்டும் எனும் விதிமுறையைத் தளர்த்துவதாக சீனா இந்த வார ஆரம்பத்தில் அறிவித்திருந்தது.

எனினும் சீனாவில் கொரோனா தொற்று அதிகரித்திருக்கும் நிலையில் அந்நாட்டு பயணிகளுக்கு பல நாடுகளும் கட்டுப்பாடுகளை அதிகரித்துள்ளன. சீன நாட்டவர்களின் பிரதான பயணத் தளமான ஜப்பான், சீனாவில் இருந்து வரும் பயணிகள் கொவிட் இல்லை என்பதை உறுதி செய்யும் சோதனை முடிவை காட்ட வேண்டும் அல்லது ஏழு நாள் தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும் என்று அறிவித்துள்ளது.

கொரோனா தொற்றுக்கு முன்னர் 2019இல் சீனாவில் இருந்து வெளியெறிய சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை 155 மில்லியனாக இருந்த நிலையில் 2020இல் அது 20 மில்லியனாக குறைந்தமை குறிப்பிடத்தக்கது.

சீனாவில் தற்போது ஒமிக்ரோன் வகை கொரோனா தொற்றே அதிகமாகப் பரவி வருகிறது. அது டெல்டா வகை தொற்றைப் போல் தீவிர பாதிப்பு கொண்டதாக இல்லாததால் கட்டுப்பாட்டு விதிகள் தளர்த்தப்பட்டுள்ளதாக சீன அரசு தெரிவித்துள்ளது. கொரோனாவால் தினசரி பாதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கையை வெளியிடுவதையும் சீன தேசிய சுகாதார ஆணையம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் நிறுத்திக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பழைய திறன்பேசிகளில் 'வட்ஸ்அப்' இயங்காது



வட்ஸ்அப் பயன்பாட்டின் தேவை அதிகரித்து வருவதால் பழைய திறன்பேசி வடிவங்களில் டிசம்பர் 31க்குப் பின் வட்ஸ்அப் சேவை நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அடுத்த ஆண்டு தொடக்கம் ஆப்பிள், சம்சுங் மற்றும் ஹுவாவி போன்ற முன்னணி கைபேசிகள் உட்பட 49 திறன்பேசி வடிவங்களில் வட்ஸ்அப் தனது இயக்கத்தை நிறுத்திக்கொள்ளவுள்ளது.

“சாதனங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்ச்சியாக மாற்றத்திற்கு உள்ளாகின்றன. எனவே இயங்குதள முறைகளுக்குள் நாம் செயற்படுகிறோம் மற்றும் அப்டேட்களை வழங்குகிறோம் என்பது தொடர்பில் நாம் தொடர்ச்சியாக மீளாய்வு செய்து வருகிறோம்” என்று வட்ஸ்அப் குறிப்பிட்டுள்ளது. எனவே இந்த பழைய திறன்பேசிகளில் முழுமையாக வட்ஸ்அப் இயங்காமல் போகாது என்றபோதும் அப்டேட்டுகளுக்கு அவை உதவாது.

இதில் ஆப்பிளின் iOS 9 மற்றும் அதற்கு மேல் மற்றும் ஆன்ட்ரொயிட்டின் V4.3 மற்றும் அதற்கு மேல் உள்ள கைபேசிகளில் வட்ஸ்அப் தொடர்ந்து இயங்கும் என்று அது பரிந்துரைத்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 டிசம்பர் மாதம் 29ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.